Koviloor Digital Library

இடைக்கால இலக்கியக் கோவை

35-2



புலவர் வேலவன், எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர், அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை—625021

பண்ணைப் பதிப்பகம்
121, மேலமாசி வீதி, மதுரை 625001

நாவலர் புத்தக நிலையம்,
59-ஏ, மேல ஆவணி மூல வீதி,
மதுரை 625001.
6029

Koviloor Digital Library

முதற்பதிப்பு : நவம்பர், 1978
© தொகுப்பு - ஆசிரியர்

விலை : ரூ. 8.00

அச்சிட்டோர் :
பவானி அச்சகம், மதுரை.
மீனம்பிகை அச்சகம், மதுரை.

Koviloor Digital Library

35-2

முன்னுரை

செந்தமிழ் இலக்கியப் பெருக்கு, சங்க காலத்தில் ஆரூக்த் தோன்றி, இடைக்காலத்தில் பேராருக வளர்ந்து, தற்காலத்தில் புதுவெள்ளமாய்ப் பொங்கி ஓங்கி வருகிறது. இடைக்கால இலக்கியப் பேராற்றிலிருந்து இலக்கிய வகைக்கொன்ருகச் சிலபகுதிகளே இந் நூலுள் தொகுத்துத் தருகிருேம்.

இடைக்கால இலக்கியங்களே பக்தி இலக்கியம், சிற்றிலக் கியம் என இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவற்றுள், பக்தி இலக்கியப் பகுதியைச் சேர்ந்த மூவர் தேவாரங்களும் 'பண்ணை' வெளியீடான 'சைவ இலக்கியக் கோவை' (தொகுப்பாசிரியர் ஆ. விநாயகமூர்த்தி) என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. மாணிக்கவாச கர், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகராழ்வார் ஆகி யோர்தம் பாடல்களில் குறிப்பிட்ட சில வக்திப் பாடல்களும்; பல பட்டடைச் சொக்கநாதர், ஒட்டக்கூத்தர், புகழிக்கூத்தர், சயங் கொண்டார், குமரகுருபரர், அபிராமிபட்டர் ஆகியோர்தம் சிற்றிலக்கி யப் படைப்புக்களில் ஒவ்வொன்றும் இங்கே தொகுத்துத் தந்துள் ளோம். பல்வேறு இலக்கியங்களைத் தொகுத்துத் துய்ப்பதற்கு இந் நூல் இனிதே உதவும் என்பதே இதன் கருத்து.

இத்தொகுப்புநூல் உருவாகத் துணைபுரிந்த நண்பர்கள் திரு. எம். பரமசிவம் எம். ஏ., திரு. அ. விநாயகமூர்த்தி எம். ஏ., எம். ஃபில் ஆகியோர்க்கும், வெளியிட முன்வந்த பண்ணைப் பதிப்பக உரிமை யாளர் திரு. ப. நாராயணன் டி. எப். ஏ, அவர்களுக்கும், குறித்த காலத்தில் சிறப்பாக அச்சிட்டு வழங்கிய பவானி அச்சகத்தார்க்கும், மீனும்பிகை அச்சகத்தார்க்கும் என் நன்றி உரித்தாகுக.

மதுரை
11. 11. 78.

புலவர் வேலவன்

Koviloor Digital Library

பொருளடக்கம்

பகுதி – 1

			பக்கம்
1	மாணிக்க வாசகர்	– திருவெம்பாவை	1
		திருப்பள்ளி எழுச்சி	
2	ஆண்டாள்	– திருப்பாவை	9
3	தொண்டரடிப்பொடியாழ்வார்	– திருப்பள்ளி எழுச்சி	17
4	குலசேகராழ்வார்	– பெருமாள்திருமொழி- 2 பாசுரம்	20
5	பலபட்டடைச் சொக்கநாதர்	– அழகர் கிள்ளை விடுதூது	23
6	ஒட்டக்கூத்தர்	– குலோத்துங்கச் சோழனுலா	40
7	பகழிக்கூத்தர்	– திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்	62

பகுதி - 2

8	சயங்கொண்டார்	– கலிங்கத்துப் பரணி	1
9	குமரகுருபரர்	– மதுரைக்கலம்பகம்	65
10	அபிராமிபட்டர்	– அபிராமி அந்தாதி	89

Koviloor Digital Library

மாணிக்கவாசகர்

சைவத் திருமுறைகளின் வைப்பு முறையில் எட்டாவது திரு முறையாகத் திகழ்வது திருவாசகம். எட்டா இறைவனையும் கிட்டிவரப் பாடிய ஒரு வாசகம்; ஒப்பற்ற வாசகம் இத் திருவாசகம். கல்மனமும் கனிந்துருகச் செய்யும் இத்திருவாசகத்தைப் பாடியவர் மாணிக்க வாசகர். இவர் பாண்டி வள நாட்டினர். தமிழ்வையைக் கரையிலுள்ள ஒருவாத புகழ்மிக்க திருவாத ஊரினர். இவர் 'திருவாதவூரர்' என்றும் அழைக்கப்படுவார். 'ஆளுடைய அடிகள்' என்பதும் இவரையே குறிக்கும்.

இவர் அந்தணர் மரபைச் சார்ந்தவர்; நற்சமய குரவர் நால்வருள் ஒருவர்; கலைபல பயின்றவர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய்ப் பணிபுரிந்தவர். மறைமலை அடிகள் இவரது காலத்தை கி. பி. மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதி என்று ஆய்ந்து கூறியுள்ளார். இன்னும் சிலர் இவரது காலத்தைக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கருதுகின்றனர்.

திருவெம்பாவை

திருவெம்பாவை பாவைப் பாடல்களில் முதன்மை பெற்றது. இந்நூலில் இருபது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவைநோன்பு நோற்பதாகத் திருவண்ணாமலை-யில் மாணிக்கவாசகரால் இந்நூல் பாடப் பெற்றது.

திரு+எம்+பாவை = திருவெம்பாவை. திரு : தெய்வத்தன்மை. எம் : உயிர்த்தன்மை. பாவை : வழிபாட்டிற்கு அமைந்த திருவுருவத்-தன்மை. எனவே, தெய்வத்தன்மை வாய்ந்த திருவருள் எங்களோ இயைந்து இயக்குவதோடு எங்களுக்குச் சிறந்த துணையைத் தேடித் தருவதற்கு நாங்கள் செய்யும் நோன்பினைப் பாவைத் திருவுருவில் நின்று ஏற்றுப் பயன் கொடுக்கிறாள் என்பது திருவெம்பாவை என்பதன் பொருளாகும்.

திருப்பள்ளி எழுச்சி

திருப்பள்ளி எழுச்சி, மாணிக்கவாசகர் திருப்பெருந்துறை என்னும் திருப்பதியில் பாடியது. இது பத்துப்பாடல்களைக் கொண்டது. வைகறையில் இறைவனைத் துயிலுணர்ந்து எழுந்தருளுமாறு உள்ளம் உவந்தூறப் பாடும் பாவைக்குத் திருப்பள்ளி எழுச்சி என்று பெயர். 'தாவில் நல்லிசை' என்ற தொல்காப்பிய நூற்பா, மன்னருக்குப் பாடும் 'துயிலெடைநிலை' பற்றிக் கூறுகிறது. மாணிக்கவாசகர் அக்-கருத்தினை உயர்மடை மாற்றம் செய்து 'திருப்பள்ளி எழுச்சி' என்ற பெயரில் தெய்வத்திற்குப் பாடியுள்ளார். திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டுமே நாட்டுப் புறப்பாடலின் வளர்ச்சிநிலை பெற்றவை.

Koviloor Digital Library

திருவெம்பாவை

(சத்தியை வியந்தது)

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என் னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனுர்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றே
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளாவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணு மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்

Koviloor Digital Library

கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலே நாஎவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனேர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னஎன் ஞமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னேங்கேள் வெவ்வேரும் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாரே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிராஞகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய். 9

Koviloor Digital Library

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணைப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்.
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி நிறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி நிறம்பாடி அந்தமா மாபாடிப்

Koviloor Digital Library

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஒருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள்நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றுற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேருகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடோலோர் எம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

Koviloor Digital Library

எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றென்றுங் காணற்க
இங்குஇப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கெலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈரும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலம் கண்ணும்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்போடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே

Koviloor Digital Library

யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 4

பூதங்கள் தோறும்நின் ருயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னு
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் ருர்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 6

அதுபழச் சுவைஎன அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்

Koviloor Digital Library

பந்தணை விரலியும் நீயும்நன் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருபெருந் துறைஉறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயிர் ஆனாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருபெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

ஆண்டாள்

ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் பெண் பாலார் ஆண்டாள் ஒருவரே. ஆண்டாள், தன் உள்ளப் பேரரசில் பக்தி நெறியினை ஆண்டாள்; கண்ணனையன்றி பிற தெய்வம் வேண்டாள்.

இவர் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வாரின் மகளாக வளர்க்கப்பட்டார். ஆகவே, இவரது காலம் பெரியாழ்வாரின் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றுண்டே என்பர். இவரது இயற்பெயர் கோதை, என்பதாகும். இவர் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும் வழங்கப்பட்டார். அதற்குக் காரணமாகப் பின்கண்ட நிகழ்ச்சியைக் கூறுவர்:

பெரியாழ்வார் நாள்தோறும் திருமாலுக்குச் சார்த்துவதற்காக மாலைதொடுத்து வைப்பார். அம்மாலையினை, பெரியாழ்வார்க்குத் தெரியாமல் ஆண்டாள் சூடிப்பார்த்துப் பின் கழற்றி வைத்து விடுவாள். இது வழக்கமாக நடைபெற்று வந்தது. ஒருநாள் பெரியாழ்வார் இதனைப் பார்த்துவிட்டார். அவர், ஆண்டாள் சூடிய மாலையை ஆண்டவனுக்குச் சூட்டவில்லை. எனவே, அவரது கனவில் திருமால் தோன்றி ''ஆண்டாள் சூடிய மாலையை நான் பெரிதும் விரும்புகிறேன்'' என்று கூறினர். உடனே, அவர் விழித்தெழுந்தார். தன் மகள் திருமாலையே ஆண்டதால் 'ஆண்டாள்' என்றும், அவர் சூடிக்கொடுத்த மாலையைத் திருமால் ஏற்றுக்கொண்டதால் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்றும் அழைத்தார். அன்று முதல் ஆண்டாள் சூடிய மாலையையே திருமாலுக்கும் சார்த்தி வந்தார்.

ஆண்டாள் பாடல்கள் 'நாச்சியார் திருமொழி' என வழங்கும். அவற்றுள் திருப்பாவை மிக்க புகழ்வாய்ந்தது.

திருப்பாவை

மார்கழி மாதத்தில், கன்னிப்பெண்கள் காத்தியாயினி நோன்பு கொண்டாடுதற் பொருட்டு விடியலில் ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு செல்வர். மழைவேண்டியும், உலக நலங்கருதியும் தமக்கு நல்ல கணவனைத் தருதல் வேண்டியும் இங்ஙனம் அவர்கள் விரதமிருப்பர். இந்நிலையில் பாடப்பெறும் பாடல்கள் இயற்கை வருணனை கொண்டனவாகவும், உரையாடல் தன்மை வாய்ந்தனவாகவும் அமைந்திருக்கும். 'தைந்நீராடல்' என்ற பெயரிலும் 'அம்பா ஆடல்' எனற பெயரிலும் சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்ட நீராடலே பிற்காலத்தில் 'மார்கழி நீராட' லாகவே ஆயிற்று என்று அறிஞர் கூறுவர்.

Koviloor Digital Library

திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது. திருப்பாவையின் முதல் ஐந்து (1—5) பாடல்கள் பாவைநோன்பின் சிறப்பைக் கூறுவதாகவும், அடுத்து பத்துப் (6—15) பாடல்கள் உறங்குகின்ற தோழிமார்களை எழுப்புவதாகவும், அடுத்த ஆறு (16—21) பாடல்கள் கோயில்காப்பவன், வாயில்காப்பவன், நந்தகோபன், யசோதை, நப்பின்னை, கண்ணன், பலராமன் ஆகியோரைத் துயிலெழுப்புவதாகவும், அடுத்த நான்கு (22—25) பாடல்கள் கண்ணனை எழுப்பியபின் அவன் அருட்பார்வையே வேண்டி நிற்பதாகவும், இறுதியாக வரும் ஐந்து (26—30) பாடல்கள் கண்ணனிடம் வேண்டுவனவற்றைக் கேட்பதாயும் அமைத்துள்ளன.

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினே நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏராந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள் ! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

Koviloor Digital Library

ஆழி மழைக்கண்ணு ! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் ! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ ! பேய்ப்பெண்ணே !
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினுல்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் ! நாராயணமூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் ! திறவேலோ ரெம்பாவாய்.

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துஉன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது குலமுடைய
பாவாய் ! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய

Koviloor Digital Library

தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே ! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் ! அவளை யெழுப்பீரோ உம்மகள்தான்
ஊமையோ ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் !
மாற்றமும் தாராரோ ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ ?
ஆற்ற அனந்த லுடையாய் ! அருங்கலமே !
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே !
புற்றர வல்குல் புனமயிலே ! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி ! நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் !
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய் !
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் !
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்

Koviloor Digital Library

புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய் !
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ ? பாவாய் ! நீ நன்ளாால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய், 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்கனே முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய் ! நாணுதாய் ! நாவுடையாய் !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே ! இளங்கிளியே ! இன்னும் உறங்குதியோ !
சில்லென் றழையேன்மின் ! நங்கைமீர் ! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றுரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே ! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே ! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாம் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால்முன் னம்முன்னம் மாற்றுதே அம்மா ! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் ! நந்தகோ பாலா ! எழுந்திராய் ;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே ! குலவிளக்கே !
எம்பெரு மாட்டி ! யசோதாய் அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே ! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா ! பலதேவா !
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

Koviloor Digital Library

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே ! நப்பின்னாய் !
கந்தம் கமழும் குழலீ ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா ! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் ! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே ! துயிலெழாய்
செப்பமுடையாய் ! திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா ! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் ! திருவே ! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே ! அறிவுறாய்
ஊற்ற முடையாய் ! பெரியாய் ! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே ! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துஉன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
நிங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்

Koviloor Digital Library

அங்க ணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா ! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்துஇருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்றுஇவ் வுலகம் அளந்தாய் ! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் ! திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் ! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் ! கழல்போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் ! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்துஓ ரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளிந்து வளரத்
தீரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே ! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே ! மணிவண்ணா ! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் பொய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே! கொடியே! விதானமே!
ஆலி னிலையாய் ! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா ! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்

Koviloor Digital Library

நாடு புகழும் பரிசினால் நன்னுகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்துஉன் தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன் தன்னைடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்
பொற்ற மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னென்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னைடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

——X——

Koviloor Digital Library

தொண்டரடிப் பொடியாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஒருவர். இவர் சோழநாட்டில் உள்ள திருமண்டங்குடி என்னும் ஊரில் பிறந்தார். இவர் திருவரங்கப் பெருமானுக்கு மலர்த்தொண்டு புரிந்து வந்தார். அதற்காகவே ஒரு மலர்வனத்தை அமைத்துப் பாதுகாத்து வந்தார்.

இவரைத் திருமாலினது வனமாலையின் அம்சம் என்பர். இவரது இயற்பெயர் விப்பிரநாராயணர் என்பது. திருமாலடியார்களின் திருவடியில் பட்ட தூசினையும் மதிப்பவர் இவர். ஆகவே, இவர் தொண்டரடிப்பொடியாழ்வார் என்றும் வழங்கப்பட்டார்.

அழகும் இளமையும் வாய்த்த தேவதேவி என்னும் பரத்தையிடம் நட்பு பூண்டு, ஈட்டிய பொருளையெல்லாம் இழந்து இவர் வறுமையுற்றார். பொருளில்லாக் காரணத்தால் தேவதேவியினால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். வேதனைக் கடலில் வீழ்ந்து வருந்திய இவரது வருத்தத்தைப் போக்கத் திருவரங்கரே தன் கோயிலிலிருந்த பொன் வட்டில்களுள் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து தேவதேவியிடம் கொடுத்தார். அதன்பின், இருவரும் இணைந்து வாழும் வாய்ப்பேற்பட்டது. இதற்கிடையில் கோயிலில் பொன்வட்டில் காணுமற் போன செய்தி பரவியது. உண்மையறிந்து தேவதேவியிடமிருந்து பொன்வட்டிலைக் கைப்பற்றிய மன்னன் இவரைச் சிறையிலிட்டான். இறுதியில் திருவரங்கரே மன்னன் கனவில் தோன்றி நடந்ததைக் கூறினர். மன்னனும் இவரை விடுதலை செய்து போற்றினன்.

தமது நடத்தைக்காக வருந்திய இவர், பின்னர் மனத்தூய்மை பெற்று, உள்ளம் உருகி, பக்திச் சுவைமிக்க பாடல்களைப் பாடினர். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டினையும் இவர் பாடியுள்ளார். இவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர்.

திருப்பள்ளி எழுச்சி :

தூங்கும் இறைவனைத் துயிலெழுப்பப் பாடப்படும் பாவனையில் அமைந்தது 'திருப்பள்ளி எழுச்சி' என்பது. ஒவ்வொரு பாடலிலும் 'பள்ளியெழுந்தருளாயே' என்று திருப்பள்ளியெழுச்சியை வேண்டுதலால் இந்நூல் 'திருப்பள்ளி எழுச்சி' என்று வழங்கப்பெறும். இது பத்துப் பாடல்களைக் கொண்டது.

Koviloor Digital Library

திருப்பள்ளியெழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்,
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ,
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிற குதறி,
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறவதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனெயி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னெளி சுருங்கி,
படரொளி பசுத்தனன் பனிமதி யிவ்வே
பாயிரு ளகன்றது பைம்பொழில் கமுகின்,
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 3

மேட்டிள மேதிகள் தளிவிடு மாயர்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை,
வாட்டிய வரிசிலை வானவ ரேறே ;
மாமுனி வேள்வியைக் காத்து, அவ பிரதம்
ஆட்டிய அடுநிறல் அயோத்தியெம் மரசே !
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 4

புலம்பின புட்களும் பூம் பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி

Koviloor Digital Library

கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா,
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான் ! பள்ளி யெழுந்தரு ளாயே. 5

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ ?
இறையவர் பதினெரு விடையரு மிவரோ ?
மருவிய மயிலின னறுமுக னிவனே ?
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி,
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்,
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ ?
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ ?
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ ?
இந்திர னனையும் தானும்வந் திவனே ?
எம்பெரு மானுன கோயிலின் வாசல்,
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ ?
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணுடி முதலா,
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்,
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ ?
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி,
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஏதமில் தண்ணுமை யெக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி,
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்
கந்தரு வர்அவர் கங்குலு ளெல்லாம்,

Koviloor Digital Library

மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள
அரங்கத்தம் மா ! பள்ளி யெழுந்தரு ளாயே. 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனே ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா,
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை, அளியனென் றருளியுன் னடியார்க்
காட்படுத் தாய் ! பள்ளி யெழுந்தருளாயே. 10

குலசேகர ஆழ்வார்

பன்னிரண்டு ஆழ்வார்களில் குலசேகரர் ஒருவர். இவர் சேர மன்னர்களின் வழித்தோன்றலாவார். கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். திருவஞ்சைக்களம் என்னும் ஊரினர். சேர மன்னனுகிய 'த்ருடவ்ருதன்' திருமாலே வேண்டிக்கொண்டதனல் இவர் அவதரித்-தார். இவர், திருமாலின் மார்பில் அணியும் 'கௌத்துப மணி' என்னும்' அணிகலன் அம்சம் என்று போற்றப்படுபவர். இவர் வடமொழியும் தென்மொழியும் நன்கு கற்றவர். இராமாயணத்தின்மீது மி கு ந் த பற்றுக்கொண்டவர். செல்வமுடிசூடும் அரச வாழ்வைக் காட்டிலும், திருமால் அடிசூடும் வாழ்வே பெரிது என எண்ணியவர். இவர், தமிழில் 'பெருமாள் திருமொழி'யையும், வடமொழியில் 'முகுந்தமாலே' என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

பெருமாள் திருமொழி :

பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டது. இந்-நூலில், திருவரங்கம், திருவேங்கடம், திருவிற்றுவக்கோடு ஆகிய தலங்களைப் பாடியுள்ளார்.

'ஊனேறு செல்வம்' என்ற பாசுரத்தில் இயற்கைத் துறவினைப் பாடியுள்ளார், 'தருதுயரந்தடாயேல்' என்ற பாசுரத்தில் தம்மை உய்விக்க இறைவன் எழுந்தருளி வரவில்லையே என்ற ஏக்கத்தைப் பாடியுள்ளார். அவனின்றி வாழ்வில்லை என்பதைப் பல உவமைகள் வாயிலாக விளக்கியுள்ளார்.

Koviloor Digital Library

ஊனேறு

திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதியது எனல்

1. ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்,
ஆனேறேழ் வென்ரு னடிமைத் திறமல்லால்,
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.

2. ஆனுத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ,
வானுளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,
தேனுர்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,
மீனுய்ப் பிறக்கும் விதியுடையே னுவேனே.

3. பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்,
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்,
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்,
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவே னுவேனே.

4. ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்,
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு,
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து,
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னுவேனே.

5. கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து,
இன்பமரும் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்,
எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்,
தம்பமாய் நிற்கும் தவமுடையே னுவேனே.

6. மின்னனைய நுண்ணிடையா ருருப்பசியும் மேனகையும்,
அன்னவர்தம் பாடலொடு மாடலவை யாதரியேன்,
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்,
அன்னனைய பொற்குடவா மருந்தவத்த னுவேனே.

7. வானுளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ், மன்னவர்தம்,
கோனுகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்,
தேனுர்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்,
கானுருப்ப் பாயும் கருத்துடையே னுவேனே.

8. பிறையேறு சடையானும் பிரமனு மிந்திரனும்,
முறையாய்ப் பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானுன்,
வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்,
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னுவேனே.

Koviloor Digital Library

9. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

10. உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ், உருப்பசிதன்,
அம்பொற் கலையல்குல் பெற்ருலு மாதரியேன்,
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்,
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

11. மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்றன்,
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி,
கொன்னவிலும் கூர்வேற் குலசே கரன்சொன்ன,
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே.

தருதுயரந்தடாயேல்

விற்றுவக் கோட்டம்மானையே வேண்டி நிற்றல்

1. தருதுயரந் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை,
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே,
அரிசினத்தா லின்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே யழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே.

2. கண்டா ரிகழ்வனவே காதலன்ருன் செய்திடினும்,
கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் விற்றுவக்கோட் டம்மா, நீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே.

3. மின்நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட் டம்மா, என்
பால்நோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்,
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும், தார்வேந்தன்
கோல்நோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

4. வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மா, நீ
ஆளா வனதருளே பார்ப்ப னடியேனே.

5. வெங்கண்திண் களிறடர்த்தாய் விற்றுவக்கோட் டம்மானே,
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையல்லால்,
எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்,
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.

Koviloor Digital Library

6. செந்தழலே வந்தழலைச் செய்திடினும், செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்,
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா, உன்
அந்தமில்சீர்க் கல்லா லகங்குழைய மாட்டேனே.

7. எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்,
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்,
மெய்த்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா, என்
சித்தம்மிக வுன்பாலே வைப்ப னடியேனே.

8. தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடி, தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத; மற்றவைபோல்,
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! விற்றுவக்கோட் டம்மா, உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே!

9. நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
றன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி விற்றுவக்கோட் டம்மானே,
நின்னையே தான்வேண்டி நிற்ப னடியேனே.

10. விற்றுவக்கோட் டம்மாநீ வேண்டாயே யாயிடினும்,
மற்றுரும் பற்றிலே னென்றுஅவனைத் தாள்நயந்த,
கொற்றவேல் தானைக் குலசேக ரன்சொன்ன,
நற்றமிழ் பத்தும்வல்லார் நண்ணுர் நரகமே.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை என்பவர், இருநூறு ஆண்டுகட்கு முன் மதுரையில் வாழ்ந்தவர். 'பலபட்டடைக் கணக்கு' என்ற தொழில் புரிந்து வந்தமையால், இவருக்கு இப் பெயர் வந்தது. சொல்லழகும் பொருளழகும் தோன்றக் கவிபாடு-வதில் வல்லவர். இவர் ஒப்பற்ற பக்திமான்; உயர்ந்த கல்விமான். இவர், அழகர் கிள்ளை விடு தூது, மதுரை மும்மணிக்கோவை, மதுரை யமக அந்தாதி, தேவையுலா, பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது, நரசிங்க நாயகர் வளமடல் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

Koviloor Digital Library

அழகர் கிள்ளைவிடு தூது

தலைவனைக் கண்டு காமுற்ற தலைவி, அவனைப் பெற வேண்டித் தன்னிடமுள்ளவற்றுள் ஒன்றைத் தூதுவிடுவதாகப் பாடுவது தூது எனப்படும்.

மதுரைக்கு அருகிலுள்ள 'அழகர்மலை' என்னும் 'திருமாலிருஞ் சோலை' யில் கோயில் கொண்டுள்ள அழகர் மீது காதல் கொண்ட தலைவி யொருத்தி, கிளிஒன்றை இவர்பால் தூதுவிடுவதாகக் கற்பனை செய்து இயற்றப்பட்ட, நூலே 'அழகர் கிள்ளைவிடு தூது' என்பதாகும்.

இந்நூல் காப்பு வெண்பா ஒன்றையும் 239 கண்ணிகளையும் உடையது. இந்நூலில் கிளியைப் பற்றிய செய்திகளும்; அழகரின் பெருமை, திருமாலின் பத்து அவதாரங்கள், தசாங்கச்சிறப்புப் பற்றிய விளக்கங்களும்; சித்திரைத் திருவிழாவும், தலைவி அழகர் மீது கொண்ட காதலும், அக்காதற்றுயரால் தூதுவிடுஞ்செய்திகளும் அடுக்கடுக்காகப் பாடப்பட்டுள்ளன.

'கிள்ளை விடு தூது' நூல்களில், 'அழகர் கிள்ளைவிடு தூது' என்ற இந்நூலொன்றே பழமையான தூது நூல் ஆகும்.



Koviloor Digital Library

வ

திருச்சிற்றம்பலம்

திருமாலிருஞ் சோலைமலை

அழகர் கிள்ளைவிடு தூது

காப்பு

வெண்பா

தெள்ளு தமிழ்அழகர் சீபதிவாழ் வார்மீது
கிள்ளைவிடு தூது கிளத்தவே — பிள்ளைக்
குருகூரத் தானேசங் கூர்கமுகி லேறும்
குருகூரத் தானேசங் கூர்.

நூல்

கிளியை விளித்தல்

1 கார்கொண்ட மேனிக் கடவுள் பெயர் கொண்டு
நீர்கொண்ட பாயல் நிறங்கொண்டு — சீர்கொண்ட
வையம் படைக்கு மதனையுமேற் கொண்டின்பம்
செய்யுங் கிளியரசே செப்பக்கேள் — வையமெலாம்
வேளாண்மை யென்னும் விளைவுக்கு நின்வார்த்தை
கேளா தவர்ஆர்காண் கிள்ளையே — நாளும்
மலைத்திடு மாரனெற்றை வண்டிலும்இல் லாமற்
செலுத்தியகாற் றேரைமுழுத் தேராய்ப் — பெலத்திழுத்துக்

5 கொண்டுதிரி பச்சைக் குதிராய் உனக்கெதிரோ
பண்டுதிரி வெய்யோன் பரியேழும் — கண்ட
செகமுழுதும் நீஞான தீபமும் நீ யென்று
சுகமுனியே சொல்லாரோ சொல்லாய் — வகைவகையாய்
எவ்வண்ண மாய்ப்பறக்கும் எப்பறவை யாயினும்உன்
ஐவண்ணத் துள்ளே யடங்குமே — மெய்வண்ணம்
பார்க்கும் பொழுதிலுனைப் பார்ப்பதியென் பாரென்ரே
மூக்குச் சிவந்தாய் மொழிந்திடாய் — நாக்குத்
தடுமாறு வோரையெல்லாந் தள்ளுவரே யுன்னை
விடுவார் ஒருவருண்டோ விள்ளாய் — அடுபோர்

Koviloor Digital Library

மறந்தரு சீவகனுர் மங்கையரில் தத்தை
சிறந்ததுநின் பேர்படைத்த சீரே—பிறந்தவர்
ஆரும் பறவைகளுக் கக்சுதன்பே ருஞ்சிவன்றன்
பேரும் பகர்ந்தாற் பிழையன்ரே—நேர்பெறுவி
வேகி யொருகூடு விட்டுமறு கூட்டையும்
யோகி யுனக்குவமை யுண்டோகாண்—நீகீரம்
ஆகையா லாடை யுனக்குண்டே பாடகமும்
நீகொள்வாய் காலாழி நீங்காயே—ஏகாத
கற்புடையாய் நீயென்ருற் காமனையுஞ் சேர்வாயே
அற்புடைய பெண்கொடி நீ ஆகாயோ—பொற்புடையோர்

துன்னியசா யுச்யஞ் சுகரூபம் ஆகையால்
அன்னது நின்சொரூபம் அல்லவோ—வன்னி
பரிசித்த வெல்லாம் பரிசுத்தம் என்ரே
உருசித்த உன்னெச்சில் உண்பார்—துரிசற்ரோர்
இன்சொல்லிக் கற்பா ரெவர்சொல்லும் நீ கற்பாய்
உன்சொல்லிக் கற்கவல்லார் உண்டோகாண்—நின்போலத்
தள்ளரிய யோகங்கள் சாதியா தேபச்சைப்
பிள்ளையாய் வாழும் பெரியோரார்—உள்ளுணர்ந்த
மாலினைப் போல மகிதலத்தோர் வாட்டமறப்
பாலனத் தாலே பசிதீர்ப்பாய்—மேலினத்தோர்

நட்டா ரெனினும் நடந்துவரும் பூசைதனை
விட்டார் முகத்தில் விழித்திடாய்—வெட்டும் இரு
வாளனைய கண்ணுர் வளர்க்கவளர் வாயுறவில்
லாளனைநீ கண்டால் அகன்றிடுவாய்—கேளாய்
இருவடிவு கொண்டமையால் எங்கள் பெரிய
திருவடிகள் வீறெல்லாஞ் சேர்வாய்—குலிவாய்ச்
செபதே சிகர்க்கெல்லாந் தென்னரங்கர் நாமம்
உபதேச மாக உரைப்பாய்—இபமுலையார்
சித்தங் களிகூரச் செவ்விதழில் ஆடவர்போல்
முத்தங் கொடுக்க முகங்கோணுய்—நித்தமவர்

செவ்விதழுன் மூக்காற் சிவந்ததோ உன்மூக்கில்
அவ்வித முன்சிவப்புண் டானதோ—செவ்வியிழந்
தண்டருக்குந் தோற்ரு அடல்வேளா னனைநீ
கொண்டிழுத்தால் ஆகுங் குறையுண்டோ—உண்டடக்கி
ஆயுவை நீட்ட அருந்தவத்தோர் பூரகஞ்செய்
வாயுவையுன் பின்னே வரவழைப்பாய்—தேயசொளிர்

Koviloor Digital Library

மைப்பிடிக்கும் வேற்கண் மலர்மாதுஞ் சங்கரியும்
கைப்பிடிக்க நீவங் கணம்பிடித்தாய்—மெய்ப்பிடிக்கும்
பச்சைநிறம் அச்சுதற்கும் பார்ப்பதிக்கு முன்றனக்கும்
இச்சைபெற வந்தவிதம் எந்தவிதம்—மெச்சும்

குருகேயுன் னுக்குத்தான் கூழைநாக் கான
தரிகீர்த் தனத்தினுல் அன்ரே—தெரிவையர்கள்
ஆர்த்தவிரல் உன்முகமொப் பாகையா லேகையைப்
பார்த்து முகமதனைப் பாரென்பார்—சீர்த்திக்
கிரியையிலே காணுங்காற் கிள்ளை அடையாத
பெரியதனம் வீணன்ரே பேசாய்—தெரியுங்கால்
தேறுகனி காவேரி சிந்துகோ தாவிரியும்
வீறுபெறு மேநீ விரும்பினுற்—கூறில்அனம்
உன்னுடைய வுணன்ரே ஊதப் பறந்துபோம்
சின்னவடி வன்ரே செழுங்குயிலும்—என்னே

முதுவன் டினந்தான் முடிச்சவிழ்த் தாலும்
மதுவுண்டாற் பின்னேவா யுண்டோ—எதிரும்
கரும்புரு வார்த்தை கசப்பென்று சொல்ல
வரும்புரு வுக்குமொரு வாயோ—விரும்புமயில்
உற்ற பிணிமுகமே உன்போற் சுகரூபம்
பெற்ற பறவை பிறவுண்டோ—கற்றறியும்
கல்வியுங் கேள்வியுங் கைக்கொண்டாய் சாரிகைக்குன்
செல்வமதி லள்ளித் தெளித்தாயோ—சொல்வேத
மென்பரிநா லுக்கும் நீதிசா ரதிவில்வேள்
தன்பரி யேயுனக்குச் சாரதியார்—வன்போரில்

மேவுஞ் சிவன்விழியால் வேள்கருகி நாண்கருகிக்
கூவும் பெரிய குயில்கருகிப்—பாவம்போல்
நின்று மறுப்படுநாள் நீதா னடுப்படையிற்
சென்று மறுப்படா தேவந்தாய்—என்றுமாக்
காய்க்குங் கனியல்லாற் காய்பூவென் ருனக்கு
மூக்கு மறுப்பாய் முகம்பாராய்—ஆக்கம்
வரையாமல் நன்மை வரத்தினை நல்கும்
அரிதாளை நீவிட் டகலாய்—இருகை
உனக்கில்லை யுன்சிறகி ரண்டுமெனக் கில்லை
எனக்கும்உனக் கும்பேதம் ஈதே—மனைக்குள்

இதமாய் மனிதருட னேபழகு வாயன்
பதனுன் முறையிட் டழைப்பாய்—மதுவுண்

Koviloor Digital Library

டளிப்பிள்ளை வாய்குழறு மாம்பரத்தி லேறிக்
களிப்பிள்ளைப் பூங்குயிலும் கத்தும்—கிளிப்பிள்ளை
சொன்னத்தைச் சொல்லுமென்று சொல்லப் பெயர்கொண்டாய்
பின்னத்தைப் போலுமொரு பேறுண்டோ - அன்னமின்றிப்
பால்குடிக்கும் பச்சைக் குழந்தை நீ யானலும்
கால்பிடிப்பார் கோடிபேர் கண்டாயே - மால்பிடித்தோர்
கைச்சிலேவே ளால்வருந்துங் காமநோய் தீர்ப்பதற்கோ
பச்சிலே ரூபம் படைத்திருந்தாய் — அச்ச

மனப்பேதை யார்மால் வனஞ்சுடவோ வன்னி
எனப்பேர் படைத்தாய் இயம்பாய் — அனத்தை
நிலவோவென் பார்கள் நெடுந்துயர்வே ழத்தைக்
கொலவோ வரிவடிவங்கொண்டாய் — சிலேநுதலார்
கொள்ளை விரகக் கொடும்படையை வெல்லவோ
கிள்ளை வடிவெடுத்தாய் கிற்பாய்நீ — உள்ளம்
மிகவுடைய மாதர் விதனங் கெடவோ
சுகவடிவு நீகொண்டாய் சொல்லாய் — தகவுடைய
தத்தை யடைந்தவரே தத்தையடை யாரென்னும்
வித்தையடைந் தாய்உனையார் மெச்சவல்லார் - முத்தமிழோர்

மாரதி பாரதியார்க் குன்னையுவ மானிப்பார்
ஆரதிகம் ஆர்தாழ் வறைந்திடாய் — ஊரறிய
நெய்யிற்கை இட்டாலு நீதான் பசுமையென்றே
கையிட்டுச் சுத்தி கரிக்கலாம் — மெய்யின்
வடிவும் வனைந்த மணிமூக்கு மாயன்
கொடியி லிருப்பவர்தங் கூரே — நெடியமால்
விண்டுதறித் தூது வேணுகா னத்தினிலே
பண்டு தழைத்த பசுந்தழையோ — கொண்டசிற
கல்லிலங்கு மெய்யானை அன்றழித்து வீடனன்போய்த்
தொல்லிலங்கைக் கட்டுபுதுத் தோரணமோ — நல்வாய்

மழலை மொழிதான் மணிவண்ணன் செங்கைக்
குழலின் இசைதானே கூரும் — அழகுக்
கிளிப்பிள்ளாய் தெள்ளமுதக் கிள்ளாய் நலங்குக்
குளிப்பிள்ளாய் இன்பரசக் குஞ்சே — வளிப்பிள்ளை
தன்னைத்தாய் போலெடுத்துச் சஞ்சரிக்குஞ் சம்பத்தாய்
பின்னைத்தாய் கையிலுறை பெண்டத்தாய் — பொன்னைத்தாய்
முத்திநக ரேழிலொன்றே முத்தமிழ்வல் லாறிலொன்றுய்
ஒத்ததனித் தவ்விரிப்பே குற்றதொன்றே — சுத்தமுறும்

Koviloor Digital Library

ஐந்துபூ தத்திலொன்றே யானபடை நான்கிலொன்றே
முந்துமுத லானபொருண் மூன்றிலொன்றே — வந்த
இருபயனி லொன்றே இமைய விழியே
பருவ விழியிலுறை பாவாய் — ஒருநாரில்
ஏற்றுந் திருமாலை யெய்தப்போய் ஊரெல்லாம்
தூற்றுமலர் கொண்டகதை சொல்லக்கேள் - தோற்றி

அழகர் மாண்பு

அரிவடிவு மாய்ப்பின் னரன்வடிவு மாகிப்
பெரியதொரு தூணிற் பிறந்து — கரிய
வரைத்தடந் தோள் அவுணன் வன்காயங் கூட்டி
அரைத்திடுஞ் சேனை அருந்தி — உருத்திரனுய்ப்
பண்ணுந் தொழிலைப் பகைத்துநிலக் காப்புமணிந்
துண்ணும் படியெல்லாம் உண்டருளி வெண்ணெயுடன்
பூதனை தந்தபால் போதாம லேபசித்து
வேதனையும் பெற்று வெளிநின்று — பாதவத்தைத்
தள்ளுநடை யிட்டுத் தவழ்ந்து விளையாடும்
பிள்ளைமை நீங்காத பெற்றியான் — ஒள்ளிழையார்
கொல்லைப்பெண் ணைக்குதிரை யாக்குந் திருப்புயத்தான்
கல்லைப்பெண் ணைக்குமலர்க் காலினான் — சொல்கவிக்குப்
பார முதுகடைந்த பாயலான் விண்ணவர்க்கா
ஆர முதுகடைத்த அங்கையான் — நாரியுடன்
வன்கா னகங்கடந்த வாட்டத்தான் வேட்டுவதற்கு
மென்கா னகங்கடந்த வீட்டினான் — என்காதல்
வெள்ளத் தமிழ்ந்தினேன் வேலைக்கு மேன்மிதந்தோன்
உள்ளத்துள் ளானுலகுக் குப்பாலான் — தெள்ளிதின்
வெட்ட வெறுவெளியி லேநின்றுந் தோற்றுதான்
கிட்ட விருந்துங் கிடையாதான் — தட்டாதென்
எண்ணிலே மாய னெனும்பேரி னாலோளிப்போன்
கண்ண னெனும்பெயராற் காண்பிப்போன்—எண்ணுங்கால்
எங்கு மிலாதிருந்தே எங்கு நிறைந்திருப்போன்
எங்கு நிறைந்திருந்தே எங்குமிலான் — அங்கறியும்
என்னை எனக்கொளித்தி யானென்றுங் காணுத
தன்னை யெனக்கருளுந் தம்பிரான் — முன்னைவினை
கொன்று மலமாயைக் கூட்டங் குலைத்தென்னை
என்றுந் தனியே இருத்துவோன் — துன்றுபிர
மாவும்நான் மன்னுயிரும் நானவ் விருவரையும்

Koviloor Digital Library

ஏவுவான் ருனும்நான் என்றுணர்த்தக் - கோவலர்பரல்
ஆனுமாய் ஆன்கன்றும் ஆகி அவற்றைமேய்ப்
பானுமாய் நின்ற பரஞ்சோதி — மாநகரப்
பேரிரு ணீக்கப் பெருந்தவம்வேண் டாஉடலில்
ஆருயிர் கூட்ட அயன்வேண்டா — பாருமெனச்
சங்கத் தொனியுந் தடங்குழ லோசையெனும்
துங்கத் தொனியுந் தொனிப்பிப்போன் - பொங்குமலை

மோதும் பரஞ்தி மூலம் இவனென்றே
ஓதுங் கரியொன் றுடைமால் — மூதுலகைத்
தந்திடுவோ னுந்துடைப்போன் ருனுநா னென்றுதிரு
உந்தியால் வாயா லுரைத்திடுவோன் - பைந்தமிழால்
ஆதிமறை நான்கையு நாலாயிரத்து நற்கவியால்
ஓதும் பதிஞெருவர் உள்ளத்தான் — பாதமெனும்
செந்தா மரைமலரிற் சிந்திய தேன்போல
மந்தா கினிவழியும் வண்மையான் — சந்ததமும்
ஆன்ற வுலகம் அறியும் அறி யாமையுமாத்
தோன்றத் துயிலாத் துயில்கொள்வோன்—ஈன்றவளைத்

தெள்ளு மணிவாயிற் காட்டிச் செகம்புறமும்
உள்ளு மிருப்ப துணர்வித்தோன்—கொள்ளக்
கவற்சிதரு சென்மக் கடலிற் கலந்த
அவிச்சையுவர் வாய்கழுகி லானேன் — நிவப்பா
மடங்கும் பரசமய வாத நதிவந்
தடங்கக் கருங்கடலு மானேன் — உடம்பிற்
புணர்க்க ஒருகிரணம் போலுமெனை யுங்கொண்
டணைக்க மணிநிறமு மானேன்—பணைக்கும்
விசைப்பூ தலவுசன் மீதிலிருப் போனும்
அசைப்போனுந் தானுகும் அண்ணல் - இசைத்திசைத்

தூன்பிடிக்கும் வேடர் ஒருபார்வை யால்நூறு
மான்பிடிக் கின்ற வகையென்னத் — தான்படைத்த
என்பிறவி யெண்பத்து நான்குநூ ருயிரமும்
தன்பிறவி பத்தாற் றணித்திடுவோன் - முன்பு புகழ்ந்து

பத்துறுப்பு

மலை

எத்திருவர் நீங்கா திருக்கையா லேகேச
வாத்திரி யென்னு மணிபெற்றுக் — கோத்திரமாம்
வெங்காத் திரஞ்சேர் விலங்குகளோ மாய்த்திடலாற்

Koviloor Digital Library

சிங்காத் திரியென்னுஞ் சீர்மருவி — எங்கோமான்
மேய்த்த நிரைபோல வெற்புகள்எல் லாஞ்சூழ
வாய்த்த நிரையில்ஒரு மால்விடையாய்ப் — பார்த்திடலால்
இன்னியம் ஆர்க்கும் இடபகிரி யென்னும்பேர்
மன்னிய சோலை மலையினன் — எந்நாளும்

ஆறு

பொற்சிலம்பி லோடுஞ்சாம் பூநதம்போன் மாணிக்க
நற்சிலம்பி லோடும் நதியாகிக் — கற்சிலம்பில்
இந்திரன் போலும் இடபா சலம் அவன்மேல்
வந்தவழி போலும் வளச்சுனைகள் — முந்துதிரு
மாலுடைய தோளின் மணிமார்பின் முத்தாரம்
போல வருநூ புரநதியான் — சீலமுறும்
பன்னிரு செந்தமிழ்சேர் நாடுகளும் பார்மகட்கு
முன்னிருகை காதுமலை முகங்கால் — பின்னகங்கண்
காட்டும் அவற்றுட் கனகவரை மீதுபுகழ்
தீட்டும் புனனுடந் தென்னுடும் — நாட்டமாம்
அந்நா டிரண்டில் அருள்சேர் வலக்கணெனும்
நன்னாடாந் தென்பாண்டி நாட்டினன் — பொன்னுருவர்

நகர்

சந்த்ரவடி வாஞ்சோமச் சந்திரவி மானத்தை
இந்திரவி மானம் இதுஎன்றும் — மந்த்ரவிரு
துக்கொடி யேறு துசத்தம்பம் வல்லிசா
தக்கொடி யேறுகற்ப தாருஎன்றும் — மிக்கோர்க்
கொருவாழ்வா ஞேஞே உபேந்திரனே யென்றும்
திருமாலை யாண்டானைத் தேவகுரு — வென்றும்
நண்ணிய சீர்பெற்ற நம்பி முதலோரை
விண்ணவர்கோன் ஆதி விபுதரென்றும் — எண்ணுதலால்
ஆர்பதி யான அமரா பதிபோலும்
சீர்பதி யான திருப்பதியான் — மார்பிடத்தில்

தார்

எண்ணுங் கலனிறத்தோ டிந்திரவிற் போற்பசந்த
வண்ணந் தருந்துளப மாலையான் - உண்ணின்று

கரி

உருக்கும் வயிணவமா மோங்குமதம் பொங்கத்
திருக்கொம்பு தான்றுதிக்கை சேர — நெருக்கிய

Koviloor Digital Library

பாகமொத்த வைகான தம்பாஞ்ச ராத்திரமாம்
ஆகமத்தின் ஓசைபணி யார்ப்பெடுப்ப — மோகமறு

மட்டும் பிணிக்கும் வடகலையுந் தென்கலையும்
கட்டும் புரசைக் கயிறுக — விட்டுவிடா
ஆனந்த மான மலர்த்தாள் கண் டத்துவி
தானந்த மென்றகவி யானையான் — தானந்த

பரி

வர்க்கத் துடனெழுந்து வாயி னுரைகடந்து
கற்கி வடிவுநலங் காண்பித்துச் — சொர்க்கத்தில்
ஏறுங் கதிகாட்டி எய்தும் அணுத்தோற்றி
வீறும் பலகலையும் வென்ரேடி — ஆறங்கம்
சாற்றிய தன்னங்க மாய்க்கொண்டு தரரணியிற்
போற்றிய வேதப் புரவியான் — பாற்கடலிற்

கொடி

புக்கதொரு மந்தரமும் பூமியும் பம்பரமும்
சக்கரமும் போலத் தலைசுழன்று — தொக்கவிசை
வற்றும் பொழுதுவீழ வாசுகியைச் சேடனைப்
பற்றுங் கருடப் பதாகையான் — சுற்றியதன்

முரசம்

குன்றில்அரி யுங்கரியுங் கொண்மூவு நின்றதிர
முன்றில் அதிர்மும் முரசினன் — என்றும்

ஆணை

அவனசை யாமல் அணுவசையா தென்னும்
தவநிலை யாணை தரித்தோன் — நவநீதம்
மேனியிற் சித்தியதும் மென்கையி லேந்தியதும்
வானில் உடுவும் மதியுமெனத் — தானுண்டோன்

செங்கதிரும் வெண்கதிரும் என்னத் திருவிழியும்
சங்கமுஞ் சக்கரமுந் தாங்கினென் — அங்கணுல
குண்டகனி வாயான் உறையுந் திருவயிற்றுன்
கொண்ட படியின்ற கொப்பூழான் — மண்டி
அளந்த திருத்தாளான் அன்றேற்ற கையான்
விளைந்த பொருள்காட்டும் மெய்யான் — உளங்கொண்
டிடந்த மருப்பினு னேந்து முதுகான்

Koviloor Digital Library

படந்தனில் வைத்தமணிப் பாயான் — தொடர்ந்தவினை
முட்டறுக்குந் தன்னுமை முன்னித் திருநாமம்
இட்டவருக் கீவோன் இகபரங்கள் — எட்டெழுத்தாற்

பிஞ்செழுத்தாய் நையும் பிரம லிபியெனும்பேர்
அஞ்செழுத்தை மூன்றெழுத் தாக்குவோன் - வஞ்சமறத்
தங்கள்சூன் றெங்கிருந்துஞ் சங்கரன் ஆதியோர்
நங்கள்குன்றீ தென்னவரு நண்புடையோன் — அங்கோர்
வயமுனிக்குக் கண்ணிரண்டு மாற்றினேன் போற்றும்
கயமுனிக்கு கண்கொத்த கண்ணன் — நயமுரைக்கின்
அஞ்சுபடை யோனெனினும் அஞ்சாமல் அங்கையில்வா
சஞ்செய்யு முத்யோகச் சக்கரத்தான் - எஞ்சாது
விண்ணிலங்கொள் பொன்னிலங்கை வெற்றியாய்க்
[கொண்டாலும்
மண்ணிலங்கைத் தானமாய் வாங்குவோன் - பண்ணிலங்கும்

ஏரணி பொன்னரங்கத் தெம்பிரான் போல்எவர்க்கும்
தாரணி நல்காத தம்பிரான் — காரணியும்
செங்கைத் தலத்திடத்துந் தென்மதுரை யூரிடத்தும்
சங்கத் தழகனெனுந் தம்பிரான் — எங்கும்
திருப்பாது கைக்குஞ் செழுங்கருட னுக்கும்
திருப்பாது கைக்கும்அர சீந்தோன் — விருப்பமுகம்
சந்திரன் ஆன சவுந்தர வல்லியுடன்
சுந்தர ராசன்எனத் தோன்றினேன் — அந்தம்
சொலநலங்கொ டோள் அழகர் சுந்தரத் தோளன்
மலையலங் காரனென வந்தோன்—பலவிதமாய்

நண்ணியதெய் வத்தை நாரெல்லாம் பூசித்த
புண்ணியமே தன்னவந்து பூசித்தோன் - கண்அனைய
பாத கமலம் பரவுமல யத்துவசன்
பாத கமலம் பறித்திடுவோன்—கோதில்
அரணும் புயங்களுறும் அம்பரீ டற்குச்
சரணும் புயங்கள் தருவோன்—திருநாளில்

கோடைத் திருவிழா

சந்தக்கா வூடு தவழ்ந்துவருந் தென்றற்கால்
மந்தக்கா லாக மருவுங்காற் - சிந்திக்கும்
வாடைத் துளிபோன் மலர்த்தேன் றுளிதுளிக்குக்
கோடைத் திருவிழாக் கொண்டருளி - நீடுவிடைக்

Koviloor Digital Library

தல்லாகுளம் வருதல்

குன்றிலுற்ற வெள்ளங் கொழுந்தோடி வையைதனிற்
சென்றெதிர்த்து நிற்பதெனச் சீபதியோர் - அன்றெதிர்த்துக்
கூடலிற் கூடலெனுங் கூடற் றிருநகரில்
ஏடலர் தாரான் எழுந்தருளி - ஆடலுடன்
கல்லா குளங்கள் கரையப் பணிவார்முன்
தல்லா குளம்வந்து சார்ந்தருளி - மெல்ல

வையைக்கரைத் திருக்கண்களில் வைகுதல்

நரலோக மீது நடந்துவரு கின்ற
பரலோக மென்றுசிலர் பார்க்கச் - சுரலோகத்
திந்திரவி மானமிது என்றும் இதுசோமச்
சந்திரவி மானமே தானென்றும் - முந்தியவட்

டாங்க விமானம் அவையிரண்டும் என்னவே
தாங்கு விமானந் தனிற்புகுமுன் - தீங்கிலார்
உன்னி விமானம் உரத்தெடுக்கும் போதனந்தன்
சென்னிமணி யொன்று தெறித்தெழுந்த - தென்னலே
உம்பரில் வெய்யோ னுதயஞ் செயக்குதிரை
நம்பிரா னேறி நடந்தருளி - அம்பரத்திற்
கோடி கதிரோனும் கோடி பனிமதியும்
ஓடி நிரையா உதித்தவென - நீடிய
பொற்கொடியும் வெள்ளிக் குடையும் பொலிந்திலங்க
விற்கொடிகள் விண்ணோர் வெயர்துடைப்பர் - சொற்கத்

தியலுங் கரியுமதி லெற்று முரசும்
புயலும் உருமேறும் போலக்-கயலினத்தை
அள்ளுந் திரைவையை யாறுட் பரந்துநர
வெள்ளங் கரைகடந்து மீதூர - வள்ளல்
திருத்தகு மேகம்போற் செல்லுதலால் நீர்தூம்
துருத்தி மழைபோற் சொரியக் - கருத்துடனே
வாட்டமற வந்து வரங்கேட்கும் அன்பருக்குக்
கேட்டவரம் ஊறுங் கிணறுபோல் - நாட்டமுடன்
காணிக்கை வாங்க அன்பர் கைகோடி யள்ளியிடும்
ஆணிப்பொற் கொப்பரைமுன் ஞகவரக் - காணிற்

புரந்தரற்கு நேரிதென்று போற்றிசைப்ப வோரா
யிரந்திருக்கண் வையைநதி யெய்தி - உரந்தரித்த

Koviloor Digital Library

வண்டியூர் மண்டபம் வந்து தங்குதல்

வார்மண்டு கொங்கை மனம்போல் விலங்குவண்டி
யூர்மண்ட பத்தி னுவந்திருந்து - சீர்மண்டு

ஆதிசேட வாகனத்திற் பவனி வருதல்

மாயனுக்கு வாகனமாய் வாவென்று சேடனேததான்
போயழைக்க வெய்யோன் புகுந்திடலும் - தூயோன்
மருளப் பகலை மறைத்தவன் இப்போ
திருளப் பகல்செய்தா னென்னத் - தெருளவே
அங்கிக் கடவுளும்வந் தன்பருட னுடுதல்போற்
றிங்கட் கடவுள்சே விப்பதுபோற் - கங்குற்

165 கரதீப மும்வாணக் காட்சியுங் காண
வரதீப ரூபமாய் வந்த - திருமால்
அவனி பரிக்கும் அனந்தாழ்வான் மீது
பவனிவரக் கண்டு பணிந்தேன் – அவனழகிற்

மால்கொண்ட தலைவி கூற்று

பின்னழகு முன்னழகாம் பேரழகை காணுமுன்னே
முன்னழகைக் கண்டேனென் மோகித்தேன் - பின்னழகு
தானேகண் டாலுந் தனக்குத் துயர்வருமென்
றேனேரை நோக்கி யெழுந்தருள - ஆனேன்
விமலத் திருமுகமு மென்மார்பின் மேவும்
கமலத் திருமுகங் கண்டேன் - அமலன்

170 அரவணையா னென்பதுமுண் டண்ணல் அரன்போல
இரவணையா னென்பதுமுண் டேனும் - பரவைத்
திருவணையா னென்றுதினஞ் செப்புவது பொய்யென்றே
உருவணையு மாதர்க் குரைத்தேன் - மருவணையும்
செங்கரத்தில் அன்று திருடியவெண் ணெய்போலச்
சங்கிருக்க என்சங்கு தான்கொண்டீர்-கொங்கை
மலையருவி நீர்தானே சாற்றீர்—விலையிலாப்
பொற்கலை ஒன்றிருந்தாற் போதாதோ அன்றுபுனை
வற்கலையி லேவெறுப்பு வந்ததோ—நற்கலைதான்

175 ஆரஞ்சேர் கொங்கைக் களித்த தறியீரோ
சோரந் திரும்பத் தொடுத்தீரோ—ஈரஞ்சேர்
நூலாடை யாமெங்கள் நுண்ணுடை தாமுமக்குப்
பாலாடை யாமோ பகருவீர்—மாலாகி

Koviloor Digital Library

மொய்த்திரையும் எங்கள் மொழிகேளீர் பாற்கடலில்
நித்திரைதான் வேகவதி நீரிலுண்டோ-இத்தரையிற்
பொங்குநிலா வெள்ளம் பொருந்திற்றே பாற்கடல்தான்
அங்குநிலா தும்மோ டணைந்ததோ—கங்குலெனும்
ஆனை கெசேந்திரன் ஆகிலதன் மேல்வருவன்
மீனையும் விட்டு விடலாமோ—கானச்

சதிரிள மாதர் தமக்கிரங்கு வீர்நெஞ்
சதிரிளமா தர்க்கிரங்கொ ணுதோ—முதிர்கன்றைக்
கொட்டத்து வெண்பால் குளிந்துகறப் பார்முலையில்
விட்டுக் கறப்பதையும் விட்டீரோ—கிட்டப்போய்
மென்பால் தெறித்த வியன்முலையைப் பாற்குடமென்
றன்பால் எடுத்த தறியீரோ—மின்போல்வார்
செவ்விதழின் மேலே தெறித்தவெண்ணெ யுண்பதுபோல்
அவ்விதழை யுண்ட தயர்த்தீரோ—செவ்விதழை
குன்றன் றெடுத்தீர் குளிரும் அமு தங்கடைந்தீர்
சென்றன்று பாம்பில்நடஞ் செய்தீரே—என்றென்று

சோலைமலை யடைதல்

கொண்டபஞ் சாயுதன்மேற் கொள்கைபெறத் தேனூர்
மண்டபஞ் சார்வாய் வலங்கொண்டு—பண்டை
வீரசையுடன் வைகுந்த வீடும்இது என்னப்
புரசைமலை காத்தோன் புகுந்தான்—வரிசை
உபசாரங் கொண்டருளி ஓர்சிவிகை மீது
தபசாரஞ் சீபதியைச் சார்ந்தான்—இபமுண்ட

தலைவி தன் நிலைமை கூறுதல்

வெள்ளிற் கனியானேன் வேதனை யின்றவன்ருன்
உள்ளிற் கனியானே ஊர்ந்துவரும்—பிள்ளைமதி
செவ்வை மதியோ திரைக்கடல் வாய்சிறிதோ
கொவ்வையித ழார்மொழிதான் கூற்றன்றே - எவ்வமுறும்

காற்றேரி னுனும்ஒரு காலன்அன் றேவுருக்கி
ஊற்றுத சேமணியும் ஒன்றுண்டோ—வேற்றுக்
கினையோடு வாடிக் கிடந்தாலுஞ் சுட்டுத்
துனையாக் குழலும் உண்டோ சொல்வாய்—கிளியரசே

தலைவி கிளிக்கு முகமனுரை மொழிதல்

என்கூடு பொன்கூடும் இந்த நிறத்தினுல்
உன்கூடும் என்கூடும் ஒன்றுகாண்—என்கூட்டில்

Koviloor Digital Library

மாங்கனி யுண்டு வளஞ்சேர் செழுங்கொவ்வைத்
தீங்கனி யுண்டா சினியுண்டு—பாங்கிற்
குழையுமன முண்டு குழம்பிய பாலுண்
டுழையே தெளிபாலு முண்டு—விழைவறிந்

195 தூட்டுவேன் உன்னே யுருப்பசியா யென்னநலங்
காட்டுவேன் பட்டாடை யாற்றுடைப்பேன் - கூட்டில்
அரசா யிருத்தியா லத்தி யெடுத்துப்
புரைதீர் நறையும் புகைப்பேன் - அருகே
இளவெயிலிற் காய்வித் தெடுத்தொருகான் முத்தி
வளபயில் கையின்மேல் வைத்துத் - துளபமணி
ஈசன் றிருநாம மெல்லாம்என் போல்எனக்குப்
பாசந் தொலையப் பயிற்றுவேன் - பேசென்றே

வேறு பறவை தூது கூரு வென்றல்

ஈடுபட்ட வெள்ளே எகினத்தைத் தூதுவிட்டாற்
சூடுபட் டார்துணிந்து சொல்வாரோ - கூடுகட்டி

200 அன்பாய் வளர்த்ததா யார்க்குதவாக் கோகிலந்தான்
என்பா லருள்வைத் தியம்புமோ - தன்பேர்
அரியென்று சொன்ன லளியென்று சொல்லும்
வரிவண்டு பேசி வருமோ - விரகஞ்செய்
வன்கால திக்கின் மலைவா யிருக்கின்ற
தென்காலும் என்காதல் செப்புமோ - பொன்காதல்
வண்டலையுந் தாரான்முன் மாதரையெல் லாந்தூற்றும்
கொண்டலையுந் தூதுவிடக் கூடுமோ - உண்ட
படியேழுங் காக்கும் பரங்கருணே யான்முன்
கொடியோரும் போவாரோ கூரும் - அடியார்கள்

தத்தையே ! நீதான் தகுதி என்றல்

205 அங்கிருந்தாற் கீர்த்தனஞ்செய் வாயடுத்த நாச்சியார்
பங்கிருந்தாற் கையிற் பறந்திருப்பாய் - எங்கிருந்து
வந்தாயென் ருன்மா லிருஞ்சோ லையிலிருந்
தெந்தா யுனேத்தொழவந் தேனென்பாய் - அந்தச்
சவுந்தர வல்லியெனுந் தற்சொரு பிக்கும்
உவந்தலர்சூ டிக்கொடுத்தா ளுக்கும்—சிவந்த
கடுகிலே சங்கோபங் காணுமெ லென்மால்
வடுகிலே சொல்வாய் வகையாய்—அடுகிலே
சங்கெடுப்பாய் சங்கெடுக்குஞ் சச்சிதா னந்தரணி
கொங்கெடுக்குந் தாமங் கொடுவருவாய்-அங்கடுக்கின்

Koviloor Digital Library

இடமும் அமையமும் எடுத்துரைத்தல்

ஒருகத்தில் ஆலாகி யோருகத்தி லேஅரசாய்
ஒருகத்தி லேவில் லுவமாகி—ஒருகத்திற்
புத்திர தீபமுமாய்ப் புங்கவர்க்கா ருந்தருவாய்ச்
சத்தி தருமோர் தருவுண்டு—மொய்த்த
ஒருகோடி காவுண் டொருகோடி யாறுண்
டொருகோடி பூஞ்சுனையு முண்டு—திருமால்
அறங்காக்கும் யோகிகள் போல்அல்லும் பகலும்
உறங்காப் புளிதானும் உண்டு—திறஞ்சேர்
பிதாமக னெடுறையும் பெற்றி விளங்கப்
பிதாமகன் வந்துபுகழ் பேசச் —சதாகால

முந்திரமாய் வாழும் உபேந்திரனங் கில்லையென
இந்திரனர் வந்தங் கினிதிறைஞ்சப்—பிந்திய
தம்பியர் மூவருக்குந் தானே யரசீந்த
நம்பி திருத்தாளை நம்பினேர்—வெம்பிறவித்
தேகம் பவித்திரஞ்செய் சீரங்க ராசபட்டர்
ஆகும்ப்ர சித்தராம் அர்ச்சகரும்—மோகமுறும்
கங்குன் மலமாயை கன்மம் விளங்காமற்
செங்கையி லோங்குதிரி தண்டேந்திச்—சங்கையறச்
செய்யுந் திருமா லிருஞ்சோலைச் சீயரென
வையம் விளங்கவரு மாதவரும்—பொய்யில்லா

ஞானதீ பங்காட்டி நன்னெறிகாட் டென்றெருப
மானதீ பங்காட்டி வந்துநின்று—மேனாளில்
முத்தமிழ்க்குப் பின்போவார் முன்போகப் பின்போன
அத்தன் திருமாலை யாண்டானும்—பத்தியினல்
வையங்கார் வண்ணனையே வாழ்த்தவருந் தோழப்
பையங்கா ரென்னும்ஆ சாரியரும்-மெய்யன்பாம்
சிட்டர்க டேவர்க ளாகத் தினம்பரவும்
பட்டர்க ளாம்வேத பாரகரும்—விட்டுவெனும்
சோதிகரு ணைக்கடற் ரோன்றிக் கரசர
ரதியுடன் வந்த அமுதாரும்—மூதுலகிற்

றண்ணந் துழாயழகன் றங்குந் திருமலைபோல்
நண்ணுந் திருமலை நம்பிகளும்—உண்ணின்ற
மாலைமலை சோலை மலையையே நம்புதலாற்
சோலைமலை நம்பியெனுந் தூயோரும்—மேலை
விரிஞ்சன் முதலோர்க்கும் விட்டுப் பிரசாதம்

Koviloor Digital Library

தருஞ்சட கோபநம்பி தாமும்—பெருஞ்சீர்
வரியெழுதிக் கற்றதிரு மாலிருஞ் சோலைப்
பிரியரெனுஞ் சீர்கருணப் பேரும்—கிரியிலிருந்
தாளுங் கடவுள் அருளே துணையாயெந்
நாளுஞ்சீ காரியஞ்செய் நாயகரும்—தாள்வணங்க

ஆர்த்ததிரு வோலக்க மாயிருப்பன் அப்பொழுதுன்
வார்த்தை திருச்செவியில் வாயாது—சேர்த்தியிலே
மெல்ல ஏழுந்தருளும் வேளைபார்த் தவ்வேளை
சொல்ல எழுந்தொருவர் சொல்லாமுன்—வெல்லுமதன்
அம்பலர் தூற்ற அடர்த்து வருமுன்னே
வம்பலர் தூற்ற வருமுன்னே—கும்பமுனி
வாயி னுரையடங்க வந்த கடலடங்கத்
தாயின் உரையடங்கத் தத்தையே—நீயுரையாய்

மருமாலை வாங்கி வா என்றல்

உன்பேர் சுவாகதரென் ரேதுகை யாலுனக்கும்
அன்பேர் சுவாகதமுண் டாகுங்காண் - முன்பொருநாள்

கோசலை கையிற் குருசில் உனைப்புகழ்ந்து
பேசின் உனைப்புகழ்ந்து பேசாரார்—நேசமுடன்
எம்முடைய மாலை இருபுயத்து மாலைகேள்
உம்முடைய மாலை உதவீரேல்—அம்மைதிருக்
கோதையார் சூடிச் கொடுத்து வரவிட்ட
தாதையார் மாலைதனைத் தம்மின் என்பாய்—நீதி
அடுப்பவர் யாவர்க்கும் ஆடித் தியாகம்
கொடுப்பவன் இல்லையென்று கூருன்—தடுக்கும்

அருமாலை நீக்கும் அழகன் புயத்து
மருமாலை நீவாங்கி வா.

Koviloor Digital Library

ஒட்டக்கூத்தர்

விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இராசராசன் ஆகியோர் மீது முறையே பாடப்பட்டுள்ள விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராச சோழனுலா என்ற 'மூவருலா' வையும் பாடியவர் ஒட்டக்கூத்தர் என்பவராவார்.

ஒட்டம்+கூத்தர்: ஒட்டக்கூத்தர். ஒட்டம் (பந்தயம்) வைத்துப் பாடி வெற்றி பெற்ற கவியாற்றல் காரணமாக இவர் 'ஒட்டக்கூத்தர்' என்று பெயர் பெற்றார். இவர் சோழவளநாட்டிலுள்ள மலரி என்ற ஊரினர்; செங்குந்தமரபினர். இவரது காலம் கி. பி. 12 - ஆம் நூற்றாண்டு. கவிராட்சசன், கவிச்சக்கரவர்த்தி. காளக்கவி, சருவக்ஞகவி, கௌடக்கவி என்பன இவரது சிறப்புப்பெயர்களாம். இவர், தக்கயாகப்பரணி, ஈட்டியெழுபது, குலோத்துங்கசோழன்உலா முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

குலோத்துங்க சோழனுலா

பாட்டுடைத்தலைவன் ஒருவன் உலா வருங்காலத்தில், அவனைக் கண்டு, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பருவமகளிர் அவன் மீது காதல் கொண்டு மயங்கிப் பேசுவதாகக் கற்பனை செய்து பாடுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும். இது கலிவெண்பாவினால் பாடப்படுவது.

சோழகுல வேந்தர்களில் முதலாம் குலோத்துங்கன் கி.பி. 1070-இல் முடிசூடி அரசுபுரிந்தவன். இவன் மகன் விக்கிரமசோழன். இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன். இவன்மீது பாடப்பட்ட நூலே 'குலோத்துங்கசோழன் உலா! இந்நூலில், எழுவகைப் பெண்களின் உடல் வளம், மனநலம், உரையாடல், செயல் ஆகியன பாடப்-பட்டுள்ளன. மற்றும், குலோத்துங்கனுடைய வீரம், கொடை, முதலிய பண்பு நலன்களும், போர்ச்செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூல் 387 கண்ணிகளை (774 அடிகளை) உடையது.

உ

திருச்சிற்றம்பலம்

குலோத்துங்கசோழ னுலா

தேர்மேவும் பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவும் பாற்கடற் பூத்தனையோன் - பார்மேல்
மருளப் பசுவொன்றின் மம்மர்நோய் தீர
உருளுந் திருத்தே ருரவோன் - அருளினுற்
பேராப் பெரும்பகை தீரப் பிறவேந்தர்

Koviloor Digital Library

ஊராக் குலிச விடையூர்ந்தோன் - சோராத்
துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர்
எயில்காத்த நேமி யிறையோன் - வெயில்காட்டும்
அவ்வா னவர்கோ னெருமணி யாசனத்தில்
ஒவ்வாம லேத்த வுடனிருந்தோன் - கவ்வை

எழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற்ப
வழக்குரைக்குஞ் செங்கோல் வளவன் - பழக்கத்தாற்
போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த வுலகாண்ட மன்னர்பிரான் - காந்தெரியில்
வெந்தா ருயிர்பெற் றுடல்பெற்று விண்ணுள
மந்தாகினி கொணர்ந்த மன்னர்கோன் - முந்திப்
பொருதேர்க ளீரைந்தி னீரைவர் போர்பண்
டொருதேரால் வென்ற வுரவோன் - கருதி
மலைபத்தும் வெட்டு முருமின் மறவோன்
தலைபத்தும் வெட்டுஞ் சரத்தோன் - நிலைதப்பா

மீளி தலைகொண்ட தண்டத்தான் மீளிக்குக்
கூளி தலைபண்டு கொண்டகோன் - நாளும்
பதுமக் கடவுள் படைப்படையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன் - பொதுமட்க
வாங்கெயி னேமி வரையாக மண்ணுண்டு
தூங்கெயில் கொண்ட சுடர்வாளோன் - ஓங்கிய
மால்கடற் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன் - கோல்கொன்
றலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறிய மன்னாக்கு மன்னன் - நிலையறியாத்

தொல்லார் கலிவலையந் தோள்வலைய முன்றிருந்த
வில்லா லடுவுள்ள வெற்பெடுத்தோன் - ஒல்லைக்
கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத்
துலையேறி வீற்றிருந்த தோன்றல் - தலையேறு
மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னி கரிகாலன் - எண்கொள்
பணம்புணர்ந்த மோலியான் கோமகளைப் பண்டு
மணம்புணர்ந்த கிள்ளி வளவன் - அணங்கு
படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன் - அடுத்தடுத்துச்

சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றெண்ணூறும்
ஆறும் படுதழும்பி னகத்தோன் - ஏறப்

Koviloor Digital Library

பிரம வரக்க னகலம் பிளந்து
பரமர் திருத்தில்லை பார்த்தோன் - நரபதியர்
தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியும்
ஈழமுங் கொண்ட விகலாளி - சூழவும்
ஏறிப் பகலொன்றி லெச்சுரமும் போயுதகை
நூறித்தன் னூதனை நோக்கினேன் - வேருகக்
கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியர்கோன் - எங்கோன்

புவிராச ராசர் மனுமுதலோர் நாளில்
தவிராத சுங்கந் தவிர்த்தோன் - கவிராசர்
போற்றும் பெரியோ னிவன்பின்பு பூதலங்கள்
ஆற்றுந் திருத்தோ ளகளங்கன் - வேற்றூர்
விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமான் - தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கள்
முற்றப் புரக்கு முகில்வண்ணன் - பொற்றுவரை
இந்து மரபி லிருக்குந் திருக்குலத்தில்
வந்து மனுகுலத்தை வாழ்வித்த - பைந்தளிர்க்கை

மாதர்ப் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
காதற் பெயரன் கனகளபன் - யாதினும்
நீட்டற் கரிய திருவே திருமாலே
சூட்டத் திருமகுடஞ் சூடியபின் - நாட்டு
முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தஞ்
சிறைவிட் டரசருளிச் செய்து - கறைவிட்டு
மைஞ்ஞாக மெட்டு மதநாக மோரெட்டும்
பைஞ்ஞாக மெட்டும் பரந்தீர - இஞ்ஞாலம்
தாதைக்குப் பின்பு தபனற்குந் தோலாத
போதத் திமிரப் பொறைநீக்கி - மாதரில்

ஒக்க வபிடேகஞ் சூடு முரிமைக்கண்
தக்க தலைமைத் தனித்தேவி - மிக்க
புவனி முழுதுடைய பொற்றொடியுந் தானும்
அவனி சுரர்சுருதி யார்ப்ப - நவநிதிதூய்
ஏத்தற் கருங்கடவு ளெல்லையி லானந்தக்
கூத்துக் களிகூரக் குப்பிட்டுப் - போத்தின்மேல்
தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து - மல்லல்

Koviloor Digital Library

தசும்பு வளர்கனித் தண்பெரு நாவல்
அசும்பு பசும்பொ னடுக்கிப் - பசும்பொன்

அலகை யிகந்த வசலகுல வச்சிரம்
பலகை ததும்பப் பதித்து - மலர்கவிகை
காக்குங் கடலேழின் முத்தும் வரகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி - நோக்கம்
தொடுக்கஞ் சிரச்சேடன் சூடா மணிகொண்
டெடுக்குந் திருத்தீப மேற்றி - அடுக்கிய
தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மரகதத்தாற் பாசடையாய்த் - தூய
பருமுத்தா லாலியாய்ப் பற்பரா கத்தால்
திருமிக்க செந்தா மரையாய்ப் - பெருவர்க்க

நீலத்தால் வண்டி னிரையா யுரையிகந்த
கோலத்தாற் கோயில் பணிகுயிற்றிச் - சூலத்தான்
ஆடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுர
மாடம் பரந்தோங்கு மாளிகையுங் - கூடிப்
பொலங்கோட்டு மாமேரும் பூதரமும் போய
வலங்கோட் டிகிரியு மானத் - தலங்கொள்
நிலையேழு கோபுரங்க ணேரே நெருங்க
மலையேழு மென்ன வகுத்துத் - தலையில்
மகரங்கொள் கோபுரங்கண் மாக விமானச்
சிகரங்க ளாகித் திகழ - நிகரில்

எரிபொற் படர்பாறை யென்னலா யெங்கும்
விரிபொற் றிருமுற்ற மின்னச் - சொரிபொற்
கடாரம் பனிநீர் கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப - விடாது நின்
றற்பக லாக வனந்த சதகோடி
கற்பக சாதி கதிர்கதுவப் - பொற்பூண்
வரமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்த
சுரமகளி ராகித் துறம - ஒருதான்
பிறக்கு மிமயப் பெருங்கடவுட் குன்றம்
மறக்கும் படிசெல்வ மல்லகச் - சிறக்கும்

இருக்காதி யெம்மறையு மெவ்வுலகு மீன்ருள்
திருக்காமக் கோட்டத் திகழ்வித் - தருக்கர்
புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
மனையாலோ ரோர்தேர் வகுத்து - முனைவன்
திருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்

Koviloor Digital Library

பெருவீதி நாணப் பிறக்கி - வருநாளிற்
பொங்கார் கலிசூழ் புவனம் பதினெலும்
கங்கா புரிபுகுந்து கண்டுவப்பத் - தங்கள்
புவனி பெறவந்த பூபாலர்க் கெல்லாம்
பவனி யெழுச்சி பணித்துக் - கவினும்

மடமயி லொக்க மகுடங் கவித்தாள்
உடனுறை பள்ளி யுணர்ந்து - தடமுகில்
அஞ்சன சைலத் தபிடேகஞ் செய்வதென
மஞ்சன மாடி வழிமுதற் - செஞ்சடை
வானவன் பொற்றுள் வணங்கி மறையவர்க்குத்
தான மனைத்துந் தகைபெறுத்தி - வானிற்
கிளைக்குஞ் சுடரிந்த்ர நீலக் கிரியை
வளைக்கு மிளநிலா மானத் - திளைக்கும்
உருவுடை யாடை தவிர்த்தொரு வெள்ளைத்
திருவிடை யாடை திகழ்த்தி - ஒருபுடைப்

பச்சை யுடைவாள் விசித்த தொருபசும்பொற்
கச்சை நவரத்னக் கட்டெறிப்ப - வச்ர
வெருவுதர வெல்லா விரவிகளும் வீழத்
திருவுதர பந்தனஞ் சேர்த்தித் - திருமார்பிற்
கார்க்கடன் மீதே கதிர்முத்தத் தாமங்கள்
பாற்கடல் போர்த்த தெனப்பரப்பிப் - பாற்கடல்
வந்த வனச மகளேபோன் மற்றது
தந்த கடவுண் மணிதயங்கப் - பந்தச்
சுரகனகத் தோள்வலையஞ் சூட்டுக் கவித்த
உரக பணமணி யொப்ப - விரவி

மகரக் குழைதோண்மேல் வந்தசைவ மேருச்
சிகரச் சுடர்போற் றிகழ - நிகரில்
முடியின் மணிவெயிலும் முத்தக் குடையில்
வடியு நிலவு மலையப் - படியில்
வயங்கு கடக மகுடாதி மின்னத்
தயங்கு பெரும்போதி சாத்தி - முயங்கிய
செவ்வி நுதலிற் றிருநீற்றுப் புண்டரம்
வவ்வி மகளிர் மனங்கவற்ற - நொவ்விய
நாவியு மான்மதச் சாந்து நறையகில்
ஆவியு மாகண் டமுமளப்பத் – நீவிய

Koviloor Digital Library

தோண்மாலே வாசக் கழுநீர் சுழல்சோதிக்
கோண்மாலே கூசக் குளிர்கொடுப்ப - நாண்மாலே
வேந்தர் தொழுதிறைஞ்ச வேதிய ரேத்தெடுப்பப்
போந்து புறநின்ற போர்க்களிற்றை - வேந்தரில்
மாக்காதல் யாதவனும் மாறழித்த மீனவனும்
வீக்காம லெங்குள்ள மெய்ம்முகிற்கும் - கோக்கடவுட்
கெட்டாத வச்சிரமு மெல்லா வுருமேறும்
வெட்டாம லெங்குள்ள வெற்பினுக்கும் - முட்டா
முதுவாய் வடவையு முந்நான்கு கோளும்
கதுவாம லெல்லாக் கடற்கும் - பொதுவாய்

அபயங் கொடுக்கு மயிரா பதத்தை
உபய வயக்கோட் டுருமை – விபவ
நிருத்தந் தருமோர் நிதிப்பொருப்பைக் கண்ணுற்
றெருத்தந் திருக்கவின வேறித் - திருத்தக்க
பள்ளித் திருத்தொங்கற் சோலே பகல்விலக்க
வெள்ளிக் கவிகை மிசையோங்க - ஒள்ளிய
ஒற்றை வலம்புரி யூத வதன்பின்பு
மற்றை யலகில் வளே கலிப்பக் - கற்றைக்
கவரி யிரட்டக் கடவுள் முரசார்த்
துவரி யுவாவாடி யொப்ப - அவிர்வாளும்

சங்குந் திகிரியுஞ் சார்ங்கமுந் தண்டமும்
எங்குஞ் சுடர்விட் டிருள்களேயக் - கொங்கத்து
விற்கொடியு மீனக் கொடியுங் கொடுவரிப்
பொற்கொடி யொன்றின் புடைபோதத் - தெற்கின்
மலேயா னிலம்வரவே வார்பூங் கருப்புச்
சிலேயான் வரவு தெரியத் - தொலேயாது
வீசுந் திவலே விசும்புகூர் மங்குலால்
வாசவன் வந்த வரவறியக் - கூசாதே
யாவ ரொழிவா ரிவன்வரவே மற்றுள்ள
தேவர் வருவ ரெனத்தெளிய - யாவர்க்கும்

பின்னர் வழங்கு முழங்கு பெருங்களிற்றுத்
தென்னர் முதலானேர் சேவிப்ப - முன்னர்ப்
பரவி யுலகிற் பலமண்ட லீகர்
புரவி மிசைகொண்டு போத - அருவிபோல்
விட்டு மதம்பொழியும் வேழந் திசைவேழம்
எட்டு மொழியப் புகுந்தீண்டக் - கட்டி

Koviloor Digital Library

இரவிக்கு நிற்பன வேழு மொழியப்
புரவிக் குலமுழுதும் போத - விரவி
உடைய நிதிக்கடவு ளூர்தி யொழிய
அடைய நரவெள்ள மார்ப்ப - விடையே

எழுந்த துகளுருவ வேறியுஞ் சுண்ணம்
விழுந்த துகளுருவ வீழ்ந்துந் - தொழுந்தகைய
விண்ணுலகு மண்ணுல காகி விளங்கவிம்
மண்ணுலகு பொன்னுலகாய் மாருட - எண்ணரிய
மாகதரும் மங்கலப் பாடகரும் விஞ்சையர்
பூகத ராயினர் போற்பரவ - நாகர்
கொழுந்தெழு கற்பக சாதி குவித்துத்
தொழுந்தொறும் மன்னர் சொரிய - எழுந்துள
கைம்மழை யென்னக் கனகப் பெயறூர்த்து
மைம்மழை மாட மறுகணைந்தான் - தம்முடைய

சாலி தொறுந்திரள்வார் சாளரங்கள் கைக்கொள்வார்
மேலி நிலாமுற்ற மேற்றெருவார் - மாலிதாழ்
தெற்றி யடைய மிடைவார் சிலர்பலர்
நெற்றி சுருங்க நெருங்குவார் - பொற்றெடியார்
மாளிகையி லேறுவார் மண்டபத்தின் மண்டுவார
சூளிகை மாடந் தொறுந்துறுவார் - நீளும்
இரண்டு மருங்கினு மிப்படி மொய்ப்பத்
திரண்டு பலரெதிரே சென்று - புரண்ட
கரும்புருவ வல்வில்லுங் கண்மல ரம்பும்
பெருப்புவன வெல்லி பிடிப்பச் - சுரும்பு

நிரைக்கு நிரைமுரல நீலக் குழாங்கள்
இரைப்பின் மொகுமொகு வென்ன - விரைச்சுருள்
மேகா களங்கள் மிஞிறுவாய் வைத்தூதக்
காகாள மென்னும் படிகவிப்பப் - போகத்
தகரங் கமழ்கதுப்பிற் குழ்குழை தோடாழ்
மகரம் பிறழ்கொடிமின் வாய்ப்ப - இகலனங்கன்
சேனை சமூகந் தெரிப்ப வதனெதிர்
சேனை பராக மெனத்திகழப் - பூநாறும்
சுண்ண மெதிர்தூ யுடனே தொடியுந்தூய்
வண்ண மிழப்பார் மனமிழப்பார் - மண்ணுலகில்

இன்னற் பகைவ னிவன்கா ணகளங்கன்
மன்னர்க்கு மன்னன் மகனென்பார் - முன்னர்

Koviloor Digital Library

முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகிசே யென்பார் - குதுகலத்தாற்
கண்மருஞ் செவ்விக் கடவுட் டிசாதேவர்
எண்மருங் காணு மிவனென்பார் - மண்ணவர்க்குத்
தேவர்க்கு நாகர்க்குந் தெய்வ முனிவர்க்கும்
யாவர்க்குங் காவ லிவனென்பார் - தீவிய
மாதவியுஞ் செங்கழு நீரும் வலம்புரியும்
தாதகியுங் கொள்ளத் தரினென்பார் - மாதை

ஒறுக்கும் மிதிலை யொருவில்லைத் தொல்லை
இறுக்கு மவனிவ னென்பார் - மறுக்காமற்
சென்று கனகட றூர்த்துத் திருக்குலத்து
நின்ற பழிதுடைப்பாய் நீயென்பார் - இன்றளவும்
துஞ்சுந் துயிலிழந்த தண்டார் குழற்றுளையில்
நஞ்சுங் குமிழியெழு நாளென்பார் - பஞ்சவனே
வாடையினுந் தண்ணென்னும் மந்தா நிலமெமக்குக்
கோடையினுந் தீது கொடிதென்பார் - கூடி
முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணுற்
பருகுவார் போல்வீழந்து பார்ப்பார் - பொருமதனன்

பார்த்தானை புங்கானு புங்கம் படப்பகழி
தூர்த்தானை யாதென்று சொல்லுகேம் - ஆர்த்தான்
உளைத்தான் சிலையிக் கொருகோடி கோடி
வளைத்தா னரும்புலகின்ற மாய்த்தான் - இளைத்தார்
இனையர் பலர்நிகழ வீங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை - கனைமுகினேர்
ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை - சூடத்
தளிராத சூதந் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி - அளிகள்

இயங்காத தண்கா விறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி - தயங்கிணர்க்
கூழைச் சுருண்முடிக்கக் கூடுவதுங் கூடாதாம்
ஏழைப் பருவத் திளம்பேதை - சூழும்
நிலைத்தாய வெள்ள நெருங்க மருங்கே
முலைத்தாயர் கைத்தாயர் மொய்ப்பத்-தலைத்தாமம்
தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனை
மிக்க பராந்தகனை மீனவனைப் - புக்கார்
வணங்க வணங்கி வழுத்த வழுத்தி
அணங்க வணங்கா ளகலாள் - குணங்காவல்

Koviloor Digital Library

மன்னன் புனையுந் திருமுத்த மாலையை
அன்னம் படிந்தாட வாறென்னும் - பின்னவன்
கோவைத் திருப்பள்ளித் தொங்கற் குழாங்கிளிக்கும்
பூவைக்கு நல்ல பொழிலென்னும் - பாவை
அயிர்க்கு மிறுகோட் டயிரா பதத்தை
மயிற்கு மலியென்னு மன்னும் - குயிற்கிளவி
தேன் வாழுந் தாமஞ்சூழ் தெய்வக் கவிகையை
மான்வாழும் மாசின் மதியென்னும் - கோனுடைப்
பாங்குவளீ யாழிப் பார்மடந்தை தன்னுடைய
பூங்குவளீ மாலி புனைகென்னும் - தேங்கமலத்

தற்புத வல்லி யவளே பிறந்துடைய
கற்பக மாலையைக் காதலிக்கும் - பொற்பார்
பொலம்புரி காஞ்சிப் புகழ்மகட்கே தக்க
வலம்புரி மாலிக்கு மாழ்கும் - பொலன்ரெடி.
போரார வாரப் பொலன்கொடி பெற்றுடைய
பேரார மாலிக்குப் பேதுறும் - நேரியன்
ஏந்திழை மாத ரெவர்க்கும் பொதுவாய
பூந்துழாய் மாலி புனைகென்னும் - வேந்தன்முன்
இவ்வகை யல்ல திலங்கிழையார் மால்கூரும்
அவ்வகை கூரா ளயலொருத்தி - எவ்வுலகும்

முற்ற முடிக்க முடிக்காம வேள்சூட்டும்
கொற்ற முடியனைய கொண்டையாள் - அற்றைநாள்
சாத்து மபிடேகத் தாரைபோற் ருழ்கின்ற
கோத்த பருமுத்தக் கோவையாள் - தேத்து
விடம்போற் பணிகட்கு வேழங்கட் கெல்லாம்
கடம்போற் கொலியூறுங் கண்ணுள் - அடங்கா
வயிர்ப்பான் மறலி மகளுருக்கொ லீதென்
றயிர்ப்பா ரயிர்க்கு மழகாள் - உயிர்ப்பாவை
கொல்லிக்கு முண்டுயி ருண்மைத்ரி கூடத்துச்
சொல்லிக் கிடக்குந் துணைமணிக்கும் - வல்லி

இதற்கு நடைவாய்த் துயிர்வாய்த்த தென்ன
மதர்க்கு மொருதிரு மாது - முதற்றன்
பணிவாயி லாயம் பரந்தகலக் கிள்ளைக்
கணிவாயின் முத்த மருளி - மணிவாயாற்
சொல்லா யெனக்கன்னி சொல்லாயோ நீயன்றே
வல்லாய் பிறவறிய வல்லவோ - கல்லரணக்
கோழித் திருநகரக் கொற்றவற்கு வெற்றிப்போர்

Koviloor Digital Library

ஆழித் தடக்கை யபயற்கு - வாழியாய்
காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ
ஆக்கு நதியேழு மாரமோ - தேக்கிய

பண்ணேழுங் கன்னுவ தங்கிசமோ பண்டளந்த
மண்ணேழும் வாரு வலயமோ - தண்ணறுந்
தூவ னறவப் பொழிலேழுந் தொங்கலோ
காவன் மலியேழுங் கந்துகமோ - ஏவலாற்
செய்யு நலனுடைய கோளேழுந் தீபமோ
பெய்யு முகிலேழும் பேரியமோ - வையகம்
கூறு மவையிவை யென்று குறுந்தொடி
வேறு தனிவினவும் வேலைக்கண் - சீறும்
ஒருத னடியின் மடிய வுபய
மருது பொருத வயவன் - விருதன்

விலையி லமுத மதவ விமலை
முலையின் முழுகு முருகன் - வலைய
கனக சயில வெயிலி கணவன்
அனக னதுல னமலன் - தினகரன்
வாசவன் றென்னன் வருண னளகேசன்
கேசவன் பூச்சக்ர கேயூரன் - வாசிகை
ஆழிப் பெருமா னபய ननபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும் - தாழாது
சென்ரு டிருமுன்பு செந்தளிர்க் கைகுவித்து
நின்ரு ளினிவறிதே நிற்குமே - என்ரு லும்

கோடு கழல்கண்டல் கொண்டற்கு மாலதி
ஓடு நகாதே யுடையாதே - பீடுற
வந்து தொடுங்குன்ற வாடைக் கிளங்கொன்றை
கொந்து தொடாதே குழையாதே - செந்தமிழ்த்
தென்ற லெதிர்கொண்ட தேமாங் கொழுங்கன்று
மன்றல் கமழாதே வாழாதே - என்றுபோய்
சூதள வல்ல துணைமலி தூயகண்
காதள வல்ல கடந்தனபோய் - மாதர்
உருவத் தளவன் ருெளியோக்க மாக்கம்
பருவத் தளவன்று பாவம் - தெருவத்

துடைய துடையாதா முள்ள முறவோர்ந்
தடைவ தடையாதா மச்சம் - கடைகடந்து
சேயினு நல்ல பெருமா டிருத்தடந்தோள்

Koviloor Digital Library

தோயினுந் தோய மனந்துணியும் ஆயினும்
எந்து தடந்தோ ளிணைப்பணைப்புக் கண்டிலன்
காந்து தனதடங் கண்டிலன் - பூந்தடந்
தேரி னகலுத் திருந்தல்குல் கண்டிலன்
காரி னெகிழளகங் கண்டிலன் - மாரவேள்
எய்யு மொருகருப்பு வல்வில் லெடுத்தானே
கொய்யு மலரம்பு கோத்தானே - தையன்மால்

மந்தா கினிக்கோன் றிருப்புருவ வார்சிலையும்
செந்தா மரைக்கண்ணுஞ் செய்ததென - நொந்தார்
வளைத்தளிர்ச் செங்கை மடுத்தெடுத்து வாசக்
கிளைத்தளிர்ப் பாயற் கிடத்தித் - துளைத்தொகை
ஆய்க்குழ லென்ரு லதுவு மவனுதும்
வேய்க்குழ லென்று விளம்பியும் - தீக்கோள்
நிகழ்நிலா வன்று நிருபகுல துங்கன்
புகழ் நிலா வென்று புகழ்ந்ததும் - இகலிய
பல்லிய மன்று பரராச கேசரி
வல்லிய மென்று மருட்டியும் - மெல்லிய

கல்லார மன்று கதிரேரன் றிருமருமான்
மெல்லார மென்று விளம்பியும் - நல்லார்
அருத்தி யறிவா ரவையிவை யென்று
திருத்தி விடவிடாய் தீர்ந்தாள் - ஒருத்தி
உருவ வரிக்க ணெழுக வொழுகப்
புருவ முடன்போதப் போத - வெருவி
வனமுலை விம்மி வளர வளரப்
பூனதோள் புடைபோதப் போத - வினைவர்
அருங்கலி யல்கு லகல வகல

மருங்குபோ யுள்வாங்க வாங்க - நெருங்கு
பரவர ராச பயங்கரன்மேல் வேட்கை
வரவர வாற்ருத மங்கை - பொரவரு
தேமிரைக்குங் காலியின் ஞாயிற் றிளஞ்செவ்வி
தாமரைக்கே சாலுந் தரத்ததோ - காமர்
அமுத மதியத் தலர்நிலா முற்றும்
குமுத நறுமுகைக்கே கூரே - நமதுகார்
காவின் மடமயிற்கே காணியோ தண்ணிள
வேனில் குயிற்கோ விதித்ததோ - தேனிமிர்
தண்டா மரையா டலிவனே யாழும் போய்க்
கண்டாலென் னென்னுங் கடைப்பிடியாள் - பண்டை

Koviloor Digital Library

ஒளியா ரணங்காத நம்மைத்தா மொன்றும்
தெளியாத வாறே தெளிந்தும் - களியன்னம்
வாவிக் கரையில் வரநீ ரரமகளிர்
சேவிக்க நின்ருடுஞ் செவ்வியாள் - காவிற்
புகுதில் வனதெய்வப் பூங்குழை யாயத்
தொகுதி புடைபரந்து சூழ்வாள் - மிகுதே
னிரையர வந்தரு செய்குன்ற நீங்கா
வரையர மாதரின் வாய்ப்பாள் - பெருவிலைய
முத்தில் விளங்கின் முளரித் தவளப்பூங்
கொத்தி னணங்கனைய கோலத்தாள் - பத்திய

பச்சை மரகதம் பூணிற் பணைமுலைசூழ்
கச்சை நிலமகள்போற் காட்சியாள் - நிச்சம்
உரக பணிமணிகொண் டொப்பிக்கி லொப்பில்
வரகமலை யன்ன வனப்பாள் - நரபதி
மைம்முகில் வண்ணத்து வானவன் மீனவன்
கைம்முகில் மேல்வரக் கண்டதற்பின் - மொய்ம்மலர்
நீலமே வேய்ந்தடுக்க நீலமே பூண்டுடுக்க
நீலமே யன்றி நினையாதாள் - நீலமே
முன்னுடைய செங்கே ழெறிக்கு முறிக்கோலம்
தன்னுடைய மாமை தழீ இக்கொள்ளப் - பின்னர்

நெருங்கு கழுநீரும் நீலோற் பலமும்
ஒருங்கு மலர்தட மொத்தும் - மருங்கே
இறங்கிய கற்பக வல்லியு மேறி
உறங்கிய தும்பியு மொத்தும் - பிறங்க
வயங்கு தளிரீனு மாங்கொம்பர் பூக்கொண்
டுயங்கு கருவிளை யொத்தும் - தயங்குவாள்
கோலத்தார் மௌலிக் குலோத்துங்க சோழற்கு
ஞாலத்தா ரெல்லார்க்கு நாயகற்கு - நீலத்தின்
காசுங் கலாபமும் மேகலையுங் காஞ்சியுந்
தூசுந் துகிலுந் தொடியுநான் - கூசேன்

வெளியே தருவேன் விரையார்ந் தொங்கல்
கிளியே தருமேனீ கேளாய் - அளியேநீ
தாது கடிகமழ் தாதகித் தாமத்தின்
போது கொழுதப் புறப்படாய் - ஓதிமமே
எங்கள் பெருமாளை யிங்கே தருவானீ
உங்கள் பெருமா னுழைச்செல்லாய் - பைங்கழற்காற்

Koviloor Digital Library

சேயை நினைந்தேகி னம்முடைய சேக்கையான்
சாயன் மயிலே தலைப்படாய் - பாயும்
கடமானே போல்வாற்கு நீநின்னைக் காட்டின்
மடமானே தானே வருங்காண் - கடிதென்று

கொள்ளைகொள் காமன்கொடும் பகைக்குக் கூசித்தன்
பிள்ளைக ளோடிருந்து பேசுவாள் - உள்ள
அலகில் குலநீல ரத்ன பரணம்
விலகி வெயிலை விலக்க - உலகிற்
பெரிய பெருமாள் பெரும்பவனி வீதி
இரிய வெதிரேற் றிழந்தாள் - வரிவளை
ஆயத்தா ரென்னி லளியத்தா - ரெல்லாரும்
நேயத்தா ரல்லரே நிற்பரே - தேயத்தார்
மன்னனை யஞ்சாதே வாரணத்தை யஞ்சாதே
மின்னனை யானைய மீதூரா - முன்னர்க்

கடமாக்குந் தெய்வக் களிறு விரும்பும்
இடமாதும் யாமென்பார் போலப் - படமாய்
இரைப்பச் சுரும்போ டிருளக பாரம்
நிரைத்து வனமாகி நிற்பார் - விரைப்பூண்
முலையாய் வளரு முரட்குவடு கொண்டு
மலையாய் நெருங்க வருவார் - தொலையாத
பாய பருமுத்தின் மாலை பலதூக்கித்
தூய வருவியாய்த் தோன்றுவார் - சாயற்
கொடியா யடிசுற்றிக் கொள்வார் புரக்கும்
பிடியாய் நறுந்துகள் பெய்வார் - விடுதுமோ

யாழாய் மிடற்றுல் வணக்குதும் யாமென்பார்
தோழாய் வனைத்தெங்குஞ் சூழ்போவார் - ஆழிக்கைத்
தியாகனை மானதனைத் திக்கானை யெட்டுக்கும்
பாகனையே பின்சென்று பற்றுவார் - தோகையர்
நற்றுகில் கொண்ட நறுந்துழாய் மார்பநின்
பொற்றுகி றந்தருளிப் போதென்பார் - மற்றிவள்
தன்சங்கங் கொண்ட தடந்தா மரைக்கண்ணு
நின்சங்கந் தந்தருள னேரென்பார் - மின்கொள்ளும்
இன்றுயிற் கெல்லா மெறிபாற் கடற்கொள்ளும்
நின்றுயி றந்தரு வீயென்பார் - என்றென்று

மானு மயிலு மனையார் வனைத்துனைப்பத்
தானுங் களிறுந் தடையுண்ட - கோனும்

Koviloor Digital Library

தடுத்த கொடிக்குச் சதமடங்கு வேட்கை
அடுத்த திருநோக் கருளாக் - கொடுத்த
திருநகை மூர றிகழ்ந்தா னணங்கும்
ஒருநகை கூர்ந்தொருவா றுய்ந்தாள் - பெருநகை
எய்தி யனங்க னெழப் போனுன் மாதரும்
உய்து சிறந்தா ளுழைச்சென்ருர் - நொய்தில்
தொடுக்கும் புறஞ்சொற் ருெடாமே முலேமீ
தடுக்கும் பசலே யடாமே - உடுக்கும்

துகிலுஞ் சரியாமே சுற்றத்தா ரெல்லாம்
புகிலும் புகாமே பொராமே - அகிஞறும்
பள்ளியிற் செல்லாள் பருவ முருகற்ருேய்
வள்ளியிற் சால வயங்கினுள் - ஒள்ளிழை
பின்ன ரொருத்தி பெருமைக் கரமகளிர்
முன்ன ருரைக்கும் முதன்மையாள் - சென்னியில்
வண்ட லிடுநாவி வார்குழற்கு மாறுடைந்து
கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும் - பண்டுவந்
தேற்றுப் பணேபணேக்கு மென்ருே ளிரண்டுக்கும்
தோற்றுச் சொரிமுத்தின் சூழ்தொடியும் - ஆற்றற்

கலம்புரி செல்வக் கழுத்திற்குத் தோற்ற
வலம்புரி முத்தின் வடமும் - பொலம்பூண்
எதிர்க்ரு முலேக்கிரிந்த திக்கயக்கோ டிட்ட
கதிர்க்கு நகைமுத்தின் கச்சும் - அதிர்க்கும்
அடல்விடு மல்குற் பரவைக் குடைந்து
கடல்விடு முத்தின் கலேயும் - உடலிமேல்
ஏந்து மினைய விளநிலா விட்டெறிப்பப்
போந்து மறுகு புகுந்தொழிந்தாள் - வேந்தனும்
சட்கோடி மாணிக்க மொன்றுஞ் சமந்தகமும்
உட்கோடு கேயூரத் தூடெறிப்பக் - கொட்கும்

கடல்சேப்ப வந்த கவுத்துவ மொன்றும்
அடல்சேக்கு மார்பிற் கமைய - உடலி
அனந்த பணமவுலி யாயிரமு மொற்றை
நனந்தலே மௌலிக்கு நாண - இனங்கொள்
முறுகு கதிரின் முகந்திரிய வேற்று
மறுகு திருமலர வந்தான் - குறுகும்
நடையாய வெள்ளமும் நாணிரம்பு திங்கட்
குடையாய வெள்ளமுங் கூடி - அடைய
மதியுதய மென்று வணங்க வனச
புதியுதய மென்று பணியத் - துதியில்

Koviloor Digital Library

ஒருவரு மொவ்வா வுருவமீக் கூறும்
இருவரு மெய்திய வெல்லைத் - தெருவில்
நெருங்க மகளிர் நிறந்திறக்க வெய்து
மருங்கு வருகின்ற மாரன் - திருந்திய
பாய பகட்டல்குல் பாரா வதன்பரப்பிற்
போய மருங்குற் புறநோக்காச் - சாயா
முலையின் கதிர்ப்பு முருகு கெழுதோள்
நிலையின் பணைப்பு நினையாக் - கொலையால்
இடைக்கு முலகடைய வூடாடு கண்ணன்
கடைக்கு முடிவின்மை காணக் - கிடைக்கும்

பருவக் கொடிவதன பங்கே ருகததின்
புருவக் கொடிமுடியப் போகா - உருவக்
களிக்கும் புடவி சதகோடி கற்பம்
அளிக்கும் பெருமானே யஞ்சாக் - குளிர்க்கும்
கருங்காற் கொடுந்தேரை முட்டக் கடாவிக்
கொடுங்காற் சிலையைக் குனித்து - நடுங்கா
முகுந்த னிவனென்று முன்பெய்த வேவிற்
புகுந்த திதுவென்று போனன் - திகந்த
முழுதா ளபயன் முகிணகையுந் தோளும்
தொழுதா ளொருதானே தோற்றுள் - அழுதான்

நிரிந்தாள் கலிநிலையுஞ் செம்பொற் றுகிலும்
சரிந்தா டுணைவியர்மேற் சாய்ந்தாள் - பரிந்தார்
முடைக்கை யெதிர்க்குரவை கோத்தாய் முரல்யாழ்
நடைக்கை தொடுக்கை நகையோ - விடைப்போர்
இனந்தழுவிப் பின்னையைக் கொள்வா யிவளோத்
தனந்தழுவிக் கொள்கை தவரே - அனந்தம்
கருந்துகிலக் கோவியரைக் கொள்வாய் கமலை
தருந்துகி னேக்கத் தகாதோ - விருந்து
துளவ முகிற்கிது வந்தது தூய
வளவர் திருக்குலத்து வந்தோ - அளவிறந்த

வன்கண் ணிவளளவுந் கண்டே மடவரல்
புன்க ணடியேம் பொறேமென்று - மின்கண்
இவையிவை சொல்லிப்போ யின்னமளி யேற்றக்
கவிதழ் பின்னுங் கலங்கத் - துவரின்
வியக்குந் துகிரினைய மேம்பட் டுலகை
மயக்குந் திருவாய் மலர்க்கும் - நயக்கும்
பொருப்புருவத் தோளின் புதுமைக்கு நேரே

Koviloor Digital Library

திருப்புருவஞ் செய்த செயற்கும் - பரப்படையச்
செங்கே ழெறித்து மறிக்குந் திருநயன
பங்கே ருகஞ்சூழ் படுகொலைக்கும் - அங்கே

தரிக்குமே தென்றலுஞ் சந்த்ரோ தயமும்
பரிக்குமே கண்கள் படுமே - புரிக்குழலார்
பாலிருத்தி மம்மர் படப்படப் பையப்போய்
மாலிருத்தி யுள்ள மயங்கிஞள் - மேலொருத்தி
தாளே யரவிந்தச் சாதி தலைவணங்கத்
தோளே யுரகர் தொழவிருப்பாள் - நாளே
வளவர் பெருமான் வரும்பவனி யென்று
கிளவி விறலியர்வாய்க் கேட்டாள் - அளவுடைத்
தோரிரா வன்றம்ம விவ்விரா வோதிமத்தோன்
பேரிரா வென்று பிணங்கிஞன் - பேரிரா

என்று விடியுங்கொ லென்ருன் விடிவளவும்
நின்று சுடுங்கொ னிலவென்ருள் - நின்ருர்
அடுத்தடுத் தேந்திய திவ்யா பரணம்
எடுத்தெடுத் தொப்பித் தெழுந்து - சுடர்க்கதிரோன்
மாலைப் பகைவியைப் போக்கி வருவித்த
காலைத் துணைவியைக் கண்டெழுந்தாள் - காலையோன்
சேமித்த பூங்கோயி லெல்லாந் திருவென்று
காமித் திதழின் கடைதிறப்ப - நேமி
மணக்கத் துணையன்றில் வாயலகு வாங்கித்
தணக்கக் கடிகாவிற் சார்ந்தாள் - கணக்கதிர்

வந்து பொருவதொரு மாணிக்கச் செய்குன்றில்
இந்து சிலாதலத்தி லேறிஞள் - குந்திக்
கடப்பன கன்னிமா ஞைக்கியு மன்னம்
நடப்பன பார்த்து நயந்தும் - தொடக்கிக்
களிக்கு மயிற்குலங் கூத்தாடக் கண்டும்
கிளிக்குலம் பாட்டெடுப்பக் கேட்டும் - பளிக்குருவப்
பாவை மணக்கோலம் பார்ததும் பலநகை
பூவை பகரப் புறஞ்சாய்த்தும் - கோவை
அளிக்களி யாட்ட மயர்ந்துங் கபோத
விளிக்களி கூர்ந்து வியந்தும் - களிக்கப்

பழிச்சி வணங்கிப் பெருமாள் பவனி
எழுச்சி முரசோர்ந் திருந்தாள் - கழற்செழியர்
தென் சங்கங் கொண்டான் றிருச்சங்கஞ் செய்குன்றில்

Koviloor Digital Library

தன்சங்க மாகி யெதிர்தழுங்க - மின்சங்கம்
போல விழுந்து மெழுத்தும் புடையாயம்
கோல மறுகு குறுகுவாள் - ஞாலம்
எடுக்கும் பணிமன்னன் மின்னென் றிறைஞ்சிக்
கொடுக்குஞ் சுடிகைக் குதம்பை - கடுக்கும்
மயில்வேண்டுஞ் சாயல் வதனும் புயத்து
வெயில்வேண்ட வேண்டி விளைப்பப் - பயில்கதிர்

வெல்லாது தோட்சுடிகை மேகா ளகவிருண்மேல்
எல்லாப் பருதியும் போலெறிப்பக் - கொல்குயத்து
வீழ்சோதி சூழ்கச்சு மேரு கிரிச்சிகரம்
சூழ்சோதிச் சக்ரந் தொலிவிப்பக் - கேழொளிய
பைம்பொற் கடிதடஞ்சூழ் மேகலை பார்சூழ்ந்த
செம்பொற் றிகிரி யெனத்திகழ - அம்பொற்
புறவுஞ் சகோரமும் பூவையும் மானும்
பிறவு மினமென்று பெட்ப - உறவாய்
அடர்ந்த பொலன்கே முடிச்சிலம்புக் கன்னம்
தொடர்ந்து மறுமாற்றஞ் சொல்ல - நடந்துபோய்

மானவற்குப் புக்கதுறை வல்லவற்கு வில்லவற்கு
மினவற்குச் சென்று வெளிப்பட்டாள் - தானே
அலரு முகமுங் குவிகையு மாகி
மலரு முகுளமு மானப் - பலர்காணத்
தேனு மழுதுங் கலந்தனைய தீங்கிளவி
மானு மடைய மனங்கொடுத்தாள் - கோனும்
தடாதே தடுத்தாளைத் தன்கடைக்கண் சாத்தி
விடாதே களிறகல விட்டான் - படரமுலைமேல்
ஒத்திலங்கு வேர்வந் துறைப்ப நறைக்கழுத்து
நித்திலங்கால் சங்க நிதிநிகர்த்தாள் - எத்திசையும்

சோர்கின்ற சூழ்தொடிக்கைச் செம்பொற் றெடிவலயம்
நேர்கின்ற பற்ப நிதிநிகர்த்தரள் - தேரின்
அரிவை துகினெகிழ வல்கு லரவின்
உரிவை விடும்பட மொத்தாள் - சொரிதளிர்
மாங்கொம்ப ரென்ன வருவாள் சுரமரப்
பூங்கொம்ப ரென்னப் புறங்கொடுத்தாள் - பாங்கியரும்
ஒற்றை யுடைவா ளொருபுடையாள் கொற்றவையேல்
மற்றை யருகிவளை வைத்திலனே - பெற்றுடைய
வாரத் தரணியாள் வாழ்தோ ளெதிர்மற்றை
ஆரத் திருத்தோ ளளித்திலனே - நேரொத்த

Koviloor Digital Library

பூந்தா மரையா ளெதிரேயிப் பொற்ரெடிக்கும்
ஏந்தார மார்ப மிசைந்திலனே - வேந்தர்கோன்
அன்னங்கா ணீர்சென் றரற்றீர் கபோதங்காள்
இன்ன மபயம்புக் கெய்திடீர் - நன்னுதற்
பாவைகாள் கொல்யானைப் பாவடிக் கீழ்ப்பணியீர்
பூவைகாள் செங்கோன்மை போற்றிசெய்யீர் - தாவிப்போய்ப்
பேதை மடமான் பிணைகாள் வளைத்துளையீர்
கோதை மதுகரங்காள் கூப்பிடீர் - யாதெல்லை
என்னு விதற்கென் றிரங்கி யிலங்கிழை
தன்னுர்வ மாற்றெதிர் சாற்றினுர் - பின்னர்ப்

பொருவி லொருத்தி புறங்காக்கு மாதர்
இருவி லிடைநின் றிறைஞ்சித் - திருவுளாப்
போதும் பெருமாள் புகுது மளவுமிங்
கியாதும் பயிலா திருத்துமோ - சூதாடேம்
பந்தா டுதுநாம் பசும்பொற் குழைசென்று
வந்தாடு கண்ணுய் வருகென்று - சந்தாடும்
கொம்மை வருமுலையுந் தோளுங் குறியாதே
அம்மென் மருங்குல்பார்த் தஞ்சாதே - தம்முடனே
கொண்டா ளருகிருந்த பாணருங் கோடியரும்
கண்டா ரெவருங் கடுகினுர் - மண்டி

எடுத்தா ரெடுத்தன யாவு மெவரும்
கொடுத்தா ரொருதானே கொண்டாள் - அடுத்தடுத்து
முன்ன மெறிபந்தின் மும்மடங்கு நான்மடங்
கின்ன மெறிய வருகென்ருள் - அன்னம்
அடியு மிருகையு மம்புய மென்று
படியு மொழுங்கிற் பயில - முடியும்
தொடையிடை போய சுழல்கூந்தற் பந்தர்க்
கிடையிடை நின்றகா லேய்ப்ப - அடைய
விழுந்தன பார்கடவா வாறுபோன் மேற்போய்
எழுந்தன கைகடவா வென்னக் - கொழுந்தளிரால்

ஏற்றுதி விண்கொளா வம்மனை யெம்மனை
ஆற்றுதி யீதிங் கரிதென்னப் - போற்றரும்
கையோ பதயுகமோ கண்ணே கடுகினவை
ஜயோ வறித லரிதென்னப் - பொய்யோ
திலக நுதலிற் றிருவேயென் ரேதி
உலகு வியப்பவென் ரேத - அலகிறந்த

Koviloor Digital Library

பந்தாட் டயர்ந்து பணைமுலையார் பாராட்ட
வந்தாட்டு நீராட்டு மண்டபத்து - விந்தை
பெருமா னனபாயன் பேரிய முன்றும்
தருமார வாரந் தழங்க - ஒருமாதர்

ஏந்து துகிலொன் றுடுத்தாளோ வில்லையோ
போந்து மறுகு புகுந்தொழிந்தாள் - மாந்தளிரும்
தாதுந் தமனிய மாலையுந் தண்கழுநீர்ப்
போதும் பிறவும் புறம்புதையா - ஓதிக்குச்
சென்னி யழுனைத் தரங்கமுந் தீம்புனற்
பொன்னி யறலும் புறங்கொடுப்பப் - பின்னர்
ஒழுங்காய சேயரிக்கண் ணூடொட்டும் மையால்
மழுங்காது கைபோய் மதர்ப்பச் - செழுங்கழுத்
தொன்று புனைந்த தொருசங்க மாணிக்கம்
இன்று பயந்த தெனவிளங்க - நின்றிலங்கும்

உச்சக் கலனணியாத் தோளிணைக் கோரிரண்டு
பச்சைப் பசுங்காம்பு பாடழிய - நிச்சம்
அசும்பு பொலன்கச்சி னற்றத்தே கொங்கை
விசும்பு குடிவாங்க வீங்கப் - பசுஞ்சுடர்க்
கோல வயிறுதர பந்தனக் கோணீங்கி
ஆலின் வளர்தளிரி னேதாகி - மேலோர்
இழியு மொருசாம ரேகையு முந்திச்
சுழியும் வெளிவந்து தோன்றக் - கெழிய
இசையின் கலாபாரப் யாப்புரு வல்குல்
திசையின் புடையடையச் செல்ல - மிசையே

பொறைபுரி கிம்புரி பூட்டாத் துடைதூ
சுறையின் மரகத மொப்ப - அறையும்
சிலம்பு சுமவாத செந்தா மரைபோய்
உலம்பு குரலஞ்சா தோடக் - கலம்பல
தாங்கி யுலகந் தரிப்பத் தரியென்று
பாங்கிய ரெம்மருங்கும் பாராட்டப் - பூங்கேழ்
உருவி லொளிபோ யுலகடையக் கோப்பத்
தெருவி லெதிர்கொண்டு சென்றுள் - பெருமாளும்
கொற்றக் குடைக்கீழ் வடமேருக் குன்றனைய
வெற்றிக் கனியானை மேல்வந்தான் - பற்றி

இருவருந் தம்மி லெதிரெதிர் தோக்கா
ஒருவ ரெனவேட்கை யொத்தார் - குருசில்

Koviloor Digital Library

மறந்த கடல்கடைய வந்தாண்மே லன்பு
சிறந்த திருவுள்ளஞ் செல்லச் - சிறந்தவள்
ஆக நகத்திருந்தா ளாகத் திருவுள்ளக்
கோக னகத்திற் கொடுசென்ருன் - நாகிள
தவ்வி மடநோக்கான் ஞாலத்தை யோரடியால்
வவ்வி யிருதோளில் வைத்தமால் - செவ்வி
முருகு கமழ முகந்து முகந்து
பருகு மடமகளைப் பாரா - அருகு

மடுத்து முயங்கி மயங்கிய தாயர்
எடுத்து மலரணமே லிட்டார் - அடுத்தொருவர்
கொய்யாத கற்பகப் பூமாலை கொண்டைக்கும்
நெய்யாத பொற்றுகி னீவிக்கும் - செய்யாத
தொங்கற் றுளக்கோவை யல்குற்குஞ் சூழ்கனகத்
துங்கப் பணிவலையந் தோளுக்கும் - கொங்கைக்குப்
பொன்னிப் புகாரிற் பொலன்குழம்பும் வல்லத்திற்
கன்னிப் பனந்தோடு காதிற்கும் - சென்னி
அளிப்பக் கொணர்ந்தனம்யா மன்னமே யென்று
தெளிப்பச் சிறிதே தெளிந்தாள் - கிளிக்கிளவி

மற்ருெருத்தி செந்தா மரைமலர்மே லென்னுடனே
செற்ருெருத்தி வாழு மெனச்செறுவாள் - சுற்றவும்
தெட்டுத் தசும்பசும்பு தெங்கி னிளம்பாளை
மட்டுத் தமனிய வள்ளத்து - விட்டு
மறித்து வயிர மடலொன்றின் வாக்கித்
தெறித்து ஞிமிருேப்பிச் செவ்வி - குறித்துக்கொண்
டேந்தி முகம னியம்பி யிருந்தொரு
காந்தி மதிவதனி கைக்கொடுப்ப - மாந்தி
குதலை குழறிக் குயிற்குங் கிளிக்கும்
விதலை யுலகில் விளைத்து - நுதலை

வியரா லலங்கரியா வேந்தன் கொடுமை
அயரா வெளிவிடா வஞ்சாப் - பெயரா
அருகிருந்த பாணனை நோக்க வவனும்
குருசில் வருதமரங் கூறப் - பரிபுரக்
காலு நிதம்பமுங் கையுந் திருக்கழுத்தும்
கோலு மதாணிக் குலமெல்லாம் - மேலோன்
குரகத மேழு முழுகிக் குளிப்ப
மரகத சோதி வயங்கப் - புருவ

Koviloor Digital Library

இடைபோய்க் குமிழின் மலர்வந் திறங்கப்
புடைபோய்க் கருவிளை பூப்ப - விடையாக
ஏக முருக்கு மலர விளம்பாளைப்
பூக மிடறு வரப்பொதியப் - போகப்
பெரும்பெருந் தெங்கிளநீர் தாழ்ந்து பிறங்கப்
பரும்பெருங் காம்பு பணைப்ப - விரும்பும்
நறுந்துணர் மாந்தளிர் வார்ந்து நளியக்
குறுந்தொடிக் காந்தள் குலைப்பச் - செறிந்து
சலித்துத் தனியிள வஞ்சி தளரக்
கலித்துக் கதலி கவின - ஒலித்தே
அளிக்குஞ் சகோரமு மன்னமு மானும்
களிக்கு மயூர கணமும் - விளிக்கும்

புறவுந் தொடர்ந்துடனே போத வவையே
பிறவு மினமென்று பெட்பச் - சுறவுயர்த்தோன்
காலே புகுந்து கரப்ப தொருபசும்பொற்
சோலை யெனவந்து தோன்றினள் - ஞாலத்தோர்
தெய்வப் பெருமாளுஞ் சேவடி முன்குவித்துக்
கைவைத்து நின்றவளைக் கண்ணுற்ருன் - தையல்
வெருவமுன் சூர்தடிந்த வேளே நயக்கும்
பருவமு மார்பிற் பணைப்பும் – புருவமும்
செந்தா மரைக்கண்ணும் மாமேரு வைச்சிறிய
பந்தாகக் கொள்ளும் பணைத்தோளும் - உந்தியும்

உய்ய வருள்காது மூக்கு முடுபதியை
நைய வெறிக்கு நகைநிலவும் - செய்ய
பவளத் துவர்வாயும் பாதாம் புயமும்
கவளக் களிற்றெளிதிற் கண்டு – குவளைக்
கருநெடுங் கண்களிப்ப வுள்ளங் களிப்ப
பருநெடுந் தோளும் பணைப்ப - ஒருநின்
சிலப்புக ளோரேழுஞ் சென்றடைந்து நோலேன்
அலம்பு கடலேழு மாடேன் - வலம்புவனம்
ஏழுஞ் செலவயரே னெங்கோவே நின்குடைக்கீழ்
வாழுந் திருவெனக்கு வாய்க்குமே - தாழி

முடைதழுவு தோளும் முலையுந் தழுவ
விடைதழுவு தாமரைக்கை வீரா - கடகரியைக்
கைதழுவிக் கோரத்தைக் காறழுவி நின்புலியை
மெய்தழுவிக் கொள்ள விடுவாயோ - மொய்திரைசூழ்

Koviloor Digital Library

ஞால மறிக்கவும் நாயக நின்புகல்விற்
கால வுததி கலக்கவும் - சால
வருந்தா வகைவருந்த வாழி பெயரும்
பெருந்தேவி யார்க்குப் பெறலாம் - திருந்திய
குந்த மொசித்ததுவுங் கொற்றத் திருத்தோளால்
740 வந்த விடையேழு மாய்த்ததுவும் - முந்துறக்
கோவிய மாதர்க்கே யுள்ளங் குறைகிடந்த
ஆவியே மாதாக வஞ்சுமே - ஓவிய
சேரன் சிலையினுஞ் சீரிதே சென்ருெசிய
மாரன் சிலையை வணக்காயால் – சேரன்றன்
முன்றிற் பனைதடிந்தாய் முட்டா திரவொறுக்கும்
அன்றிற் பனைதடித லாகாதோ - கன்றி
மலைக்குஞ் செழியர் படைக்கடலை மாய்த்தாய்
அலைக்குங் கடன்மாய்த் தருளாய் - மலைத்தவர்
தங்கள் புகழ்நிலவை மாய்த்தா யரிமரபிற்
750 றிங்களின் றண்ணிலவு தீராயால் - பொங்கொலிநீர்த்
தெம்முனை யாழ்தடிந்தா யெங்கள் செவிகவரும்
எம்முனை யாழ்தடிந்தா லென்செய்யும் - செம்மணியின்
செஞ்சோதி சிங்களத்து மாற்றுவாய் செக்கரின்
வெஞ்சோதி கண்டால் விலக்காயால் - வெஞ்சமத்துக்
காதி விடைபண்டு காடவன் முன்றடிந்தாய்
வீதி விடைதடிய வேண்டவோ - யாதுகொல்
வன்பல் லவந்துகைத்த வாட்டானை யின்றிந்த
மென்பல் லவந்துகையா மேம்பாடு - தன்பூங்
கருப்புச் சிலைகொண்டு மோதுங் கழுத்திற்
760 கருப்புநாண் புக்க முழந்தத் தூக்கும் - நெருப்புமிழ்
அப்புக் கழுவேற்று மாருய் பெருங்கோப
வெப்புப் படுத்தெங்கண் மெய்யுருக்கும் - தப்பா
உடல்பிள வோட வொருதேரிட் டுரும்
கடன்மகர போசன மாக்கும் - விடுதூதால்
அக்கால தண்டமகற்றி யுலகளித்தாய்
இக்காம தண்ட மெளிதன்றே - மைக்கோல
வண்ணு வளர்ந்த மகரா லயமறந்த
கண்ணு வநங்கன்போர் காவாயேல் - மண்ணுலகில்
எப்படி யாவா ரிளம்பிடியா ரென்றென்று
770 மைப்படியுங் கண்ணுள் வருந்தினுள் - இப்படியே

Koviloor Digital Library

தையலார் பொற்றேகைச் சாயலார் கையகலா
மையலார் பேரலராய் மன்றேற - வையம்
பெருகுடையா நீரேழும் பாரேழும் பேணும்
ஒருகுடையான் போந்தா னுலா.

பகழிக்கூத்தர்

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழை இயற்றியவர் பகழிக் கூத்தர். இவர், வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊரினர்; வைணவ அந்தணர் மரபினர். இவரது தந்தையின் பெயர் தர்ப்பாதனர் என் பதாகும். இவரது காலம் கி. பி. 18 - ஆம் நூற்றுண்டு. கடுமையான வயிற்றுவலியால் வாடிய இவர், முருகன் திருவருளால் நோய்நீங்கினர்; சைவராக மாறினர்; திருச்செந்தூர் பிள்ளைத் தமிழைப் பாடினர். இவர், சீவகசிந்தாமணிச் சுருக்கம் என்ற வேறொரு நூலையும் இயற்றி-யுள்ளார்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

திருச்செந்தூர் கோயிலில் குடிகொண்டிருக்கும் முருகப் பெரு மானைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்ற நூலாதலால், இந்நூல் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் என்று பெயர் பெற்றது.

சீர்த்திமிகு தெய்வத்தையோ, கீர்த்திமிகு மானிடரையோ குழந்தையாகப் பாவித்து, அவர்தம் அருமை பெருமைகளைப் பாடலில் அமைத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்படும்.

பிள்ளைத்தமிழ் இருவகைப்படும். அவை :- ஆண்பாற் பிள்ளைத் தமிழ் 2. பெண்பாற் பிள்ளைத்தமிழ். ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சாப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப்பத்துப் பருவங்களாகப் பாடப் பெறும். பெண்பால் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் எனப் பத்துப் பருவங்களாகப் பாடப்பெறும். பருவத்துக்குப் பத்துப்பாடல்கள் வீதம் 100 பாடல்களால் இந்நூல் பாடப்பெறும்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் 103 பாடல்களைக் கொண்டது; சொற்சுவை பொருட்சுவை மிக்கது; கற்பனைப் பெட்டக மாகத் திகழ்வது.

Koviloor Digital Library

க

திருச்சிற்றம்பலம்

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

சிறப்புப் பாயிரம்

நேரிசை வெண்பா

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—அந்தோ
திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன். (க)

அவையடக்கம்

அத்தனையும் புன்சொல்லே யானலும் பாவேந்தர்
எத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார்—முத்தி
புரக்குமரன் தந்தகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி. (உ)

நூற்பயன்

மருநாள் மலர்ப்பொழில் உடுத்ததட மெங்கும் அலை
வாய்கொழித் தெறியுமுத்தை
வண்டலிடும் எக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுளெங்

குருநாதன் ஒருதெய்வ யானைதன் பாகன்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறும்பிறை முடிக்கும்பிரான்

இறுநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமும்
எங்குமுட் டாதளக்கும்
இறைவிதிரு முலையமுத முண்டுஞா னம்பெருகும்
எம்பிரான் இனிய பிள்ளைத்

திருநாமம் எழுதுவார் கற்பார் படிப்பார்
செகம்பொது அறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதத் தெய்துவாரே. (ங)

Koviloor Digital Library

க. காப்புப்பருவம்

தீந்மால்

பூமா திருக்கும் பசுங்களபப்
புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
புத்தேள் பரவப் பொதிகைமலைக்

கோமா முலிக்குத் தமிழுரைத்த
குருதே சிகனைக் குரைகடற்குக்
குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற்
குமரப் பெருமான் தனைக்காக்க

தேமா மலர்ப்பொற் செழும்பொகுட்டுச்
செந்தா மரையில் வீற்றிருக்குந்
நேவைப் படைத்துப் படைக்குமுதல்
சேரப் படைத்துப் படைக்கும்உயிர்

ஆமா றளவுக் களவாகி
அனைத்துந் தழைக்கும் படிகருதி
அளிக்கும் படிக்குத் தனியேசங்
காழி படைத்த பெருமாளே. (க)

சிவமெருமான்

உடல்வளை குழவி மதியமும் நதியும்
உரகமும் ஒழுகு செஞ்சடைக் காட்டினர்
உமைமுலை குழைய மருவிய புனிதர்
உரைகொடு பரவு தொண்டரைக் காத்தவர்
உமிழ்திரை மகர சலதியில் விளையும்
உறுவிட வடவை கண்டமட் டேற்றினர்
உடைமணி கனக பரிபுர முரல
ஒருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்
வடவரை முதுகு நெளிநெளி நெளிய
வரிசிலை யெனவொர் அம்பினைக் கோத்தவர்
மறுவறு முழுவெண் நிலவெழு முறுவல்
வளரொளி இருள்வ னங்கெடப் பூத்தவர்
மருவிய சகள வடிவினர் அரிய
வடகலை தமிழ்வ ளம்பெறச் சேர்த்தவர்
மதுரையில் இறைவர் இரசத பொதுவர்
மணமலி பதயு கங்களைப் போற்றுதும்

Koviloor Digital Library

இடவிய மதுர வரியளி குமுறி
இடறிய களப குங்குமத் தூட்பொதி
இமசலம் ஒழுகு கனதன விரகம்
எழுகுற வனிதை சிந்தையிற் சேர்ப்பனே
இடிபடு முரச முழவுடன் அதிர
எதிர்பொரு நிருதர் தம்படைப் போர்க்களம்
இடமற முதிய கழுதுகள் நடனம்
இடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய

கடதட வழுவை முகமுள கடவுள்
கருணையின் முதிய தம்பியைப் பார்ப்பதி
கரமலர் அணையில் விழிதுயில் மருவி
களிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில்
கடிகமழ் தருவின் இறைமகள் புதிய
கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய்
கலைமகள் பரவு குமரனை மதுர
கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே. (2)

உமையம்மை

அரிபிரமர் சந்த தம்பு கழ்ந்திடு
பரசுடைய நம்பர் பங்கின் மென்கொடி
அகிலலோகமும் ஆதரத் தாற்ப டைத்தவள்

அரிவைமட மங்கை மென்க னங்குழை
திரிபுரை அணங்கு கங்கை அம்பிகை
அகளமாய்அனு பூதியிற் பூத்த பொற்கொடி

அபினவை முகுந்தர் தங்கை சுந்தரி
உரகபண பந்தி கொண்ட கங்கணி
அமுதமூறிய பாடலுக் கேற்ற சொற்குயில்

அறுசமய முங்க லந்து நின்றவள்
மறலிபர வும்ப ரண்ட சங்கரி
அழகெலாமிது தானெனப் போற்று சித்திர

முரிபுருவ வஞ்சி திங்கள் தங்கிய
திருமுகம லர்ந்த பைங்க ருங்கிளி
முதல்விபூரணி ஞானவித் தாய்க்கி ளத்தவள்

முருகுவிரி கொந்த ளம்பி றங்கிய
மணிமவுலி மண்ட லங்கொள் செஞ்சடை
முடிமனேன்மணி வாலிவற் ருக்கு ணக்கடல்

Koviloor Digital Library

முகிழ்முலை சுமந்து நொந்த சைந்திறும்
இறுமென மருங்கி ரங்க இன்புறு
முறுவலாடிய கோமளத் தாற்பெ ருத்தவள்
முறைமுறை முழங்கு கின்ற கிண்கிணி
பரிபுரம் அலம்பு செம்ப தம்புரை
முளரிநாண்மலர் வாழ்வெனப் போற்றி நிற்குதும்

உரியபதி னெண்க ணங்க ளுஞ்சது
மறைமுனிவ ரும்ப ரிந்து நின்கழல்
உறுதிதானென நாவெடுத் தேத்தி நித்தலும்
உளமிக மகிழ்ந்து செங்க ரங்களின்
மலர்கொடு வணங்கி யஞ்சல் என்றமை
உடைமையாயருள் நீயெனக் காத்த நட்பனை
உடுமுக டதிர்ந்து விண்த லங்களும்
அரியபகி ரண்ட மும்பி ளந்திட
உதறுதோகை மயூரனைத் தோற்ற முற்றெழும்
உபநிடத மந்த்ர தந்தி ரந்தனில்
அசபையி லடங்கும் ஐம்பு லன்களில்
உவகைகூரும னேகரக் கூத்த னைப்பொரு

தரியலர் நெருங்கு செங்க ளம்புகு
நிசிசரர் துணிந்த வெம்ப றந்தலை
தழுவிபாடல் விசாகனைப் பாற்க டற்றரு
நரள நகைசெங் கருங்கண் இந்திரை
குறமகள் மணம்பு ணர்ந்த திண்புய
சயில மோகன மார்பனைத் தோட்டி தழ்ப்பொதி
தழைமுகை யுடைந்து விண்ட ரும்பிய
புதுநறவு சிந்து பைங்க டம்பணி
தருணசீதள வாகனைக் கோட்ட கத்துயர்
சரவண மிலங்க வந்த கந்தனை
முருகனை விளங்கு செந்தில் வந்திடு
சமரமோகன வேலனைக் காத்த ளிக்கவே (3)

பிள்ளையார்

கருணையின் வழிபடு முதியவள் தனையுயர்
கயிலையி னெருமுறை உய்த்த விதத்தினர்
கனவட கிரிமிசை குருகுல மரபினா
கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர்
கலிமதி யினைஇரு பிளவுசெய் தொருபுடை
கதிரெழ நிறுவிய ஒற்றை மருப்பினர்

Koviloor Digital Library

கடுநுகர் பரமனே வலமுறை கொடுநிறை
கனிகவர் விரகுள புத்தி மிகுத்தவர்

பொருவரும் இமகிரி மருவிய பிடிபெறு
பொருகளி றெனமிகு பொற்பு விளைத்தவர்
பொதிஅவிழ் நறுமலர் அணைமிசை தமதுடல்
புளகம தெழவொரு சத்தி தரித்தவர்
பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு
பொலிவெழு பவளம தித்த நிறத்தினர்
புகர்முகம் உடையவர் குடவயி றுடையவர்
புகழிரு செவியில்நி றுத்தி வழுத்துதும்

இருமையும் உதவிய சிவபர சமயமும்
இமையவர் உலகும ளித்த களிப்பனே
இசைமுரல் மதுகர முறைமுறை பெடையுடன்
இடறிய முகைவிரி செச்விச வனப்பனே
இளகிய புளகித மலைமுலை யரமகள்
இகலிய புலவிய சுற்று மழுப்பனே
இகல்புரி பரநிசி சரர்குல கலகனே
எனைவழி யடிமைப டைத்திடு நட்பனே

அருமறை யுரைதரு பிரமனே அமரரும்
அடிதொழ விடுசிறை விட்ட திறத்தனே
அடியவர் கொடுவினை துகள்பட நடமிடும்
அழகிய சரணம் அளித்த வரத்தனே
அளவறு கலவியின் முழுகிய குறமகள்
அழகினில் ஒழுகியி ருக்கு மயக்கனே
அலையெறி திருநகர் மருவிய குமரனே
அறுமுக முருகனே நித்தல் புரக்கவே. (4)

கலைமகள்

அவணி பருகிய மால்திரு உந்தியில்
அமரு மொருபிர மாவெனும் அந்தணன்
அரிய சதுமறை நாவிலி ருந்தவள்
அளவில் பலகலை யோதியு ணர்ந்தவள்
தவள முளரியில் வாழ்வுபு ரிந்தவள்
தவள மணிவட மாலைபு னைந்தவள்
தளவ வடிவுள வாணிசு மங்கலி
தனது பரிபுர பாதம் இறைஞ்சு தும்

Koviloor Digital Library

உவரி முதுதிடர் பாயவி டம்பொதி
உரகன் மணிமுடி தூள்பட மந்தரம்
உலைய எறிசுழல் மாருதம் எங்கணும்
உதறு சிறைமயில் வாகனன் இன்புறு
கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய
கமட முதுகினில் ஏறநெ டுந்திரை
கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை தருகவி மாலைவி ளங்கவே. (5)

அரிகரபுத்திரன்

வரியு நீள்சடி லத்திடை மகுட ராசித ரித்தவர்
வளையு நீடுக ருப்புவில் மதுர வாளிதொ டுத்தவர்
அரிய பூரண புட்கலை அரிவை மார்இரு பக்கமும்
அழகு கூறும கிழ்ச்சியர் அடிவி டாமல்வ ழுத்துதும்
உரிய நான்மறை நித்தலும் உறுதி யாகவ ழுத்திய
உவமை யாசுக வித்துறை உதவு நாவலன் முற்றிய
பரிய வாளுகு தித்தெழு பரவை சூழந கர்க்கிறை
பழநிவேலவ னேத்புகழ் பனுவல் மாலைத ழைக்கவே. (6)

பகவதி

விளையுஞ் செழுந்தேன் உடைந்துமுகை விண்டொழுகு
வெண்டா மரைப்பொகுட்டு
வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியள்
வெங்கொலை மடங்கலேறி
வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கண்நெடு
மயிடாசு ரன்சிரத்தில்
வலியநடம் இடுகுமரி பகவதிச ரோருக
மலர்த்தாள் வணக்கமு றுவாம்
உளையுந் தடந்திரைத் திமிரதம ரக்குழி
உவர்ப்பரு மகரவேலை
ஒலியிடுங் குண்டகழி சுவறிமே டாகவேல்
உள்ளுறை கழித்துநிருதக்
களையுங் களைந்துகலன் அணிபுலோ மசைதன்மங்
கலநாண் அளித்தபெருமாள்
கடியமயில் வாகனப் பெருமாள் உவந்தெனது
கவிமாலை கொண்டருளவே. (7)

Koviloor Digital Library

காளி

காயுங் கொடும்பகைத் தாருக விநாசினி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணிஎண் தேளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி

பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
பண்ணம் பணத்திமோடி
பரசுதரன் உடன்நடனம் இடுசூலி சாமுண்டி
பாதார விந்தநினைவாம்

ஆயும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி
அரியசித் திரகவிதைவித்
தாரகவி இடுமுடிப் புக்குள மயங்காமல்
அடியவர்க் கருள்குருபரன்

தேயும் பணிப்பிறைத் திருநுதற் கடல்மகளிர்
தெள்நித் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு
சேவகன் புகழ்பாடவே. (8)

ஆதித்தர்

வெள்ளப் பெருந்துளி இறைக்கும் பெருங்காற்று
வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி ஒற்றையா ழித்தடந் தேரேறி
வேதபா ரகர்இறைஞ்சப்

பள்ளக் கடல்திரை கலக்கியூ ழியின்இருட்
படலமுழு துந்துடைத்துப்
படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்பொற்
பாதமலர் சென்னிவைப்பாம்

உள்ளக் களிப்பரு வரிவண்டு பண்பாட
ஓதிம நடிக்கமுள்வாய்
உட்குடக் கூன்வலம் புரிமுத்தம் உமிழநீர்
ஓடையிற் குருகுகாணக்
கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக்
கடைசியர் நுளைச்சியருளங்
களிகூரும் அலைவாய் உகந்தவே லனையெங்கள்
கந்தனைக் காக்கவென்றே, (9)

Koviloor Digital Library

முப்பத்து மூக்கோடி தேவர்கள்

பொதுவி லாடு மத்தற்கு நீடு
பொருளே யோதி ஒப்பித்த சீலர்
புணரி தோய்ந்த கர்க்குச்ச காயர்
புலமை நீதி யொப்பற்ற கேள்வர்

குதலே வாய்மொ ழிச்சத்தி பாலர்
குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்கத்தின் மோகர்
குமரர் காவ லுக்கொத்த காவல்

மதுர கீத விற்பத்தி வாணர்
மருடவேணி முத்துத்த ரீகர்
மவுன போன பத்திக்க லாபர்
மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்

முதுமை யான சொற்பெற்ற நாவர்
முனிவர் வேள்வி இச்சிக்கும் ஊணர்
முடிவி லாத கற்பத்தின் ஊழி
முதல்வர் தேவர் முப்பத்து மூவரே. (10)

உ. செங்கீரைப்பருவம்

வெங்காள கூடவிடம் ஒழுகுபற் பகுவாய்
விரித்துமா சுணம் உமிழ்ந்த
வெங்கதிர் மணிக்கற்றை ஊழியிரு ளேப்பருக
வேய்முத் துதிர்ந்து சொரியக்

கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர்
கடுப்பக் குறுங்க வைக்காற்
கவரியின் பருமூலக் கண்திறந் தொழுகுபால்
கதிர்வெயிற் படமு ரிந்து

மங்காமல் இரசதத் தகடெனச் சுடர்விட
மலைக்குறவர் கண்டெடுத்து
வண்திணைக் கெருவிடுஞ் சாரலிற் கரியகுற
மகளிருளம் ஊச லாடச்

செங்காவி விழிபருகு பன்னிருகை மேகமே
செங்கீரை யாடி யருளே
நிரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே. (11)

Koviloor Digital Library

கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற்
கட்செவிப் பஃறலைநெடுங்
காகோ தரச்சிர நெளிக்கவட பூதரங்
கால்சாய மகரம் எறியுந்

துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ்
சுறுக்கெழ முறுக்கெ யிற்றுச்
சூரன் பயங்கொளச் சந்த்ரசூ ரியர்கள்செந்
தூளியின் மறைந்தி டத்திண்

பொறைகொண்ட சுரர்மருவும் அண்டகோ ளகைமுகடு
பொதிரெறிய நிருதர் உட்கப்
பூச்சக்ர வாளகிரி கிடுகிடென வச்சிரப்
புருகூதன் வெருவி வேண்டுந்

திறைகொண்ட ளக்கவரு மயிலேறு சேவகா
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே. (12)

ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலைகீழ் விழின்பறவையாம்
இதுநிற்க நீர்விழின் கயலாமி தன்றியோர்
இலையங்கு மிங்குமாகப்

பார்கொண்ட பாதியும் பறவைதா னுகஅப்
பாதியுஞ் சேலதாகப்
பார்கொண் டிழுக்கஅது நீர்கொண் டிழுக்கவிப்
படிகண்ட ததிசயமென

நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூதம் அதுகொண்டுபோய்
நீள்வரை யெடுத்ததன் கீழ்வைக்கும் அதுகண்டு
நீதிநூல் மங்காமலே

சீர்கொண்ட நக்கீர னேக்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே. (13)

கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக்
கமலமல ரைக்க றித்துக்

Koviloor Digital Library

கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தன்குழக்
கன்றுக் கிரங்கி யோடிக்

கொந்தவிழ் கருங்குவளை ஓடைத் தடாகக்
குரம்பைக் கடந்து செந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்து மீளப்

பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலாம் இடறி வெள்ளைப்
பணிலஞ் சொரிந்தநித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலு டைந்து

சிந்தமக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே. (14)

விருட வெங்கதிர்ப் புகர்முகக் கூளிலை
மிகுத்தவே லுறை கழித்து
வெவ்வாய் பிளந்துசிறு கட்பேர் இடாகினிகள்
விளையாட வெங்க வந்த

மாருட முதுபகட் டுயர்பிடர்க் கரியநிற
மறலிஇரு கைச லித்து
மன்னுட உடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு
மாகமுக டிடைவெ ளியறப்

பாருட அம்பொற் கிரீடம் பரித்தலகை
பந்தாட வித்தா டவிப்
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம்
பசுங்கொழுங் குருதி வெள்ளச்

சேருட வென்றுசிறு முறுவலா டுங்குமர
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே. (15)

மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி
வைத்தமணி முத்து மாலை
வடபூ தரத்தில்விழும் அருவியென உத்தரிக
மார்பிலூ டாட மன்னுந்

Koviloor Digital Library

தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத்
தமனியச் சுட்டி ஆடத்
தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத்
தரளவெயர் வாட முழுதும்
பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமு லைப்பால்
பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டையும்
பாதமும் புழுதி யாடச்
சிகரவரை அரமகளிர் சிறுமுறுவ லாடதீ
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே. (16)

இந்திர னுஞ்சசி யும்பர வும்படி
யிங்கே வந்தார்காண்
இந்திரை யுங்கர சங்கமு குந்தனும்
இந்தா வந்தார்பார்
அந்தண னுங்கலை மங்கையு நின்சர
ணஞ்சேர் கின்றார்போய்
அண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தனர்
அஞ்சே லென்றுளாய்
முந்துத டந்திரை யுந்துவ லம்புரி
மொண்டே கொண்டேக
முன்றில்தொ றுந்தர ளங்கள் உமிழ்ந்திட
முந்தூர் நந்தாருஞ்
செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக
செங்கோ செங்கீரை
தென்றல்ம ணங்கமழ் குன்றுபு ரந்தவ
செங்கோ செங்கீரை.
வரைபொரு புளகித மலைமுலை அரிவையர் (17)
வந்தார் பந்தாட
மறிகட லிறைதகு நவமணி வடமது
வண்டார் தண்தார்பார்
உரைபொரு கவிஞரு முனிவரும் அமரரும்
உன்போ லுண்டோதான்

Koviloor Digital Library

உரையெமர் வழிவழி யடிமையி துளதென
உன்பா லன்பாளர்

கரைபொரு கடறிட ரெழமயில் மிசைவரு
கந்தா செந்தூரா
கழிமட அனமொடு முதுகுரு கொருபுடை
கண்சாய் தண்கானல்

தீரைபொரு திருநகர் மருவிய குருபர
செங்கோ செங்கீரை
செருவினில் எதிர்பொரு நிசிசரர் தினகர
செங்கோ செங்கீரை. (18)

வேறு

உரைசெய் வரையர மகளிர் முறைமுறை
உன்பேர் கொண்டாட
உலகும் இமையவர் உலகும் அரகர
உய்ந்தோம் என்ருட

வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும்
வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ
வந்தார் கண்டாயே

கரையின் மணலிடு கழியில் நெடியக
லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபனை அடியில் வலைஞர்க
ணஞ்சூழ் மென்கானில்

திரையில் வலைதவழ் நகரில் வருகுக
செங்கோ செங்கீரை
செருவில் நிசிசர திமிர தினகர
செங்கோ செங்கீரை. (19)

குறுமுகை விண்ட நெட்டிலைத் தாழை
அடியில்வி ழுந்த முட்குடக் காயில்
இனிய குவளை யோடையில் விண்தோ யுந்தேவர்

குணிலபு ரிந்த கற்பகச் சோலை
நிழலிடு பந்த ரிட்டபொற் றூணில்
அளவர் குடிலில் வாசலில் நின்ரே டுந்தோணி

Koviloor Digital Library

குழுவொடு வந்து விட்டிளைப் பாறு
துறைமணல் வண்ட லிட்டுவற் ருத
பழைய குமிழி வாவியல் வண்டா னந்தாவுங்

குரவுநெ ருங்கும் எக்கரிற் கானல்
உழுநர்ப ரம்பின் நெற்குலைத் தாளில்
இளைய குமரர் ஊர்சிறு திண்டேர் மென்காவில்

இறுகுகு ரும்மை யொத்தபொற் பார
நகிலரி ருந்து வைத்தவைப் பூசல்
அருகில் இளைஞர் ஊடலில் வண்டார் தண்டாரில்

எவரும கிழ்ந்த சித்திரச் சாலை
நிழன்மணி துன்று தெற்றியில் தேவர்
மகுடம் இடறு பூழியில் வங்கா ளஞ்சீனம்

எனமொழி தங்கும் அற்புதத் தீவில்
வணிகரின் வந்த மிக்கபட் டாடை
வகையி லெறியும் ஆரவடம்பூ ணும்பூணில்

இரைகவர் ஞெண்டு முக்குளித் தூறும்
அளறுகி டங்கில் வித்துவித் தாரத்
துரவில் இடுமுள் வேலியில் வெங்கா மன்காண

முறுகவி ளைந்து முற்றிமுத் தேறு
கரியக ரும்பு சுற்றுசிற் ருலை
நிலையின் முதிய தாழியில் வெந்தா றும்பாகின்

முடியைவி ளம்பி வைத்துமுட் டாது
கடைசிதர் கின்ற கட்குடப் பானை
முதுகின் முளைகொள் சாலியின் மென்பூ கந்தோறு

முருகுது ளும்பு கொத்துடைப் பாளை
சிதறியு திர்ந்த பித்திகைப் பீட
மறுகின் முதல்வர் தேவியர் பந்தா டுங்காவின்

முனிவர்வி ரும்பு கற்புடைப் பான்மை
மகளிர்கள் மொண்டெ டுத்தகைச் சாலின்
மடுவில்முழுகு மேதியில் வம்பே செஞ்சேல்பாய்

செறுவில்வி ளைந்த நெற்குலைக் காயில்
உழவிலு டைந்த கட்டியிற் பார
மதகு செறியும் ஏரியின் மண்டு கம்பானல்

Koviloor Digital Library

செருமிமு ழங்கு கற்பிளப் பான
புடையின்வி ழும்பு னற்பெருக் கான
தமர திமிர வாவியி செங்கே யுந்தாவுத்
திரையில் வலம்பு ரிச்கணத் தோடு
பணிலமு ழங்கு பட்டினக் காவல்
திகிரி முருக வேலவ ரெங்கோ செங்கீரை
தினகரா அஞ்ச விட்புலத் தேவர்
மகபதி முன்கு வித்த வித்தார
மவுலிதி றைகொள் சேவக செங்கோ செங்கீரை. (20)

ஈ. தாலப்பருவம்

அடரும் பருநவ மணிமுடி அமரரும்
அமரர்க் கிறைவனுநீ
டளகைந ராதியுத் ஈரொன் பதின்மரும்
அருமறை முனிவோருஞ்
சுடருந் தருமிரு சுடரும் பரவிய
தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளும் அவரவர் தங்குறை
சொல்லித் துதிசெய்தார்
படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர்
பாயும் பகிரண்டம்
பழுமரம் என்னப் பனெயென நிமிரும்
பாழிக் கைந்நீட்டித்
தடவும் புகர்முக தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ.
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ. (21)
கங்குல் பொருந்திய குவளைக் குழியில்
கழியில் பழனத்தில்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த
கவைக்கால் வரி அலவன்
பொங்கு குறுந்தளி வாடையின் நொந்து
பொருதே வெயில்காயும்
புளினத் திடரில் கவரில் துரவில்
புன்னை நறுந்தாதில்

Koviloor Digital Library

கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக்கா யில்புயல்
கொழுதுஞ் செய்குன்றிற்

சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ
சமய விநோதிகள் திமிர திவாகர
தாலோ தாலேலோ. (22)

தண்தே ளெழுகு மொழிமடவார்
தாமங் கொழுதிச் சுருண்டிகுண்டு
தமரக் களிவண் டடைகிடந்து
தழைத்து நெறித்த குழற்பாரங்

கெரண்டே மெலிந்த தல்லாது
குரும்பைக் களப முலைசுமந்து
கொடிபோல் மருங்குல் குடிவாங்கக்
குழையிற் குதித்த விழிக்கயலைக்

கண்டே வெருவிக் கயல்மறுகக்
கனக வெயில்மா ளிகையுடுத்துக்

ககனம் தடவுங் கோபுரத்தைக்
கருதி வடவெற் பெனக்கதிரோன்

திண்தேர் மறுகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ. (23)

பாம்பால் உததி தனைக்கடைந்து
படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
பசுக்கள் வெருவிப் பதருமற்

காம்பால் இசையின் தொனியழைத்துக்
கதறுத் தமரக் காளிந்திக்
கரையில் நிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா முகையுடைக்கும்

பூம்பா கடைப்பங் கயத்தடததிற்
புனிற்றுக்கவரி முலைநெரித்துப்

Koviloor Digital Library

பொழியும் அமுதத் தனைக்கண்டு
புனலைப் பிரித்துப் பேட்டெகினந்
தீம்பால் பகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ (24)
தெய்வக் களிற்றை மணம் புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ,

வேறு

மங்கல மங்கலநூல் எங்குமொ ழிந்தனர்காண்
வானேர் ஏனேர்போய்
வந்துவ ணங்கினர்மேல் அந்தர துந்துபிகேள்
வாரு டாடாதே
கொங்கைசு மந்திடைநூ லஞ்சும் அணங்கனையார்
கூடா ஊடாரேர
கொண்டவ ரந்தருவாய் அண்டர்பெ ருந்தவமே
கோமான் ஆமாநீ
செங்கம லந்தனிலே பைங்குமு தங்களிலே
சேல்பாய் வானுடா
தென்றலு டன்றமிழ்தேர் தென்பொதி யம்பயில்வாழ்
தேனுர் தார்மார்பா
சங்குவ லம்புரிசூழ் செற்றில்வ ளம்பதியாய்
தாலோ தாலேலோ.
சங்கரி தன்குமரா மங்கையர் தங்கணவா
தாலோ தாலேலோ. (25)

வேறு

மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்
வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுத் தண்துளி தரவே
வார்வோர் சோராதோ
கரமலர் அணைதந் தின்புறு மடவார்
காணு தேபோமோ
கனமணி குலவுங் குண்டலம் அரைஞா
ணுடே போனுல்வார்
பொருயிய முலையுந் தந்திட வுடனே
தாய்மார் தேடாரோ
புரவலர் எவருங் கண்டடி தொழுவார்
போதாய் போதாநீள்

Koviloor Digital Library

சரவண மருவுந் தண்டமிழ் முருகா
தாலோ தாலேலோ
சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்
தாலோ தாலேலோ. (26)

வேறு

கூருமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா
கூறுமியல் பார்த்துன் மேலே யாரார் பாடாதார்
மேருவரை நாட்டு வாழ்வார் வானு டாள்வார்போல்
வேளேயென மீட்டுன் மேலே வீழ்வா சூழ்வார்பார்

ஆருமிரை பார்த்து நீள்நீ ருடே தாராமே
யானகழி நீக்கி மேலே நாவா யோடேசேல்
சேருமலை வாய்க்கு நாதா தாலோ தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ. (27)

வேறு

அரைவடமுந் தண்டையும் மின்புரை யரைமணியுங்
கிண்கிணி யுங்கல னணியு மாரு வீருர்சீர்
அறுமுகமுந் தொங்கல் சுமந்தபன் னிருகரமும்
குண்டல முங்குழை யழகும் ஆரார் பாராதார்

விரைபொருமென் குஞ்சிஅ லம்பிய புழுதியுமங்
கங்குழை பண்டியு மெலியு மேலே வீழ்வார்பார்
வெகுவிதமுங் கொண்டு தவழ்ந்திடில் அவரவர்தங்
கண்கள் படும்பிழை விளேயு மேதே னேகாதே

வரைமணியும் தங்கமும் ஒன்றிய கனபரியங்
கந்தனில் இன்றுகண் வளர வாராய் வாழ்வேநீ
மணிநகையுங் கொண்டு துயின்றிலை விரலமுதங்
கொண்டுகி டந்தனே மதுரமாய்நீ பேசாயோ

திரைபொருதென் செந்தில் வளம்பதி வளரவருங்
கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ
திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையும் இறைஞ்
சும்பரை அம்பிகைசிறுவா தாலோ தாலேலோ. (28)

வேறு

அரவுசிறு பிறைஇதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதேர்
அருணவெயில் இரவிசுழல் இமகிரியில் அரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே

Koviloor Digital Library

குரவருள மகிழுயர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா
குமரகுரு பரமுருக குதலிமொழி தெரியவுரை
கூருய் மாருதே

இரவலரும் முனிவர்களும் இமையவரும் உனதடிமை
ஆமே ஆமேநீ
எமைமுனியில் ஒருதுணையும் இலியடிமை யடிமையென
விழ்வார் சூழ்வார்பார்

பாசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலம்உமிழ் மணியையலி யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ. (29)

வேறு

பங்கயன் முதலோர் இந்திரன் இமையோர்
பாரோர் ஏஞ்ஞர்பார்
பண்புடன் உனையே சிந்தையின் நினைவார்
பால்நீ மால்கூராய்

வெங்கட கரிசூ ழெண்திசை நிறைவார்
வீஞ்ஞள் காணுதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிமேல்
வேய்வார் வீருலே

செங்கனி மணிவாய் தங்கிய நகைதா
தேவா சீருதே
திண்திறல் முருகா தண்டமிழ் விரகா
சேரார் போரேறே

சங்கரி மருகா சங்கரி றுவா
தாலோ தாலேலோ
சந்ததம் இயல்தேர் செந்திலி உடையாய்
தாலோ தாலேலோ (30)

ச. சப்பாணிப்பருவம்

பரவிய நவமணி அழுத்துகல னுக்கழகு
பாலித்து விறு பெற்ற
பன்விரு புயங்குலுங் காமல்நீள் குழைதொறும்
பருவயிர குண்ட லங்கள்

Koviloor Digital Library

இரவியொளி மட்கநின் றசையாமல் அமுதொழுகு
இந்துமுக மண்ட லத்தில்
எழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர்
விறைக்கச் சிதைந்தி டாமல்

கரகமல மலர்விரல் சிவப்புரு மல்கடக
கங்கணம் ஒலித்தி டாமல்
கழிவண் டலம்புங் கருங்குவளை ஒடைசூழ்
கழிதொறுங் கானல் தோறுந்

தரளமுழு மணிநிலவு தடுசெந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே. (31)

அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி
ஆவலங் கொட்ட மன்னும்
அயிராணி கலவியமு துண்டனம் எனத்தேவர்
அரசிரு கரங்கள் கொட்டத்

துண்டவெண் பிறைபுரை எயிற்றுவெஞ் சூருளத
துண்ணெனப் பறைகொட் டநீள்
சுருதியந் தணர்இடந் தொறுமங் கலப்பெருந்
தூரியங் கொட்ட முட்டப்

பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட் டவெம்
பகைநிசர சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
பறைகொட்ட வெள்வ ளைதருந்

தண்தரள மலைமொண்டு கொட்டுநக ராதிபா
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட் யருளே. (32)

பௌவமெறி கடலாடை உலகிலொரு வேடுவன்
பறவைக்கு நிறைபு குந்த
பார்த்திவன் பாவையும் இயற்குலச் சிறையும்
பணித்தருள மதுரை புக்குத்

தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னுடலுறச்
சென்றுபற் றலும் எவர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனுந்
திருத்தியொரு வாது வென்று

Koviloor Digital Library

வெவ்வழலில் எழுதிமிடும் ஏடும் பெருக்காற்று
விட்டதமி ழேடும் ஒக்க
வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில்
வெய்யசமண் மூகர் ஏறச்

சைவநெறிஈடேய வருகவுணி யக்குழவி
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே. (33)

பைந்தாள் தழைச்சிறைக் கானவா ரணமருவு
பந்தரிடு முல்லை வேலி
பாயுமுட் பணைமருப் பேறுதழு வியுமுடைப்
பாலரு மேனி மடவார்

கொந்தார் குரும்பைஇள வனமுலை முகக்கோடு
குத்தக் குருந்தொ சித்துங்
குறுங்கழைத் துண்டந் தனில்சிறு துளைக்கருவி
குன்றுருக நின்ற ழைக்குஞ்

செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் துஞ்சுருதி
தெரியவிரல் முறையில் விட்டுந்
தேனுவின் பிறகே திரிந்துங் கவுட்குழி
திறந்துமத மாரி சிந்துந்

தந்தா வளந்தனக் குதவுதிரு மால்மருக
சப்பாணி கொட்டி யருளே
தரளமெறி கரையில்வளர் தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே. (34)

கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ
கற்பிக்கு மந்த்ர சாலை
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை
கட்டவளர் நந்தன வனஞ்

சீர்கொண்ட புருகூத னுந்தேதர் குழுவுநின்
திருநாம மறவா தபேர்
சிகரகல காசலமும் உனதுதிரு வாபரண
சேர்வைசேர் பேழை கடல்நீர்

பேர்கொண்ட வேலின் புலால்கழுவு நீரேழு
பொழிலுமத் தனைதீ வுமோர்
பொலிவினுட னேநின் கலாபமயில் வையாளி
போய்மீளும் வீதியெனவே

தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடி வேலனே
சப்பாணி கொட்டி யருளே
தரளமெறி கரையில்வளர் தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே. (35)

கவளமத வெற்புநிலை உலகுபர வப்ரபைகொள்
கைத்தா மரைக் கடகபூண்
கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை
கட்டாணி முத்தொ ளிரவே

Koviloor Digital Library

பவளஇதழ் புத்தமுதம் ஒழுகுமத லைக்குதலை
பற்பாதி சொற்றெ ரியவே
பரிபுரம் ஒலிக்கவரு குறிநகை யெழுப்பியிடு
பைச்சேடன் உச்சி குழிபாய்

உவளகம் அனைத்துமின வரிவளை முழக்கவெடி
யுற்றேபெ ருத்த கயல்போய்
ஒருபுடை குதிக்கவரி யலவனளை யிற்புகுத
உப்பூறு நெட்ட கழிதோய்

தவளமணி முத்தையலை எறியுநக ருக்கதிப
சப்பாணி கொட்டி யருளே
சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக
சப்பாணி கொட்டி யருளே. (36)

கருதிய தமனிய மணியரை வடமிடு
கட்டுவ டத்தோடுங்
கழலிடு பரிபுரம் ஒலியெழ மணியுமிழ்
கைக்கட கப்பூணும்

இருசுட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
எழுமதி புரைதிரு முகமலர் குறுவெயர்
இட்டுவ ரத்தாமஞ்

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றுழத்
தொழுதுனை வழிபடும் அடியவர் இளையவர்
சொற்படி தப்பாமற்

குருமணி யலையெறி கிருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி. (37)

வரைபுரை புயமிசை இடுதொடி அணிகலன்
மற்றுள முத்தார
மணிமுடி குழையிடும் இருசிகை யழகெழ
மைக்குவ ளைப்போதின்

விரைசெறி குழலியர் செவிலியர் அவரவர்
மிக்கவி ருப்பாஞர்
விபுதரு முனிவரும் உனதடி பரவியுன்
வெற்றியு ரைப்பார்சீர்

அரைமணி யுடைமணி கணகண சணவென
அத்திமு கத்தோனும்
அரிபிர மனுமுமை கணவனும் மனமகிழ்
அற்புவி ளைத்தார்பார்

நுரைகடல் அலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பரணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி. (38)

Koviloor Digital Library

வேறு

கந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள்
கற்பா யெனச்சுருதி நூல்
கண்டித் துரைத்திடவும் இந்தக் கரத்திலுரை
கள்பா லுரைத்தி யெனவே

அந்தப் பொருட்பகுதி அந்தத் தினைப்பகரும்
அப்போ வெறுத்து முனிவாய்
அஞ்சத் திருக்குமயன் அஞ்சச் சிறைக்குளிடும்
அப்பா சிறக்கும் அமலா

பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர்
பற்றுக நிற்கு முதல்வா
பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி
பற்றுசை யுற்று மிகவாழ்

சந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர
சப்பாணி கொட்டி யருளே
சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமர
சப்பாணி கொட்டி யருளே. (39)

வேறு

முதுமொழி நினைவுதெ ரிந்த நாவலர்
முட்டா துனைப்பு கழவே
முளரியில் மருவியி ருந்த நான்முகன்
முக்கா லுமிச்சை சொலவே

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர்
பொற்று ளினைப்ப ரவவே
புகலரும் இசைதெரி தும்பு ராதியர்
பிக்கா தரித்து வரவே

மதுகரம் இடறிய தொங்கல் மாலிகை
மற்பூத ரத்த சையவே
மணியொளி வயிரம் அலம்பு தோள்வலி
மட்டாய் நெருக்கம் உறவ

சதுமறை முனிவர்கள் தங்கள் நாயக
சப்பாணி கொட்டி யருளே
சரவண பவகுக செந்தில் வேலவ
சப்பாணி கொட்டி யருளே. (40)

Koviloor Digital Library

5. முத்தப் பருவம்

சுத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உகுந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு

தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விலை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வகுந்தமணிக்

கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலைஇல்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே 41

வகுக்குந் தமரக் கருங்கடலின்
வகுவாய் உகுத்த மணிமுத்துன்
வடிவேற் கறைபட் டுடல்கறுத்து
மாசு படைத்த மணிமுத்தம்

துகுக்குங் கழையிற் பருமுத்தம்
துளபத் தொடைமால் இதழ்பருகித்
தூற்றுத் திவலை தெறித்த முத்தம்
சுரக்கும் புயலிற் சொரிமுத்தம்

திகுக்குங் கவன மயிற்சிறையிற்
சிறுதூட் பொதிந்த குறுமுத்தஞ்
செந்நெல் முத்தங் கடைசியர்கால்
தேய்த்த முத்தஞ் செழுந்தண்தேன்

முகுச்குங் குமுதக் கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே. 42

Koviloor Digital Library

கலிப்பால் குறைத்த பிறைமுடிக்குங்
கடவுள் உடலின் விலாபோகங்
கனலி கரத்தில் அளிக்க அந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்

மகிப்பால் விளங்குஞ் சரவணத்தில்
வந்து புகுத ஓராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்தர் அறுவர்ப் பயந்தெடுப்பக்

கொகிப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி அணைத்துச் சேரவொரு
கோலம் ஆக்கிக் கவுரிதிரு

முகிப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தம் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலகிலவாய்
முதல்வா முத்தம் தருகவே. 43

கத்துங் கடலில் நெடும் படவில்
கழியில் சுழியில் கழுநீரில்
கானற் கரையில் கரைதிகழுங்
கைதைப் பொதும்பில் கரும்பினங்கள்

தத்துங் கமலப் பசும்பொகுட்டிற்
சாலிக் குலியில் சாலடியில்
தழைக்குங் கதலி அடிமடலில்
தழைவைத் துழுத முதுகுரம்பைக்

குத்துந் தரங்கம் புனற்கவரில்
குவளைத் தடத்தின் மடைவாயில்
குடக்கூன் சிறுமுட் பணிலமொரு
கோடி கோடி யிற்றுளைந்து

முத்தஞ் சொரியுங் கடலகிலவாய்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே. 44

வயலும் செறிந்த கதலிவன
மாடம் செறிந்த கதலிவன
மலர்க்கா வெங்குந் தேனினிரை
மாலை தோறுந் தேனினிரை

Koviloor Digital Library

புயலுஞ் செறிந்த கனகவெயில்
புடையே பரந்த கனகவெயில்
பொதும்பர் தோறு மோதிமமென்
புனைந் தோறு மோதிமஞ்செங்

கயலுஞ் செறிந்த கட்கடையார்
கலவி தரும்போர்க் கட்கடையார்
கருணை புரியும் அடியாருன்
காதல் புரியும் அடியார்சீர்

முயலும் படிவாழ் திருச்செந்தூர்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அணைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே. 45

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச்
சுரருக் கிறையுஞ் சுரருமுடன்
சூழ்ந்த கடம்பா டவியிலுறை
சொக்கக் கடவுள் தனைமூன்று

பொழுதும் பரவி எழுத்துச்சொற்
போலப் பொருளும் புகறியெனப்
புகலு மாறஞ் சிரட்டி தினைப்
பொருட்சூத் திரத்தின் பொருள்மயங்கா

தெழுதும் பனுவற் பரணன்முதல்
ஏழேழ் பெருமைக் கவிப்புலவர்
இதயங் களிக்க லிருப்பமுடன்
இறையோன் பொருட்குப் பொருள்விரித்து

முழுதும் பகர்ந்த சனிவாயான்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே 46

சடுந டைச்சிந் துரம ருப்பின்
கதிர்கொள் முத்தஞ் சரவைநீள்
கடல ளிக்கும் பணில முத்தும்
கழையின் முத்தும் கரடுவான்

உடுழ கட்டம் புயல்க ருக்கொண்
டுமிழு முத்தம் கருகல்தேன்
ஒழுகு பொற்பங் கயம டல்தந்
தொளிரு முத்தந் திருகல்காண்

Koviloor Digital Library

படுக ரைச்குண் டகழி நத்தின்
பரிய முத்தந் தெரியவே
பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும்
படியில் முத்தஞ் சிறுமகார்

கொடுப ரப்பும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே. 47

பருவ முற்றுங் குடவ யிற்றெண்
பணிலம் மொய்க்குந் துறையெலாம்
பருமு ரட்செங் கயல்கு திக்கும்
பலப டத்தெண் திரைமுநீர்

பொருது குத்துந் திடர னேத்தும்
புறவு மொய்க்கும் புறவுசேர்
புளின வெற்பெங் கணுநி ரைக்கும்
புளின மொய்க்கும் குவளைவாய்

அரும டற்கண் டினமெ னச்சென்
றளிகள் மொய்க்கும் புதியசூல்
அலவன் மொய்க்குங் கழிவ ழிச்சென்
றகிலகொ ழிக்குங் கரை யெலாங்

கருகு மொய்க்கும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே. 48

பையரவின் உச்சிகுழி யப்பொருங் குண்டகட்
படுகடற் பணில முத்தம்
பார்வையா னுஞ்சிறிது பாரோம் இதன்றிப்
பசுங்கனை வெடித்த முத்தஞ்

செய்யசிந் தையினுமிது வேணுமென் றெருபொழுது
சிந்தியோ முந்திவட்டத்
திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச்
செழுநிழற் சப்ப ராரி

எய்யுமலர் வாளியை எடுத்துத் தெரிந்துநாண்
இறுகப் பிணித்த வல்வில்
என்றருளிர் முத்தத்தை முத்தமென் றனுகோம்
இழுக்கமல முகையு டைக்குந்

Koviloor Digital Library

துய்யமணி முத்தந் தனைத்தொடேம் உன்னுடைய
துகிரில்விலோ முத்த மருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விலோ முத்த மருளே. 49

இறுகல்கரு குதல்முரிவி லட்சுமி புடாயமமுள்
ளேறல்புகை யேறல் செம்மண்
ஏறல்வெச் சந்திருகல் மத்தகக் குழிவன்றி
இரவியொளி யிற்க ரத்தல்

மறுவறு தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தனோக விர்ப்பூ
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகைய ளிப்பேர்

முறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிற்பற்று
முரிதல்திரு குதல்சி வப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
முரிகுதை வடிவொ துங்கல்

துறுமுகங் கக்கலொளி மட்கல்கர டென்னுத
துகிரில்விலோ முத்தம் அருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விலோ முத்தம் அருளே 50

கோதிவரி வண்டுமது உண்டுகுடி கொள்ளுமெங்
குழலுக் குடைந்து விண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குறுந்துளியின் நித்திலக்
கோவையொரு கால்வி ரும்பேம்

காதிலுறும் வள்ளிமக ரக்குழை கடக்குமெம்
கண்ணுக் குடைந்து தொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்தரள மென்னிலொரு
காலமுங் கருதி நயவேம்

போதிலுறு பசுமடற் பாலுமென் பூகம்
பொருந்துமெங் கந்த ரத்தைப்
பொருவரு வேல்வலம் புரியாரம் இன்புறேம்
பொற்றேர்ள் தனக்கு டைந்த

சோதிவேய் முத்தந் தனைத்தொடேம் நின்னுடைய
துகிரில்விலோ முத்தம் அருளே
தோகைமே காராவா கனசெந்தி லாயுனது
துகிரில்விலோ முத்தமருளே. 51

Koviloor Digital Library

6. வாரானைப் பருவம்

மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்

சேரிக் கருங்கை மள்ளர்குயந்
திட்டி அரிந்த கொத்தினுக்குத்
தெண்முத் தளப்பச் சிறுகுடிலற்
சேரக் கொடுபோய் அவர் குவிப்ப

வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்கள் ஈற்றுகைந்து
மேட்டில் உகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென

வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 52

புள்ள மிரிந்த கதிர்ச்செந்நெற்
போரிற் பகடு தினைநெருங்கப்
பூட்டி அடித்து வைகுளைந்து
போதக் குவித்த பொலிக்குவையை

விள்ள அரிய குடகாற்று
விசப் பதடி தினைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட
மேரு கிரிபோல் மிகத்தூற்றிக்

கள்ளம் எறியுங் கருங்கடைக்கட்
கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய அம்முத்தைக்
கண்டுகுடித்த கட்குவிலை

மள்ளர் அளக்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 53

Koviloor Digital Library

தேட அரிய மணியரைஞாண்
சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலதநுதல்
தீட்ட வருக மறுகில்விசோ

யாட வருக மடியிலெடுத்
தணைக்க வருக புதுப்பனிநீர்
ஆட்ட வருக நெறித்தமுலை
அமுதம் பருக வருகமுத்தஞ்

சூட வருக உடற்புழுதி
துடைக்க வருக ஒருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை
தோன்ற வருக சோதிமணி

மாட நெருங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 54

இறுகும் அரைஞாண் இனிப்பூட்டேன்
இலங்கு மகர குண்டலத்தை
யெடுத்துக் குழையின் மீதணியேன்
இனியுன் முகத்துக் கேற்பஒரு

சிறுகுந் திலதந் தனைத்தீட்டேன்
திருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சிறடிக்குச்
சிலம்பு திருத்தேன் நெறித்துவிம்மி

முறுகு முலைப்பால் இனி ஊட்டேன்
முகம்பார்த் திருந்து மொழிபகரேன்
முருகா வருக சிவசமய
முதல்வா வருக திரைகொழித்து

மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 55

எள்ளத் தனைவந் துறுபசிக்கும்
இரங்கிப் பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக்குவித்து விரித்தழுது

Koviloor Digital Library

துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ

மெள்ளத் தவழ்ந்து குறுமுரல்
விளித்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகப்பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை

வள்ளத் தமதுண் டகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 56

வெண்மைச் சிறைப்புள் ஒதிமங்கள்
விரைக்கே தகையின் மடலெடுத்து
விரும்புங் குழவி யெனமடியின்
மீதே இருத்திக் கோதாட்டித்

திண்மைச் சுரிசங் கினிற்குவளைத்
தேறல் முகந்து பாலூட்டித்
செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச்
சேர்த்துத் துயிற்றித் தாலாட்டப்

பெண்மைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகு தன்வாயிற்
பெய்யும் இரையைக் கூரலகு
பிளந்து பெட்பின் இனிதளிக்கும்

வண்மைப் புதுமைத் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 57

ஓடைக் குளிர்தண் துனிப்பனியால்
உடைந்து திரையில் தவழ்ந்தேறி
ஒளிரும் புளினத் திடையொதுங்கி
உறங்குங் கமடம் தனைக்கடந்து

கோடைக் குளிர்காற் றடிக்கவுடல்
கொடுகி நடுங்கி ஊன்கழிந்த
குடக்கூன் பணிலத் துட்புகுந்து
குஞ்சுக் கிரங்கி இரைகொடுக்கும்

Koviloor Digital Library

பேடைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகின் சிறைப்புறத்துப்
பிள்ளைக் குருகு தனையனைத்துப்
பிரச மடற்கே தகைப்பொதும்பின்

வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 58

விண்டு மாவின் கனிதடத்தின்
மீதே விழுக் குருகினங்கள்
வெருவி இரியக் கால்வெகுண்டு
வெடி போய் மீள மண்டுகம்

கண்டு பாய வரிவாளை
கழிக்கே பாயக் கழிக்கானற்
கம்புள் வெகுண்டு துண்ணெனக்கட்
கடைதான் விழித்துத் தன்பார்ப்பைக்

கொண்டு போயக் கருவாளைக்
குலிக்கே பாயக் குடக்கனியின்
குறுங்காற் பலவு வேர்சாய்ந்த
குழிக்கே கோடி கோடிவரி

வண்டு பாயுந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 59

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா

சேரா நிருதர் குலகாலா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வானென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

Koviloor Digital Library

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே. 60

வேறு

கலகெதெரி புகலி வளமுற மருவு
சவுணிய வருக வருகவே
கருணையின் உரிமை அடியவர் கொடிய
கலிகெட வருக வருகவே

சிலைபொரு புருவ வனிதையர் அறுவர்
திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள உனது
திருமுக மலர வருகவே

கொலைபுரி விகட மணிமுடி நிருதர்
குலமற வருக வருகவே
குருமணி வயிரம் இருசிகை நெடிய
குழைபொர வருக வருகவே

மலைமகள் கவுரி திருமுலை பருகு
மழவிடை வருக வருகவே
வலையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே. 61

அணிநெடு மவுலி எறிசிறு புழுதி
அழகுடன் ஒழுக வருகவே
அடியிடு மளவில் அரைமணி முரலும்
அடியொலி பெருக வருகவே

பணிவிடை புரிய வருமட மகளிர்
பரவினர் புகழ வருகவே
பலபல முனிவர் அனைவரும் உனது
பதமலர் பரவ வருகவே

பிணிமுக முதலில் அரியணை யழகு
பெறவரு முருக வருகவே
பிறைபொரு சடிலர் தமதிட மருவு
பிடிபெறு களிறு வருகவே

மணியிதழ் ஒழுகும் அமுதுத குதலை
மழவிடை வருக வருகவே
வலையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே. 62

Koviloor Digital Library

7. அம்புலிப் பருவம்

கலையால் நிரம்பாத கலையுண் டுனக்குறைறை
கலையுண் டிவன்தனக்குக்
களங்கமரு குறமான் உனக்குண்டு குறமான்
கருத்துண் டிவன்தனக்குத்

தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத்
தொகையுண் டிவன்தனக்குத்
துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாருத
சொல்லமுதம் உண்டுனக்குக்

கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கட்செவிக்
கோளரா வைக்கொத்தி யெறியுமே காரமிக்
குமரனுக் குண்டுகண்டாய்

அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே. 63

மாமோக மண்டலம் அகற்றிஅறி வென்னுமுழு
மண்டலத் தைத்தொடுத்து
வடவைமுக மண்டலத் தழலா லுருக்கியினன்
மண்டலத் தூடுபுக்குச்

சோமோத யக்கிரண மண்டலத் தமுதத்
துளித்திவலை பருகியுடலைச்
சோதிமண் டலமென விளக்குமவர் இவனுடைய
துய்யமுக மண்டலத்தை

ஏமோ கருத்துற இருத்திப் பெரும்பரத்
தெல்லைமண் டலமெய்தலாம்
எண்ணுகொண் டிவன்மண் டலச்சக்ர நிலையா
நெழுத்திலி டேறுவருனக்

காமோ பெருக்கமென் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி யாடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே. 64

Koviloor Digital Library

முதிரும்இசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்க்குமிரு நாலிதழ்க்குள்
முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குள்மலர்
முகமண் டலத்துவெயிலால்

எதிருமிருள் அந்தகா ரப்படலீ தள்ளிவந்
தெழும்இரவி மண்டலத்தில்
இன்புற்றுநீவந் தொளிக்குமிடம் அந்தவான்
இரவிமண் டலமுடுக்கள்

உதிருமடு செருவிலிவன் வேலேறு பட்டவர்
உகந்தபெரு வெளியாகையால்
ஒள்ளமு துகுத்தபதி னுறுகலீ கொள்ளுமுன்
உடலினுங் குறைபடாதோ

அதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே. 65

வெறியார் இலீலத்தொடைத் தக்கனழல் வேள்வியை
வெகுண்டுபகல் பல்லுகுத்து
வெள்ளிவிழி யைக்கொடுத் தயிரா வதப்பாகன்
வேறுருக் கொடுபறக்கச்

செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன்
சென்னியைத் திருவாணி
செய்யதுண் டம்துண்டம் ஆக்கியது தக்சன்
சிரத்தையொரு வழிப்படுத்திப்

பொறியார் அழற்கடவுள் தைத்தலம் அறுத்துவீண்
புலவர்முப் பத்துமூவர்
பேனவழி ஒருவர்போ காமலுன் னுடலீயும்
புழுதியில் தேய்த்ததெல்லாம்

அறியாத தல்லநீ செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே 66

விடமொழுகு துகோமுள் எயிற்றுவன் கட்செவி
விரிக்கும் பணடவியரு
மென்பொறி உடற்பெரும் பகுவாய் அராவடிவை
வெம்பசி எடுத்து வெம்பிக்

Koviloor Digital Library

குடதிசைக் கோடையைப் பருகிக் குணக்கெழுங்
கொண்டலே அருந்திவாடைக்
கொழுந்தையுந் தென்றலையும் அள்ளிக் குடித்துக்
கொழுங்கதிரை உண்டதினியுன்

இடமொழிய வேரேர் இலக்கில்லை நீயதற்
கெதிர்நிற்க வல்லையல்லை
இவனுடன் கூடிவிளை யாடிநீ யிங்கே
இருக்கலாம் இங்குவந்தால்

அடல்புனையு மயிலுண் டுனக்குதவி ஆகையால்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே 67

பண்டுபோல் இன்னமுதம் இன்னங் கடைந்திடப்
பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி அளருக வற்றியிப்
பாரினில் திடரானதோ

விண்டலத் தமரர்களும் அமரேச னுஞ்சேர
வீடிநீ டந்தகார
மேவியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ
விடமொழுகு நெட்டெயிற்று

மண்டுவா சுகிதுண்ட மானதோ இன்னமொரு
வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே இவன் நினைந் தாலெந்த
வகைசெலா தாகையானீ

அண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலி ஆடவாவே 68

வட்டமா கத்துள்வெளி வடிவுகொள லாலென்று
மானைத் தரித்திடுகையால்
மந்தா கினித்தரங் கத்துவளம் எய்தலால்
மன்னுங் கணஞ்சூழ்தலால்

இட்டமொடு பேரிரவில் விறுபெற லாலுலகில்
எவருந் துதித்திடுதலால்
இரவின்கண் ணுறுதலால் இடபத்தி லேறலால்
ஏமமால் வரையெய்தலால்

Koviloor Digital Library

முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்வெய்ய
மூரிய வுக்குடைதலால்
முக்கண்ணுமை பங்கனு ரோக்குநீ யென்றுதிரு
முகமலர்ந் துனையழைத்தால்
அட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலி ஆடவாவே 69

காதலால் எறிதிரைக் கடல்மகளிர் சிறுமகார்
கரையிற் குவித்தமுத்தும்
கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமுட்
கண்டல்மடல் விண்டசுண்ணத்

தாதலர இளவாடை கொடுவருங் கானல்வெண்
சங்குநொந் தீற்றுசோந்து
தனியே உகுத்தபரு முத்தமுந் தன்னிலே
சதகோடி நிலவெறிக்கும்

ஈதலா லொரு சிறிதும் இரவில்லை எவருக்கும்
இரவில்லை நீயுங் இங்கே
ஏகினு லுனதுடற் கறைதுடைத் திடுதலாம்
என்பதற் கையமில்லை

ஆதலால் நிதியுனை செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலி ஆடவாவே 70

கடியவளி எறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
கருடவா கன னும்இகல்கூர்
கட்டடமுள் அரைநாள் நெட்டிதழ் உடுத்தபொற்
கமலயோ னியுமெழுந்து

கொடியவெங் கொலைபுரி வராகமென ஒருவனெழு
குவலயம் இடந்துதேடக்
குறித்தொருவன் எனைமாய் அண்டபகி ரண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட

முடியஇது காறுமவர் அறிவுரு வகைநின்ற
முழுமுதற் கடவுள் அடியும்
முடியுநீ கண்டனை எனக்கருதி இன்றுதிரு
முகமலர்ந் துனை அழைத்தால்

Koviloor Digital Library

அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுடன்
அப்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே. 71

பெரியமா கத்துள்நீ வருவைஇவன் வஞ்சகம்
பேசுமா கத்துள்வாரான்
பெருகநீ வேலையிற் புகுவாய் இவன்பார்
பிளக்கவோ வேலைவிட்டான்

உரியமா குண வரையிய் உறுவைநீ இவனன்
புருதகுண வரையேயுருன்
உடலிலே முழுமறு உனக்குண் டிவன்தனக்
கொருமறுவும் இல்லைமீளக்

கரியமா முகிலிலே மறைவைநீ இவன்நெடுங்
கரியமா முகிலின் மறையான்
சருதிநீ இவையெலாம் உணரிவன் பெருமையைக்
கண்டுநீ அங்கிராதே

அரியமா தவன்எங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே 72

பரிய நிழல் தன்னைச் சுளித்துவெயி லொடுபொருது
பாதசங் கிலியை நூறிப்
பாரிசா தத்தருவை இடுகுள கெனக்கவுட்
பகுவாய் புகக்குதட்டித்

தரியலர் நகர்ப்புறத் தெயிலிடு கபாடந்
தனைத்தூள் படுத்தியவர்பொன்
தருணமணி முடியிடறி முறைமுறை அழைக்குந்
தழைசெவிப் பிறைமருப்புச்

சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொலைத்
துடியடிப் புகரொருத்தல்
துங்கவேள் இவனுடைய முன்றிற் புறத்தில்
தூக்கர நிமிர்த்து நிற்கும்

அரியகரு நாகமென வெருவல்கொல் இவனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே 73

Koviloor Digital Library

8. சிறுபறைப் பருவம்

பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப்
பூபாலர் ஏறும் அந்தப்
பூபால னுக்கிளைய துணைவர் நூற் றுவரும்
பொருபதினெட் டக்குரோணி

ஒருவாய்மை சொற்றபடை விரருஞ் செருவினில்
உருத்தெழுலும் நிதியைவர்
உடனுக நின்றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசர ரதியாகியம்

மருவார்கள் தானையிற் பட்டவர்த் தனர்மகுட
வர்த்தனர் அடங்கலும் போய்
மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக
மண்ணேழும் உண்டுமிழ்ந்த

திருவாய் வலம்புரி முழக்குதிரு மால்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவில்எதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே 74

முருந்தாரு பணிமுறுவல் நெய்தல் நில மகளிரிள
முகிழ்முலை தனக்குடைந்து
முளரிமுகை நீரிற் குளித்துநின் றருதாளின்
முற்றிய தவம் புரியவெங்

கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருங்
கட்கடைக் குள்ளுடைந்து
காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு
கரியமுகில் உடல்வெளுத்துப்

பொருந்தாமல் ஓடியந் தரசாரி யாயொரு
பொருப்பேற வளமையேறும்
புகழேற வாழுந் திருச்செந்தி லாயுனது
பொற்றுள் வணக்கமுற்றுத்

நிருந்தார்கள் நெஞ்சம் பெரும்பறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே 75

Koviloor Digital Library

கங்கையணி யுஞ்சடையில் வைத்தகுழ லிப்பிறைக்
கடவுளா லயமீனத்துங்
கங்குற் கருங்கடல் கழிந்தவை கறையிற்
கலித்தவாள் வகோமுழக்கும்

பங்கய மலர்ப்பொகுட் டிதழ்வாய் துளிக்கும்
பசுந்தேறல் உண்டுமெள்ளப்
பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு
படிந்துபல கால்முழக்கும்

வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்துவெளி
மேகநீ ரைக்குடித்து
வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும்வெறி
வெண்திரைக் குண்டகழியிற்

செங்கயல் முழக்குந்திருச் செந்தில் வேலனே
செங்கயல் முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகமே
சிடுபறை முழக்கியருளே. 76

காவான பாரிசா தத்தருக் குலநிழற்
கடவுள்தெரு வீதிதோறுங்
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை
கட்டவிழ்த் திதழுடைக்கும்

பூவாரி லீத்தொடையல் அளகா புரீசன்
புரந்தொறுங் குளிறுமுரசம்
பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப்
பொங்குதெண் திரைமுழக்கப்

பாவாணர் மங்கலக் கலிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்கப்
பரவரிய திருவிழா என்றுபல பல்லியம்
பட்டினந் தொறுமுழக்கத்

தேவாதி தேருயர் சதுமறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 77

வரைவாய் முழங்குங் கடாயானை வெங்கூன்
மருப்பில்விளை முத்துமிளகேய்
மணிமுத்து மடுபாலை வனசுரத் திற்கரு
வராகத்தின் முத்துமண்டர்

Koviloor Digital Library

உரைவாய் முழக்கும் பெரும்புறவி லுந்திநத்
துமிழுமணி முத்துமள்ளர்
ஒளியரு மருதவே லிச்செந்நெல் கன்னல்தரும்
ஒளிமுத்தும் ஒங்குநெய்தற்

கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலம்
கடுஞ்சூல் உகைந்துகான்ற
கதிர்முத்தம் ஒக்கக் கொழித்துவரு பொருநைபாய்
கழிதொறுங் கயல்குதிக்கத்

திரைவாய் முழக்கியருளே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 78

முனைவாகை வடிவேலை வடுவைவெங் கடுவையிதழ்
முளரியைப் பிணையை மதவேள்
மோகவா ளியையடு சகோரத்தை வென்றுகுழை
முட்டிமி ளுங்கண்மடவார்

நினைவாகை வாள்முறுவ லாடியிள முலையாகை
நேர்நேர் நிறுத்திநெய்தல்
நிடுமள காடவி வனத்திற் பிணித்துவெண்
நித்தில வடந்தெரிந்து

புனைவாகை நாள்முடி விளம்பிநடு வாகைமென்
போதிலுறை வாகை யொப்புப்
பொலிவாகை நின்றுகை கனிவாகை நாடிவிகை
போங்கழி கடந்துமெள்ளச்

சினைவாகை பாயுந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெநிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 79

அறந்தரு புரந்தரா தியருலகில் அரமகளிர்
ஆடுமணி யூசல்சிற்றில்
அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்
அருவிபாய் பரங்கிரியுமுட்

பறந்தரு புனிற்றுவெள் கைகடல் திரைதொறும்
பொருதசி ரகிலவாயுமென்
போதுகமழ் திருவாவி னன்குடியும் அரியமறை
புகலுமே ரகமுமினைமைக்

Koviloor Digital Library

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ ருடலுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட
குஞ்சரம் பிளி றுமரவம்

சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே. 80

எழுமிரவி மட்கஒளி தருமணி யழுத்துமுடி
இமையவர் மகிழ்ச்சிபெறவே
இருகுழை பிடித்தவிழி அரமகளிர் சுற்றிநடம்
இதுவென நடித்துவரவே

வழுவறு தமிழ்ப்பனுவல் முறைமுறை யுரைத்துவெது
வரகவிஞர் உட்குழையவே
மகபதியு மிக்கமுனி வரர்கணமும் இச்சையுடன்
வழியடிமை செப்பியிடவே

பொழுதுதொறும் ஒக்கிலிதி முறையுனை அருச்சனைசெய்
புனிதசிவ விப்ரருடனே
புகலரிய பத்தசனம் அரகர வெனக்குலவு
புரவலர் விருப்பமுறவே

செழுமறை முழக்கவரு முருகுமக ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே. 81

தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு
தருணவட வெற்பசையவே
தமரதிமி ரத்துமிதம் எறியுமக ரப்பெரிய
சலதியொலி யற்றவியவே

புவனமுழு தொக்கமணி முடிமிசை இருத்துபல
பொறியுரகன் அச்சமுறவே
புணரியிடை வற்றமொரு மொகுமொகுவெ னப்பருகு
புயலுருமு வெட்கியிடவே

பவனனு மிகுத்தகடை யுகமுடி வெனப்பெருமை
பரவியடி யிற்பணியவே
ஒரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

Koviloor Digital Library

படகநிபி டத்துழனி அசுரர்வெகு விக்கரிய
பரியவலிர யிற்புகுதவே
சிவனருள் மதிக்கவரு முருகுகும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 82

சகரமக ரச்சலதி உலகுதலில் இப்பொழுது
சருவிய புறச்சமயநூல்
தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு
தவநெறி தழைத்துவரவே

அகரஉக ரத்தில்விகா பொருளடைவு பத்தியுறும்
அடியவர் தமக்கருளவே
அமரருல கத்தவரும் எவருமரு விப்பரவி
அடியிணை தனைப்பணியவே

பகரவு நினைத்திடவும் அரிதுனது சொற்பெருமை
பரகதி அளிக்குமெனவே
பலபல முனித்தலிவர் அனைவரும் உனக்கினிய
பணிவிடை தனைப்புரியவே

சிகரபர வெற்பில்வரு முருகுகும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலி யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே. 83

9. சிற்றிற் பருவம்

பொன்னின் மணக்கும் புதுப்புனலிற்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமழைத்துக்

கன்னி மணக்குங் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தேன் உகியேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்

பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாராய் அயிரா வதப்பாகன்

Koviloor Digital Library

சென்னி மணக்குஞ் சேவடியால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 84

தையல் மடவார் இழைத்தவண்டல்
தன்னை அழிக்கும் அதுக்கல்ல
தரளம் உறுத்தி உனது பொற்பூந்
தண்டைத் திருத்தாள் தடியாதோ

துய்ய தவளப் பிறைமுடிக்குஞ்
சோதி யெடுத்து முகத்தணைத்துத்
தோளில் இருத்தும் பொழுதுகணித்
தோளிற் புழுதி தோயாதோ

வையம் அனைத்தும் ஈன்றெடுத்தும்
வயது முதிரா மடப்பாவை
மடியில் இருத்தி முலையூட்டி
வதனத் தணைக்கில் உன்சழற்காற்

செய்ய சிறுதூள் செறியாதோ
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 85

தெளவுங் கரட மடையுடைக்குந்
தந்திப் பகடு பிடிபட்டுந்
தருவும் அமுதம் இருநிதியுந்
தனியே கொள்ளா போகாமல்

எவ்வம் உறவிட் புலத்தமரர்
ஏக்கம் உருமல் அயிராணி
இருமங் கலநாண் அழியாமல்
இமையோர் இனறஞ்சும் அரமகளிர்

பௌவம் எறியுந் துயராழிப்
பழுவத் தழுந்தி முழுகாமல்
பரக்குஞ் சுத்தித் துறைவேள்வி
பழுதா காமல் பரவரிய

தெவ்வர் புரத்தை அடுஞ்சிறுவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 86

Koviloor Digital Library

ஆடுங் கொடித்தேர் எழுபுரவி
அருணன் நடத்தும் அகலிடத்தை
அடைவே படைத்தும் படைத்தபடி
அளித்துந் துடைத்தும் முத்தொழிலுங்

கூடும் பெருமை உனக்குளது
கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக்
கொள்ளுங் கருத்து நின்கருத்துக்
கொங்கை கமந்து கொடிமருங்குல்

வாடுங் கலக விழிமடவார்
மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து
வண்டல் இழைத்த மனையழிக்கை
வன்போ சுரரும் மகவானும்

தேடுங் கமலத் திருத்தாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே 87

புற்றில் அரவந் தனைப்புனைந்த
புனித ருடனே விற்றிருக்கப்
பொலியுந் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்

சுற்றில் வளர்ந்த வரையனைத்துஞ்
சுவர்க்கால் ஆக்கிச் சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுந்தோ ரணக்கால் எனநாட்டி

மற்றில் உவமை னெயங்ஙனக
வரையைத் துளைத்து வழியாக்கி
மாக முகில வி தானமென
வகுத்து மடவா ருடன்கூடிச்

சிற்றில் இழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே. 88

மிஞ்சுங் கனக மணித்தொட்டில்
மிதே இருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக்கேட்டு

Koviloor Digital Library

நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவாய் எனப்புகன்று
நித்தல் உனது பணிவிடையின்
நிலைமை குலையேம் நீயறிவாய்

பிஞ்சு மதியின் ஒருமருப்புப்
பிறங்கும் இருதாட் கவுட்சுவடு
பிழியுங் சுரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகும்

அஞ்சு சுரக்குஞ் சரத்துணையே
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே. 89

துன்று திரைக்குண் டகழ்மடுவில்
சூரன் ஒளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியும் அவரிருந்து
துய்த்த வளமுந் தூளாக்கி

வென்று செருவிற் பொருதழித்தாய்
வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெகுண்டு மீண்டளித்தாய்
வேண்டும் அடியார் வினையொழித்தாய்

கன்றும் அமணர் கழுவேறக்
காழிப் பதியில் வந்துதித்துக்
கள்ளப் பரசம யக்குறும்பர்
கலகம் ஒழித்துக் கட்டழித்தாய்

அன்று தொடுத்துன் வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே. 90

களிப்பார் உனைக்கண் டவரவரே
கண்ணு மனமும் வேருகிக்
கள்ளன் இவனை நம்முடைய
காதல் வலையிற் கட்டுமென

விளிப்பார் விரகம் அங்குரித்த
வேடப் பலிப்பைப் பாரென்று
மெள்ள நகைப்பார் இவருடனே
விளையா டாமல் வேருகித்

Koviloor Digital Library

துளிப்பார் திரைக்குண் டகழுடுத்த
தொல்லைப் பதியும் பகிரண்டத்
தொகையும் தொகையில் பல்லுயிருந்
தோற்றம் ஒடுக்கந் துணையாய்நின்

றளிப்பாய் அழிக்கை கடனலகாண்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே. 91

கூவிப் பரிந்து முலைத்தாயர்
கூட்டி யெடுத்து முலையூட்டிக்
குடுமி திருத்தி மலர்சொருகிக்
கோலம் புனைந்து கொண்டாடிப்

பூவிற் பொலிந்த திருமேனிப்
புனிதா வண்டற் புறத்தெயிலில்
புகுந்தால் இனியுன் னுடலேறப்
புழுதி இறைத்துப் போகாமல்

காவிக் குறுந்தோட் டிதழ்நெருக்குங்
கண்ணி தனைக்கொண் டோச்சிவகைக்
கானல் தரளத் தொடையாலுன்
கைத்தா மரையைக் கட்டிவிடோம்

ஆவித் துணைய வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே. 92

பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி எடுத்து முலையூட்டி

மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் அவரை வெருமலுனை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்

கையால் இழைத்த சிற்றிலுறின்
காலால் அழிக்கை கடனகாண்
காப்பான் அழிக்கத் தொடங்கிலெங்கள்
கவலை எவரோ டினியுரைப்போம்

Koviloor Digital Library

ஐயா உனது வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே. 93

10. சிறுதேர்ப் பருவம்

தண்டே னுடைந்தொழுகு மருமாலை நீள்முடி
தரிக்குஞ் சதக்கிருதுசெந்
தருணமணி ஆசனத் தேறமா தலிசெழுந்
தமனியத் தேருருட்டப்

பண்டே பழம்பகை நிசாசரர்கள் உட்கப்
பரப்புநிலை கெட்டதென்று
பரவுங்கு பேரன்வட பூதரம் பொருபுட்
பகத்தேர் உருட்டவிறு

கொண்டே உதித்தசெங் கதிரா யிரக்கடவுள்
குண்டலந் திருவில்வீசக்
கோலப்ர பாமண் டலச்சுடர் துலக்சமுட்
கோலெடுத் தருண அருணன்

திண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே. 94

வாராரும் இளமுலை முடைத்துகிற் பொதுவியர்
மனைக்குட் புகுந்து மெல்ல
வைத்தவெண் தயிருண்டு குடமுருட் டிப்பெருக
வாரிவெண் ணெயை யுருட்டிப்

பாராமல் உண்டுசெங் கனிவாய் துடைத்துப்
பருஞ்சகடு தன்னையன்று
பரிபுரத் தாளால் உருட்டிவிகோ யாடுமொரு
பச்சைமால் மருக பத்தி

ஆராமை கூருமடி யவர்பழ வினைக்குறும்
பறவே உருட்டி மேலை
அண்டபகி ரண்டமும் அனைத்துலக முஞ்செல்லும்
ஆணையா ழியையு ருட்டிச்

Koviloor Digital Library

தேராதி சாசரர் சிரக்குவ டுருட்டநீ
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பிரனே
சிறுதேர் உருட்டி யருளே. 95

கொந்தவிழ் தடஞ்சாரல் மலயமால் வரைநெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்றும் ஆடகப் பசு நிறங்
கொண்டுவிளை யும்ப ருவரைச்

சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பருமியல்
தண்பொருநை மாந தியுமத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச்
சாலிநெற் குலைப டர்ந்து

முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு
முளிக்கரும் பைக்க றித்து
முகிலெறிக் கும்புனிற் றெருமைவா யுஞ்சிறுவர்
மொழியும் பரந்த வழியஞ்

செந்தமிழ் மண்க்குந் திருச்செந்தில் வேலனே
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பிரனே
சிறுதேர் உருட்டி யருளே. 96

பெருமையுடன் நிள்தலத் திருவர்பர சமயமும்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப் புக்கரும் பகடுவிந் நீரிற்
பிழைத்துநீள் கரையி லேறப்

பொருவஞ் சந்நிதியி லெய்துவது போல்மணி
புடைக்குமிள நீரி ரண்டு
புணரியின் மிதந்துசந் நிதியேற விந்நாட்
பொருந்தவிளை யாடி முன்னள்

இருதிரையி விற்சந் தனக்கொடி மரத்தினை
இழுத்துவரும் எருமை ஏற்றை
எப்பொழுது முதியகற் பகடாக உலகத்தில்
யாவருங் காண வென்று

திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டநீ
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பிரனே
சிறுதேர் உருட்டி யருளே. 97

Koviloor Digital Library

ஆதிநூல் மரபாகி அதனுறும் பொருள் ஆகி
அல்லாவை யானைத்தும் ஆகி
அளவினுக் களவாகி அணுவினுக் கணுவாய
அனைத்துயிரும் ஆகி அதனின்

சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்கள்
தானாகி நானு கிமெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னெளியி லிலை யாகி

ஓதிய தனைத்தினும் அடங்காமல் வேருகி
உள்ளும் புறம்பும் ஆகி
ஒளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிடம்
ஒப்புவித் தெனையி ருத்தித்

தீதினை அகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பிரனே
சிறுதேர் உருட்டி யருளே. 98

KOVILOOR MADAVAR
19040
LIBRARY, KOVILOOR

வேறு

புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூ டணசூரன்
சலமொழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாட்சர காங்கேய
குலவுகொற்றவ குமாரகண் மரவ
குருபர புரு கூதன்
உலக ளித்தவா செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே. 99

வீதி மங்கல விழாவணி விரும்பிய
விண்ணவர் அரமாதர்
சோதி மங்கல கலசகுங் குமமுலை
தோய்ந்தகங் களிகூரச்
சாதி மங்கல வலம்புரி இனமெனத்
தழைச்சிறை யொடுபுல்லி

Koviloor Digital Library

ஒதி மம்துயில் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே. 100

விரைத்த டம்பொழில் வரைமணி ஆசனத்
திருந்துவிண் ணவர்போற்றி
வரைத்த டம்புரை மழவிடை எம்பிரான்
மனமகிழ்ந் திடவாக்கால்
இரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற்
றிதுபொரு ளெனமேனுள்
உரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே. 101

மாதுநாயகம் எனவடி வுடையசிர்
வள்ளிநாயக மண்ணில்
ஈது நாயகம் எனவுனை யன்றிவே
றெண்ணநா யகம்உண்டோ
போது நாயகன் புணரியின், நாயகன்
பொருப்புநா யகன்போற்றி
ஓது நாயக செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே. 102

தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந்
தானநா யகர் தம்பேர்
திக்க னைத்தினும் எண்முதல் இமையோர்
தேவர்தந் திருமேனி
மிக்க மாலிகை தருபவர் அடியவர்
மின்னனர் சமயத்தோர்
ஒக்க வாழ்கெனச் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே. 103

Koviloor Digital Library

1. சயங்கொண்டார்

சயங்கொண்டார், முதலாங் குலோத்துங்க சோழன் (1070—1120) காலத்தைச் சேர்ந்தவர்; அம்மன்னனது அவைக்களப் புலவராயிருந்தவர். இவர் தீபங்குடி என்ற ஊரினர். 'தீபங்குடிபத்து', 'இசையாயிரம்' முதலிய நூல்களும் இவர் பாடியதாகக் கூறுவர்.

முதலாங் குலோத்துங்கனுக்கும், கலிங்கநாட்டரசன் அனந்தபத்மனுக்கும் நடைபெற்ற போரில் சோழன் வெற்றி பெற்றான். சோழவேந்தன் தனது அவையில் ஒரு நாள். 'கலிங்கப் போரில் சயங்கொண்டானைச் சயங்கொண்டான் பாடுதல் வேண்டும்' என்று வேடிக்கையாகக் கூறினன். அதனைக் கேள்வியுற்ற சயங்கொண்டார் இந்நூலினைப் பாடினர்.

கலிங்கத்துப்பரணி

பரணி என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். (1) பரணி நட்சத்திரம் காரணமாக இப்பெயர் வந்தது எனச் சிலர் கூறுவர். (2) போரில் எதிரியின் ஆயிரம் யானைகளை வென்ற மன்னனைப் புகழ்ந்து பாடுவது பரணி எனச் சிலர் கூறுவர். இதனை,

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி"

என்ற (இலக்கண விளக்கம் — 838) நூற்பாவால் உணரலாம்.

கலிங்கத்தில் நடைபெற்ற போரைப் பாடும் நூலாதலால் இந்நூல் கலிங்கத்துப் பரணி எனப்பட்டது. பரணி நூல் வரிசையில் இந்நூல் சிறந்தது என்பதால் இந்நூலாசிரியரைப் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று புலவர் உலகம் போற்றி வழங்கும்.

கோதாவரி ஆற்றுக்கு வடக்கிலும், மகாநதி ஆற்றுக்குத் தெற்கிலும் உள்ள பகுதி கலிங்க நாடாகும். அதன் மன்னன் அனந்தபத்மன். அவன், விசயதரன் என்னும் முதலாங் குலோத்துங்க சோழ வேந்தனுக்குத் திறை செலுத்த மறுத்தான். எனவே, சோழன் தனது படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமானை ஏவினன். இருவருக்கும் நடைபெற்ற போரில் கலிங்க அரசன் தோற்றான்;

Koviloor Digital Library

சோழன் வென்றான். இவ்வரலாற்றையும் வெற்றியையும் இந்நூல் பாடுகின்றது.

இந்நூல், கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப் பாடு, அவதாரம், காளிக்குக்கூளி கூறியது, களம் பாடியது, கூழ் அடுதல் ஆகிய பதின்மூன்று பகுதிகளைக் கொண்டது. 598 தாழிசைகளைக் கொண்டது இந்நூல்.

கடவுள் வாழ்த்து

1. புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
தொழில் காட்ட புவன வாழ்க்கைச்
செயல்வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம்.

2. 'அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த
நிலமகளை அண்டம் காக்கும்
உரிமையினின் கைப்பிடித்த உபய குலோத்
தமன் அபயன் வாழ்க!' என்றே.

3. ஒருவயிற்றிற் பிறவாது
பிறந்தருளி உலகொடுக்கும்
திருவயிற்றிற் றெருகுழவி
திருநாமம் பரவுதுமே.

4. அந்நெடுமால் உதரப்போல் உலகை
அருளபயன் தனிக்கவிகை
இந்நெடுமா நிலமனைத்தும்
பொதிந்திவிது வாழ்கவென்றே.

5. உகநான்கும் பொருள்நான்கும்
உபநிடதம் ஒருநான்கும்
முகநான்கும் படைத்துடைய
முதல்வனையாம் பரவுதுமே.

6. நிலநான்கும் திசைநான்கும்
நெடுங்கடல்கள் ஒருநான்கும்
குலநான்கும் காத்தளிக்கும்
குலபதி வாழ்கவென்றே.

7. பேராழி உலகனைத்தும் பிறங்கவளர் இருள்நீங்க
ஓராழி தனைநடத்தும் ஒண்சுடரைப் பரவுதுமே.

8. பனியாழி உலகனைத்தும் பரந்தகலி யிருள்நீங்கத்
தனியாழி தனைநடத்தும் சயதுங்கன் வாழ்கவென்றே.

Koviloor Digital Library

9. காரணங்கா ரியங்களின்கட் டறுப்போர் யோகத்
கருத்தென்னுந் தனித்தறியிற் கட்டக் கட்டுண்டு
ஆரணமா நாற்கூடத் தூணந்து நிற்கும்
ஐங்கரத்தது ஒருகளிற்றுக்கு அன்பு செய்வாம்.

10. தனித்தனியே திசையானைத் தறிக ளாகச்
சயத்தம்பம் பலநாட்டி ஒருகூ டத்தே
அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்து நிற்கும்
அருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்கவென்றே.

11. பொன்னிரண்டு வரைதோற்கும் பொருவரிய
நிறம்படைத்த புயமும் கண்ணும்
பன்னிரண்டும் ஆறிரண்டும் படைத்துடையான்
அடித்தலங்கள் பணிதல் செய்வாம்.

12. ஓரிரண்டு திருக்குலமும் நீலிபெறவந்து
ஒருகுடைக்கீழ்க் கடலுந் திக்கும்
ஈரிரண்டு படைத்துடைய இரவிகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே.

13. பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகுவுயரத் திருப்பள் என்று
நாமாதும் கலிமாதும் என்னச் சென்னி
நாவகத்துள் இருப்பானை நவிலு வாமே.

14. எண்மடங்கு புகழ்மடந்தை நல்லன் எங்கோன்
யானவன்பால் இருப்பதுநன் றென்பாள் போல
மண்மடந்தை தன்சீர்த்தி வெள்ளை சாத்தி
மகிழ்ந்தபிரான் வளவர்பிரான் வாழ்க வென்றே

15. செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுதல் நாயகனை எய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதும்அணு காநம்
கன்னிதன் மலர்க்கழல்கள்சென்னிமிசை வைப்பாம்

16. கறுத்தசெழி யன்கழல்சி வப்பவரை யேறக்
கார்முகம்வ ளைத்துஉதியர் கோமகன்முடிக்கண்
பொறுத்தமலர் பாதமலர் மீதணிய நல்கும்
பூழியர்பி ரான்அபயன் வாழ்கஇனி தென்றே.

17. மேதி புள்ளலகை தோகை யேறுவணம்
வேழம் என்றகொடி ஏழுடைச்
சோதி மென்கொடிகள் ஏழின் ஏழிருது
ஊழப்ப தந்தொழநி னைத்துமே.

Koviloor Digital Library

18. கேழல் மேழிகலி யாளி வீணைசிலை
கெண்டை என்றினைய பல்கொடி
தாழ மேருவிலு யர்த்த செம்பியர்த
விப்பு லிக்கொடித ழைக்கவே.

19. விதிமறை யவர்தொழில் விளைகவே
விளைதலின் முகில்மழை பொழிகவே
நிதிதரு பயிர்வளம் நிறைகவே
நிறைதலின் உயிர்நிலை பெறுகவே.

20. தலமுதல் உளமனு வளர்கவே
சயதரன் உயர்புலி வளர்கவே
நிலவுமிழ் கவிகையும் வளர்கவே
நிதிபொழி கவிகையும் வளர்கவே.

2. கடை திறப்பு

21. சூதளவு அளவெனும் இளமுலைத்
துடியளவு அளவெனும் நுண்ணிடைக்
காதளவு அளவெனும் மகர்விழிக்
கடலமு தனையவர் திறமினே. 1

22. புடைபட இளமுலை வளர்தொறும்
பொறைஅறி வுடையரும் நிலைதளர்ந்து
இடைபடு வதுபட அருளுவீர்
இடுகதவு உயர்கடை திறமினே. 2

23. சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயிலெழும் மயிலென மயிலெனப்
பரிபுர ஒலியெழ ஒலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினே. 3

24. கூடிய இன்கன வதனிலே
கொடைநர துங்கனெடு அணைவுறுது
ஊடிய நெஞ்சினெடு ஊடுவீர்
உமது நெடுங்கடை திறமினே. 4

25. விடுமின் எங்கள்துகில் விடுமின் என்றுமுனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமின் என்றபொருள் விளைய நின்றருள்செய்
பெடைந லீர்கடைகள் திறமினே. 5

26. எனத டங்கஇனி வளவ துங்கனருள்
எனம கிழ்ந்துஇரவு கனவிடைத்

Koviloor Digital Library

தனத டங்கள் மிசை நகந டந்தகுறி
தடவு வீர்கடைகள் திறமினே. 6

27. முனிபவர் ஒத்திலராய் முறுவல்கி னோத்தலுமே
முகிழ்நகைபெற்றமெனமகிழ்நர் மணித்துவர்வாய்
கனிபவ ளத்தருகே வருதலும் முத்துதிரும்
கயல்களி ரண்டுடையீர் கடைதிற மின்திறமின். 7

28. இத்துயில் மெய்த்துயிலே என்றுகு றித்திலோர்
இதுபுல விக்குமருந் தெனமனம் வைத்தடியில்
கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில் கூர்நயனக்
கடைதிற வாமடவீர் கடைதிற மின்திறமின். 8

29. இகலி முந்தரசர் தொழுவ ரும்பவனி
இரவு கந்தருளு கனவினில்
பகலி முந்தநிறை பெறமு யன்றுமொழி
பதறு வீர்கடைகள் திறமினே. 9

30, முத்து வடஞ்சேர் முகிழ்முலைமேல்
முயங்குங் கொழுநர் மணிச்செவ்வாய்
வைத்த பவள வடம்புனைவீர்
மணிப்பொற் கபாடம் திறமினே. 10

31. தண்கொடை மானதன் மார்புநோய்
தாதகி மாலையின் மேல்விழும்
கண்கொடு போம்வழி தேடுவீர்
கனகநெ டுங்கடை திறமினே. 11

32. அஞ்சியே கயல்கெடக் கூடலிற் பொருதுசென்று
அணிகடைக் குழையிலே விழஅடர்த்தெறிதலால்
வஞ்சிமா னதன்விடும் படையினிற் கொடியகண்
மடநலீர் சுடர்மணிக் கடைதிறந் திடுமினே. 12

33. அவசமுற் றுளம்நெகத் துயில்நெகப் பவளவாய்
அணிசிவப் புறவிழிக் கடைசிவப் புறநிறைக்
கவசமற்று இளநகைக் களிவரக் களிவரும்
கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினே. 13

34. கலவிக் களியின் மயக்கத்தாற்
கலைபோய் அகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடந் திறமினே. 14

35. நனவினிற் சயதரன் புணரவே பெறினுநீர்
நனவெனத் தெளிவுறுது அதனையும் பழையக்

Koviloor Digital Library

கனவெனக் கூறுவீர் தோழிமார் நகைமுகங்
கண்டபின் தேறுவீர் கடைதிறந் திடுமினே. 15

36. மெய்யே கொழுநர் பிழைநலிய
வேட்கை நலிய விடியளவும்
பொய்யே உறங்கும் மடநல்லீர்
பூவைபொற் கபாடம் திறமினே. 16

37. போக அமளிக் களிமயக்கில்
புலர்ந்த தறியா தேகொழுநர்
ஆக அமளி மிசைத்துயில்வீர்
அம்பொற் கபாடம் திறமினே. 17

38. ஆளுங் கொழுநர் வரவுபார்த்து
அவர்தம் வரவு காணுமல்
தாளும் மனமும் புறம்பாகச்
சாத்தும் கபாடம் திறமினே. 18

39. உந்திச் சுழியின் முளைத்தெழுந்த
உரோமப் பகந்தாள் ஒன்றில் இரண்டு
அந்திக் கமலங் கொடுவருவீர்
அம்பொற் கபாடம் திறமினே. 19

40. மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக ஓடிக்
கானம்புக வேளம்புகு மடவீர் கடை திறமின். 20

41. அலைநாடிய புனல்நாடுடை அபயற்கிடு திறையா
மலைநாடியர் துளுநாடியர் மனையிற்கடைதிறமின். 21

42. விலையி லாதவடம் முலையி லாடவிழி
குழையி லாடவிழை கணவர்தோள்
மலையி லாடிவரு மயில்கள் போலவரு
மடந லீர்கடைகள் திறமினே. 22

43. மழலைத்திரு மொழியிற்சில வடுகும்சில தமிழும்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின். 23

44. தழுவுங் கொழுநர் பிழைநலியத்
தழுவேல் என்னத் தழுவியகை
வழுவ உடனே மயங்கிடுவீர்
மணிப்பொற் கபாடம் திறமினே. 24

45. வேகம் விளைய வருங் கொழுநர்
மேவி சிவந்த படிநோக்கிப்
போகம் விளைய நகைசெய்வீர்
பூவைபொற் கபாடம் திறமினே. 25

Koviloor Digital Library

46. சொருகு கொந்தளகம் ஒருகை மேலலைய
ஒருகை கிழலைசெய் துகிலொடே
திருவ னந்தலினும் முகம லர்ந்துவரு
தெரிவை மீர்கடைகள் திறமினே. 26

47. முலைமீது கொழுநர்கைந் நகமேவு குறியை
முன்செல்வ மில்லாத அவர்பெற்ற பொருள்போல்
கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே
கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள் திறமின். 27

48. கடலில் விடமென அமுதென மதனவேள்
சருதி வழிபடு படையொடு கருதுவார்
உடலின் உயிரையும் உணர்வையும் நடுவுபோய்
உருவு மதர்விழி யுடையவர் திறமினே. 28

49. முறுவல் மாலையொடு தரள மாலைமுக
மலரின் மீதும்முலை முகிழினும்
சிறுநி லாவும் அதின் மிகு நிலாவும்என
வருந லீர்கடைகள் திறமினே. 29

50. முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்
செம்பொற் சுபாடம் திறமினே. 30

51. மெய்யில ணைத்துருகிப் பையஅ கன்றவர்தாம்
மீள்வரை னக்கருதிக் கூடல்வி ளைத்து அறவே
கையில ணைத்தமனல் கண்பனி சோர்புனலில்
கரையவி ழுந்தழுவீர் கடைதிற மின்திறமின். 31

52. செருவிள நீர்பட வெம்முலைச்
செவ்விள நீர்படு சேயரிக்
கருவிள நீர்பட ஊடுவீர்
கனகநெ டுங்கடை திறமினே, 32

53. அளக பாரமிசை அசைய மேகலைகள்
அவிழ ஆபரண மிவையெலாம்
இளக மாமுலைகள் இணைய முமல்வரும்
இயன லீர்சுடைகள் திறமினே. 33

54. மதுர மானமொழி பதற வாள்விழிசி
வப்ப வாயிதழ்வெ ளுப்பவே
அதர பானமது பான மாகஅறி
வழியு மாதர்கடை திறமினே. 34

Koviloor Digital Library

55. தங்குகண் வேல்செய்த புண்களைத்
தடமுலை வேதுகொண் டொற்றியும்
செங்கனி வாய்மருந் தூட்டுவீர்
செம்பொன் நெடுங்கடை திறமினே. 35

56. பொருங்கண் வேலினூர் மார்பி னூடுருவு
புண்கள் திரஇரு கொங்கையின்
கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு
கட்டு மாதர்கடை திறமினே. 36

57. இடையி லிலையரி திறுமிறு மெனவிழா
எமது புகலிடம் இனிஇலை யெனவிழா
அடைய மதுகரம் எழுவது விழுவதாம்
அளக வனிதையர் அணிகடை திறமினே. 37

58. உபய தனமசையில் ஒடியுமிடை நடையை
ஒழியும் ஒழியுமென ஒண்சிலம்பு
அபய மபயமென அலற நடைபயிலும்
அரிவை மீர்கடைகள் திறமினே. 38

59. பூவிரி மதுரகம் நுகரவும்
பொருகயல் இருகரை புரளவும்
காவிரி எனவரும் மடநலீர்
கனகநெ டுங்கடை திறமினே. 39

60. களப வண்டலிடு கலச கொங்கைகளின்
மதிள முந்துகனல் சொரியுமென்று
அளக பந்திமிசை அளிகள் பந்தரிடும்
அரிவை மீர்கடைகள் திறமினே. 40

61. வாயின் சிவப்பை விழிவாங்க
மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்
தோயக் கலவி அமுதளிப்பீர்
துங்கக் கபாடம் திறமினே. 41

62. கூடும் இளம்பிறையில் குறுவெயர் முத்துருளக்
கொங்கை வடம்புரளச் செங்கழு நீரளகக்
காடு குலைந்தலையக் கைவளை பூசலிடக்
கலவி விடாமடவீர் கடைதிற மின்திற மின் 42

63. காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த
களப்போர் பாடத் திறமினே. 43

Koviloor Digital Library

64. இலங்கை எறிந்த கருணை கரன்தன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்கம் எறிந்த கருணை கரன்தன்
களப்போர் பாடத் திறமிஞை. 44

65. பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்த பொழுது நினைந்துஅவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் சுபாடந் திறமிஞை. 45

66. வாச மார்முலைகள் மார்பி லாடமது
மாலை தாழ்குழலின் வண்டெழுந்து
ஊச லாடவிழி பூச லாடஉற
வாடு வீர்கடைகள் திறமிஞை. 46

67. நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கும் மடநல்லீர்
மணிப்பொற் சுபாடம் திறமிஞை. 47

68. பொங்கு மதிக்கே தினம்நடுங்கிப்
புகுந்த அறையை நிலஅறைஎன்று
அங்கும் இருக்கப் பயப்படுவீர்
அம்பொற் சுபாடம் திறமிஞை. 48

69. வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் எனவடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் சுபாடம் திறமிஞை. 49

70. ஊடு வீர்கொழுநர் தங்கள் பான்முனிவொ
ழிந்து கூடுதலின் உங்களைத்
தேடுவீர் கடைகள் திறமி ஞைஇனிய
தெறிவை மீர்கடைகள் திறமிஞை. 50

71. பண்படு கிளவியை அழுதெனப்
பரவிய கொழுநனை நெறிசெயக்
கண்கொடு கொலைசெய அருளுவீர்
கனகநெ டுங்கடை திறமிஞை. 51

72. பிழைநி னைந்துருகி அணைவு முமகிழ்நர்
பிரிதல் அஞ்சிவிடு கண்கணீர்
மழைத தும்பவிரல் தரையி லேஎழுது
மடந லீர்கடைகள் திறமிஞை. 52

Koviloor Digital Library

73. நக்காஞ் சிக்கும் வடமலைக்கும்
நடுவில் வெளிக்கே வேடனைவிட்டு
அக்கா னகத்தே உயிர்பறிப்பீர்
அம்பொற் கபாடம் திறமினே. 53

74. செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இனைஞ ராருயிரும்
ஒக்கச் செருகும் குழல்மடவீர்
உம்பொற் கபாடம் திறமினே. 54

3. காடு பாடியது

75. களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் களப்பேயின்
உளப்போர் இரண்டு நிறைவித்தாள்
உறையும் காடு பாடுவாம். 1

76. பொரிந்த காரை கரிந்த சூரைபு
கைந்த வீரையெ ரிந்த வேய்
உரிந்த பாரையெ றிந்த பாலையு
லர்ந்த வோமைக ளந்தவே. 2

77. உதிர்ந்த வெள்ளிலு ணங்கு நெல்லியொ
டுங்கு துள்ளியு லர்ந்தவேல்
பிதிர்ந்த முள்ளிசி தைந்த வள்ளிபி
ளந்த கள்ளிப ரந்தவே 3

78. வற்றல் வாகைவ றந்த கூகைம
டிந்த தேறுபொ டிந்தவேல்
முற்ற லீகைமு ளிந்த விண்டுமு
ரிந்த புன்குநி ரைந்தவே. 4

79. திய வக்கொடிய கான கத்தரைதி
றந்த வாய்தொறும்நு ழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடுதி னக்குமே. 5

80. ஆடு கின்றசிறை வெம்ப ருந்தினிழல்
அஞ்சி அக்கடுவ னத்தைவிட்டு
ஓடு கின்றநிழல் ஒக்கு நிற்குநிழல்
ஓரி டத்தும்உள அல்லவே. 6

81. ஆத வம்பருகும் என்று நின்றநிழல்
அங்கு நின்றுகுடி போனதப்
பாத வம்புனல்பெ ருது ணங்குவன
பருகும் நம்மையென வெருவியே. 7

Koviloor Digital Library

82. செந்நெ ருப்பினை தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்பு
அந்நெ ருப்பினில் புகைதி ரண்டதொப்பு
அல்லது ஒப்புரு அதனி டைப்புரு. 8

83. தீயின் வாயின்நீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாய்நீர் தன்னை நீரெனு
நவ்வி நாவினுல் நக்கி விக்குமே. 9

84. இந்நி லத்துளோர் ஏக லாவதற்கு
எளிய தானமோ அரிய வானுளோர்
அந்நி லத்தின்மேல் வெம்மை யைக்குறித்து
அல்ல வோநிலத்து அடியி டாததே 10

85. இருபொழுதும் இரவிபசும் புரவிவிசும்பு
இயங்காதது இயம்பக் கேண்மின்
ஒருபொழுதுந் தரித்தன்றி ஊடுபோ
கரிது அணங்கின் காடென் றன்ரே. 11

86. காடிதனைக் கடத்தும்எனச் கருமுகிலும்
வெண்மதியுங் கிடக்கு அப்பால்
ஓடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வன்ரே
உகுபுனலும் பனியும் ஐயோ. 12

87. விம்முகடு விசைவனத்தின் வெம்மையினைக்
குறித்தன்ரே விண்ணோர் விண்ணின்
மைம்முகடு முகிற்றிரையிட்டு அமுதவட்டம்
ஆலாவட்டம் எடுப்ப தையோ. 13

88. நிலம்புடைபேர்ந் தோடாமே
நெடுமோடி நிறுத்தியபேய்
புலம்பொடுநின் றுயிர்ப்பனபோல்
புகைந்துமரங் கரிந்துளவால். 14

89. வற்றியபேய் வாயுலர்ந்து
வறன் நாக்கை நீட்டுவபோல்
முற்றியநீள் மரப்பொதும்பின்
முதுப்பாம்பு புறப்படுமே. 15

90. விழிசுழல வருபேய்த்தேர்
மிதந்துவரு நீர்அந்நீர்ச்
சுழிசுழல வருவதெனச்
சூறைவளி சுழன்றிடுமால். 16

Koviloor Digital Library

91. சிதைந்தவுடற் சுடுசுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்பச் சிதறியவப் பொடியால் செம்மை
புதைந்தமணி புகைபோர்த்த தழலே போலும்
போலாவேற் பொடிமூடு தணலே போலும். 17

92. மண்ணெடி அறவறந்து துறந்து அங்காந்த
வாய்வழியே வேய்பொழியும் முத்தம் அவ்வேய்
கண்ணெடுச் சொரிகின்ற கண்ணீ ரன்றேல்
கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும். 18

93. வெடித்தகழை விசைதெறிப்பத் தரைமேல் முத்தம்
வீழ்ந்தனஅத் தரைபுழுங்கி அழன்று மேன்மேற்
பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேல் கொப்புளங்கள் போலும் போலும். 19

94. பல்கால்திண் திரைக்கரங்கள் கரையின் மேன்மேற்
பாய்கடல்கள் நூக்குமது அப்படர்வெங் கானிற்
செல்காற்று வாராமல் காக்க அன்றே!
நிசைக்கரியின் செவிக்காற்றும் அதற்கே யன்றே! 20

95. முள்ளாறுங் கள்ளாறும் தென்னர்ஓட
முன்னெருநாள் வாளபயன் முனிந்த போரின்
வெள்ளாறும் கோட்டாறும் புகையான்மூட
வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும். 21

96. அணிகொண்ட குரங்கினங்கள்
அலகடலுக்கு அப்பாலை
மணலொன்று காணுமல்
வரைஎடுத்து மயங்கினவே. 22

4. கோயில் பாடியது

97. ஒதி வந்தஅக் கொடிய கானகத்து
உறைய ணங்கினுக்கு அயன்வ குத்தவிப்
பூத லம்பழங் கோயில் என்னினும்
புதிய கோயி லுண்டுஅது விளம்புவாம். 1

98. வட்ட வெண்குடை சென்னி மானதன்
வாளின் வாயினுல் மறலி வாயிடைப்
பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர்
பரும ணிக்கருந் திருஇ ருத்தியே 2

99. துவர்நி றக்களிற்று உதியர் ஏவலின்
சுரிகை போர்முகத்து உருவி நேரெதிர்த்து
அவர்நி னைந்தொடுக் குருதி நீர்குழைத்து
அவர்க ருந்தலைச் சுவர டுக்கியே. 3

Koviloor Digital Library

100. அறிஞர் தம்பிரான் அபயன் வாரணம்
அரசர் மண்டலத் தரண றப்பறித்து
எறித ரும்பெருங் கணிம ரங்கள் கொண்டு
எழுது தூணெடு உத்திர மியற்றியே. 4

101. கடித ழிந்துபோர் மிதிலி விற்படும்
கரிம ருப்பினைத் திரள்து லாமெனும்
படிப ரப்பிஅப் பரும யானையின்
பழுள லும்பினில் பாஅ டுக்கியே. 5

102. மீளி மாவுகைத்து அபயன் முன்னெர் நாள்
விருத ராசரைப் பொருது கொண்டபோர்
ஆளி வாரணங் கேழல் சியமென்று
அவைநி ரைத்துநா சிகையி ருத்தியே. 6

103. துங்க பத்திரைச் செங் களத்திடைச்
சோள சேகரன் வாளெ றிந்தபோர்
வெங்க தக்களிற் றின்ப டத்தினுல்
வெளிஅ டங்குவே மிசைக விக்குவே. 7

104. கொள்ளிவாய்ப் பேய்காக்கும்
கோபுரமும் நெடுமதிலும்
வெள்ளியால் சமைத்ததென
வெள்ளெலும்பி னுல்சமைத்தே. 8

105. காரிரும்பின் மகரதோ ரணமாகக் கரும்பேய்கள்
ஓரிரண்டு கால்நாட்டி ஓரிரும்பை மிசைவளைத்தே. 9

106. மயிற்கழுத்தும் கழுத்தரிய மலர்ந்தமுகத்
தாமரையும் மருங்கு சூழ்ந்த
எயிற்கழுத்தும் நிணக்கொடியும் இளங்குழவி
பசுந்தலையும் எங்கும் தூக்கி. 10

107. பணியாத வழுதியர்தம் பாய்களிற்றின்
செவிக் சுளகு பலவும் தூக்கி,
மணியூசல் எனமதுரை மகரதோ
ரணம்பறித்து மறித்து நாட்டி. 11

108. பரிவிருத்தி அலகிட்டுப் பசுங்குருதி
நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி
எரிவிரித்த ஈமவிளக்கு எம்மருங்கும்
ஏற்றியதோர் இயல்பிற் முலோ. 12

109. சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
'தருகவரம்! வரத்தினுக்குத் தக்கதாகப்

Koviloor Digital Library

பலியாக உறுப்பரிந்து தருதும் என்று 13
பரமொலி கடலொலிபோல் பரக்கு மாலோ
110. சொல்லரிய ஓமத்தீ வளர்ப்ப ராலோ
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர வாங்கி
வல்லெரியின் மிசைளரிய விடுவ ராலோ
வழிகுருதி நெய்யாக வார்ப்ப ராலோ. 14
111. அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ.
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ. 15
112. நீண்டபலி பீடத்தில் அரிந்து வைத்த
நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்ணி
ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்கு மாலோ.
அணைதலும்அச் சிரம்அச்ச முறுத்து மாலோ. 16
113. கடன மைந்ததுக ருந்தலைஅ ரிந்த பொழுதே
கடவ தொன்றுமிலை என்றுவிளை யாடும் உடலே
உடல்வி ழுந்திடின்று கர்ந்திடஉ வந்த சிலபேய்
உருபெ றும்பசிஉ டன்றிடஉ டன்திரியுமே 17
114. பகடி டந்துகொள்ப சுங்குருதி இன்று தலைவீ
பலிகொள் என்றகுரல் எண்டிசைபி ளந்து மிசைவான்
முகடி டந்துரும் எறிந்தெனமு ழங்க உடனே
மொகுமொ கென்றெலிமி குந்தமரு கங்கள் பலவே. 18
115. தமரு கங்கள்தரு கின்றசதி யின்கண் வருவார்
அமரி இன்புறும்அ நாதிவரு சாத கர்களே. 19
116. படைவ லங்கொடுப சுந்தலைஇ டங்கொ டணைவார்
உடையொ ழிந்து இடைதுடங்கவரு யோகினிகளே, 20
117. வீங்குதலை நெடுங்கழையின் மிசைதோறுந்
திசைதோறும் விழித்து நின்று
தூங்குதலை சிரிப்பனகண் டுறங்குதலை
மறந்திருக்கும் சுழல்கட் சூர்ப்பேய். 21
118. அரிந்ததலை உடனமர்ந்தே ஆடுகழை
அலைகுருதிப் புனலின் மூழ்கி
இருந்தவுடல் கொளக்காலன் இடுகின்ற
நெடுந்தூண்டில் என்னத் தோன்றும். 22
119. கொல்வாய் ஓரி முழவாகக்
கொள்ளி வாய்ப்பேய் குழவிக்கு
நல்வாய்ச் செய்ய தசைதேடி
நரிவாய்த் தசையைப் பறிக்குமால் 23

Koviloor Digital Library

120. நிணமும் தசையும் பருந்திசிப்ப
நெருப்பும் பருத்தி யும்போன்று
பிணமும் பேயும் சுடுகாடும்
பிணங்கு நரியும் உடைத்தாரோ. 24

5. தேவியைப்பாடியது

121. உவையுவை உளஎன் றெண்ணி
உரைப்ப தென்உரைக் கவந்த
அவைஅவை மகிழ்ந்த மோடி
அவயவம் விளம்பல் செய்வாம். 1

122. ஒரு மலை மத்துவலித்து உலவுக யிற்றினுமற்று
உலகுப ரித்தபணத்து உரகவ டத்தினும்அப்
பருமணி முத்துநிரைத்து உடுமணி தைத்தஇணைப்
பரிபுரம் வைத்தளிர்ப் பதயுக ளத்தினளே. 2

123. அரவொடு திக்கயம்ப் பொழுதுப ரித்தவிடத்து
அடியிட உட்குழிவுற்று அசைவுறும் அப்பொழுதில்
தரணித ரித்ததெனப் பரணிப ரித்தபுகழ்ச்
சயதர னைப்பரவிச் சதிகொள்ந டத்தினளே. 3

124, தணிதவ ளப்பிறையைச் சடைமிசை வைத்தவிடைத்
தலைவர்வ னத்தினிடைத் தனிநுகர் தற்குநினைத்து
அனிதவ ளப்பொடியிட்டு அடையவி லச்சினையிட்டு
அமுதமி ருத்தியசெப் பனைய தனத்தினளே. 4

125. பரிவக லத்தழுவிப் புணர்கல விக்குருகிப்
படர்சடை முக்கணுடைப் பரமர்கொ டுத்தகளிற்று
உரிமிசை யக்கரியிற் குடரொடு கட்செவியிட்டு
ஒருபுரி இட்டிறுகப் புனையுமு டுக்கையளே. 5

126. கலைவளர் உத்தமனைக் கருமுகில் ஒப்பவனைக்
கரடத டக்கடவுட் கனகநி றத்தவனைச்
சிலைவளை வுற்றவுணத் தொகைசெக விட்டபரித்
திறலவ னைத்தரும்அத் திருஉத ரத்தினளே. 6

127. கவளம தக்கரடக் கரியுரி வைக்கயிலைக்
களிறுவி ருப்புறும்அக் கனகமு லைத்தரளத்
தவளவ டத்திடையிற் பவளமொ டொத்தெரியத்
தழலுமிழ் உத்தரியத் தனிஉர கத்தினளே. 7

128, அரியிமி டற்றலையிட்டு அலைகுரு திக்கெதிர்வைத்து
அறவும டுத்தசிவப் பதனைமு ழுத்திசையின்
கரிகர டத்தொளியின் கலுழியி டைக்கழுவிக்
கருமைப டைத்தசுடர்க் கரகம லத்தினளே. 8

Koviloor Digital Library

129. சிமையவ ரைக்கனகத் திரளுரு கப்பரவைத்
திரைசுவ றிப்புகையத் திசைசுடு மப்பொழுதத்து
இமையவ ரைத்தகைதற்கு இருளுமி டற்றிறைவதற்கு
இனியத ரத்தமுதக் கனியத ரத்தினளே. 9

130. உருகுத லைத்தொ டையற்கு வமையு றச்சுழல்வுற்று
உலவுவி ழிக்கடைப்பட்டு உடல்பகை யற்றொழியத்
திருகுதலைக் கிளவிச் சிறுகுத லைப்பவளச்
சிறுமுறு வல்தரளத் திருவத னத்தினளே. 10

131. அருமறை யொத்தகுலத்து, அருணெறி யொத்தகுணத்து
அபயனு தித்தகுலத்து உபயகு லத்துமுதல்
திருமதி யொக்குமெனத் தினகர னெக்குமெனத்
திகழ்வத னத்தினிடைத் திலகவ னப்பினளே. 11

132. அண்டமுறு குலகிரிகள் அவளொருகால் இருகாதில்
கொண்டணியின் குதம்பையுமாம் கோத்தணியின்
மணிவடமாம். 12

133. கைம்மலர்மேல் அம்மனையாம் கந்துகமாம் கழங்குமாம்
அம்மலைகள் அவள்வேண்டின் ஆகாத தொன்றுண்டோ. 13

134. ஓங்காரத்து உட்பொருளாய் ஒருவாது நடந்தாளை
நீங்காமல் நின்றூனை எவ்வண்ணம் நிகழ்த்துவாம். 14

6. பேய்களைப் பாடியது

135. எவ்வணங்கும் அடிவணங்க இப்பெருமை படைத்துடைய
அவ்வணங்கை அகலாத அலகைகளை இனிப்பகர்வாம். 1

136. பெருநெடும்பசி பெய்கல மாவன
பிற்றை நாளின்முன் ஞளின் மெலிவன;
கருநெடும்பனங் காடுமு ழுமையுங்
காலுங் கையுமு டையன போல்வன. 2

137. வன்பி லத்தொடு வாதுசெய் வாயின;
வாயினுல் நிறை யாதவ யிற்றின;
முன்பி ருக்கின்மு கத்தினு மேற்செல;
மும்மு ழும்படும் அம்முழந் தாளின. 3

138. வெற்றெ னும்பைந ரம்பின்ல லித்துமேல்
வெந்நி லாவிற கேய்ந்தவ டம்பின
கொற்ற லம்பெறு கூழிலம் எங்களைக்
கொள்வ தேபணி யென்றுகு ரைப்பன. 4

139. உள்ளொ டுங்கியி ரண்டுமொன் றுகவே
ஒட்டி ஒட்டுவி டாதகொ டிற்றின

Koviloor Digital Library

கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகின்
குன்று தோன்றுவ போலவி ழிப்பன. 5

140. வற்ற லாகஉ லர்ந்தமு துகுகள்
மரக்க லத்தின்ம றிபுற மொப்பன
ஒற்றை வான்தொளைப் புற்றெனப் பாம்புடன்
உடும்பும் உட்புக்கு றங்கிடும் உந்திய. 6

141. பாந்தள் நால்வன போலும் உடல்மயிர்
பாசி பட்டப ழந்தொளை மூக்கின
ஆந்தை பாந்தியி ருப்பத்து ரிஞ்சில்புக்கு
அங்கு மிங்குமு லாவுசெ வியன. 7

142. கொட்டு மேழியுங் கோத்தன பல்லின
கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாலிய
தட்டி வானெத்த கர்க்குத் தலையின
தாழ்ந்து மார்பிடைத் தட்டும்உ தட்டின. 8

143. அட்ட மிட்டநெ டுங்கழை காணில்என்
அன்னை யன்னையென் ரூலுங்கு முவிய
ஒட்ட வொட்டகங் காணில்என் பிள்ளையை
ஒக்கு மொக்குமென் ரூக்கலை கொள்வன, 9

144. புயல ளிப்பன மேலும ளித்திடும்
பொற்க ரத்தப யன்புலி பின்செலக்
கயலொ ளித்தக டுஞ்சுரம் போல்அகங்
காந்து வெம்பசி யிற்புறந் தீந்தவும். 10

145. துஞ்ச லுக்கணித் தாமென முன்னமே
சொன்ன சொன்னது றைதொறும் பேயெலாம்
அஞ்ச லித்தொரு கால்அக லாமலவ்
வணங்கி னுக்கரு காகவி ருக்கவே. 11

146. ஆளைச் சிறுக ளிற்றப யன்பொரூஉம்
அக்க ளத்தில்அ ரசர்சி ரஞ்சொரி
மூளைச் சேற்றில்வ ழுக்கிவி ழுந்திட
மொழிபெ யர்ந்தொரு கான்முட மானவும் 12

147. அந்த நாளக்க ளத்தடு கூழினுக்கு
ஆய்ந்த வெண்பல்ல ரிசியு ரற்புக
உந்து போதினிற் போதகக் கொம்பெனும்
உலக்கை பட்டுவ லக்கைசொற் முளவும். 13

148. விருத ராசப யங்கரன் முன்னெர்நாள்
வென்ற சக்கரக் கோட்டத்தி டைக்கொழுங்

Koviloor Digital Library

குருதி யுங்குட ருங்கலந்து அட்டவெங்
கூழ்தெ றித்தொரு கண்குரு டானவும். 14

149. வண்டல் பாய்பொன்னி நாடனே வாழ்த்திமா
மதுரை வெங்களத் தேமது ரிக்கஅட்
டுண்ட கூழொடு நாவுஞ்ச ருண்டுபுக்கு
உள்வி ழுந்தற ஊமைக ளானவும். 15

150. ஆனை சாயவ டுபரி ஒன்றுகைத்து
ஐம்ப டைப்பரு வத்துஅப யன்பொருஞ்
சேனை வீரர்நின் ரூர்த்திடும் ஆர்ப்பினில்
திமிரி வெங்களத் திற்செவி டானவும். 16

151. பண்டு தென்னவர் சாயஅ தற்குமுன்
பணிசெய் பூதக ணங்கள னைத்தையுங்
கொண்டு வந்தபேய் கூடிய போதில்அக்
குமரி மாதர்பெ றக்குற ளானவும். 17

152. பரக்கு மோதக்க டாரம ழித்தநாள்
பாய்ந்த செம்புன லாடியும் நீந்தியும்
குரக்கு வாதம்பி டித்தவி தத்தினில்
குடிய டங்கலுங் கூன்முது கானவும். 18

153. சிங்க ளத்தொடு தென்மது ராபுரி
செற்ற கொற்றவன் வெற்றிகொள் காலையே
வெங்க ளத்தில் அடுமடைப் பேய்க்குலம்
வேலை புக்குவி ரல்கள் திறந்தவும். 19

V. இந்திர சாலம்

154. இவ்வண்ணத் திருதிறமுந் தொழுதிருப்ப
எலும்பின்மிசைக் குடர்மென் கச்சின்
செவ்வண்ணக் குருதிதோய் சிறுபூதத்
நீபக்கால் கட்டி லிட்டே. 1

155. பிணமெத்தை யஞ்சடுக்கிப் பேயணையை
முறித்திட்டு தூய வெள்ளை
நிணமெத்தை விரித்துயர்ந்த நிலாத்திகழும்
பஞ்சசய னத்தின் மேலே. 2

156. கெடாதபடி கெடுஞ்செழியர் கெடும்பொழுதின்
இடும்பிண்டி பாலம் ஏந்தி
இடாகினிகள் இருமருங்கும் ஈச்சோப்பிப்
பணிமாற இருந்த போழ்தின். 3

Koviloor Digital Library

157. அடல்நாக வெலும்பெடுத்து நரம்பிற் கட்டி
அடித்தடியும் பிடித்து அமரின் மடிந்த வீரர்
குடர்சூடி நிணச்சட்டை யிட்டு நின்ற
கோயில்நா யகநெடும்பேய் கும்பிட்டு ஆங்கே. 4

158. சுரகுருவின் தூதாகி யமன்பாற் செல்வோன்
துணித்துவைத்த சிரம்அன்று தின்றபேயைச்
சிரம்அரிய வதற்குறவாய் ஒளித்துப் போந்த
சிலபேயைத் திருவுள்ளத் தறிதி யன்றே. 5

159. அப்பேயி னெருமுதுபேய் வந்து நின்றிங்கு
அடியேனே விண்ணப்பஞ் செய்க என்றது
இப்பேய்இங் கொருதீங்குஞ் செய்த தில்லை
என்கொலோ திருவுள்ளம் என்னக் கேட்டே. 6

160, அழைக்க வென்றலும் அழைக்க வந்தணுகி
அஞ்சி யஞ்சிஉன தாணையின்
பிழைக்க வந்தனம்பொ றுத்தெ மக்கருள்செய்
பெண்ண ணங்கெனவ ணங்கவே. 7

161. அருத்தி யிற்பிழைநி னைத்த கூளியை
அறுத்த வன்தலைய வன்பெறப்
பொருத்தி அப்பிழைபொ றுத்த னம்பிழை
பொறுத தில்லையினி யென்னவே. 8

162. உய்ந்து போயினம்உ வந்தெ மக்கருள
ஒன்றே டொப்பனவொ ராயிரம்
இந்த்ர சாலமுள கற்று வந்தனென்
இருந்து காணைனஇ றைஞ்சியே. 9

163. ஏற நின்னிருதி ருக்கண் வைத்தருள்செய்
இக்கை யிற்சிலது திக்கைபார்
மாறி யிக்கையில்அ ழைக்க மற்றவை
மதக்க ரித்தலைகள் ஆனபார். 10

164. இக்க ரித்தலையின் வாயி னின்று உதிர
நீர்குடித்து உருமி டித்தெனக்
கொக்க ரித்து அலகை சுற்ற மற்றிவை
குறைத்த லைப்பிணம்மி தப்பபார். 11

165. அடக்கம் அன்றிதுகி டக்க எம்முடைய
அம்மை வாழ்கஎன வெம்மைபார்!
கடக்கம் அன்றபயன் வென்று வெற்றிகொள்
களப்பெ ரும்பரணி இன்றுபார். 12

Koviloor Digital Library

166. துஞ்சி விழ்துரக ராசி பார்! உடல்
துணிந்து விழ்குறைது டிப்பபார்!
அஞ்சி யோடுமத யானை பார்உதிர
ஆறு மோடுவன நூறுபார். 13

167. அற்ற தோளிவைஅ லைப்ப பார்! உவை
யருத நீள்குடர்மி தப்பபார்!
இற்ற தாள்நரியி ழுப்பபார்! அடி
யிழுக்கு மூளையில்வ ழுக்கல்பார்! 14

168. நிணங்கள் பார்! நிணம ணங்க னிந்தன
நிலங்கள் பார்! நிலம்அ டங்கலும்
பிணங்கள் பார்! இவைகி டக்க நம்முடைய
பேய லாதசில பேய்கள் பார்! 15

169. என்ற போதில் இவை மெய்யெ னுட
னிருந்த பேய்பதறி ஒன்றன் மேல்
ஒன்று கால்முறிய மேல்வி ழுந்தடிசில்
உண்ண எண்ணிவெறு மண்ணின்மேல். 16

170. விழுந்துகொ ழுங்குரு திப்புனல் என்று
வெறுங்கைமு கந்துமுகந்து
எழுந்துவி ழுந்தசை யென்றுநி லத்தை
இருந்துது ழாவிடுமே. 17

171. சுற்றநி ணத்துகில் பெற்றனம் என்று
சுலாவுவெ றுங்கையவே
அற்றகு றைத்தலை யென்றுவி சும்பை
அதுக்குமெ யிற்றினவே. 18

172. கயிற்றுறி யொப்பதொர் பேய்வறி தேஉடல்
கௌவின தொக்கவிரைந்து
எயிற்றைய துக்கிநி லத்திடை பேய்கள்
இரைத்தன மேல்விழவே. 19

173. முறம்பல போலந கங்கண்மு றிந்து
முகஞ்சித முழுதுகுந்
திறம்பலி லாவிறல் யோகினி மாதர்
சிரித்துவி லாஇறவே, 20

174. அக்கணம் ஆளும்அ னங்கினை வந்தனை
செய்துக னங்களெதாம்
இக்கண மாளும்இ வித்தவிர் விச்சை
எனக்கைவ சிர்த்தலுமே. 21

Koviloor Digital Library

175. கொற்றவர்கோன் வாளபயன் அறிய வாழுங்
குவலயத்தோர் கூலயனேத்துங் கூற ஆங்கே
கற்றுவந்தார் கற்றஅவன் காணு மாபோல்
கடைபோகக் கண்டருள்என் கல்வியென்றே 22

176. வணங்குதலும் கணங்களெலாம் மாயப் பாவி
மடுத்தெம்மை மறுசூடு சுடுவை யாகில்
ஆணங்கரசின் ஆணைன வணங்கும் இப்போது
அவைதவிர்எங் கிவைகற்ரு யென்ன ஆங்கே. 23

177. நின்முனிவும் சுரகுருவின் முனிவும் அஞ்சி
நிலையரிதென்று இமகிரிபுக் கிருந்தேற்கு ஔவை
தன்முனிவு மவன்முனிவுந் தவிர்க என்று
சாதனமந் திரவிச்சை பலவுந் தந்தே. 24

178. உன்னுடைய பழவடியா ரடியாள் தெய்வ
உருத்திரையோ கினியென்பாள் உனக்கு நன்மை
இன்னமுள கிடைப்பனஇங் கிருக்க என்ன
யானிருந்தேன் சிலகாலம் இருந்த நாளில். 25

8. இராச பாரம்பரியம்

179. செண்டு கொண்டுகரி காலனெரு காலின் இமயச்
சிமய மால்வரைதி ரித்தருளிமீள அதனேப்
பண்டு நின்றபடி நிற்கஇது வென்று முதுகில்
பாய்பு லிக்குறிபொ றித்துஅதும றித்தபொழுதே. 1

180. கால மும்மையுமு ணர்ந்தருளு நார தனெனும்
கடவுள் வேதமுனி வந்துகடல் சூழ்பு வியில்நின்
போலு மன்னருள ரல்லர் என வாசி புகலாப்
புகல்வ தொன்றுளது கேளரச என்று புகல்வான். 2

181. பண்டு பாரதமெ னுங்கதைப ராச ரன்மகன்
பகர வெங்கரிமு கன்பரும ருப்பை யொருகைக்
கொண்டு மேருசிக ரத்தொருபு றத்தி றெழுதிக்
குவல யம்பெறுத வப்பயனு ரைப்ப வரிதால். 3

182. பார தத்தினுள வாகியப வித்ர கதையெம்
பரம னற்சரிதை மெய்ப்பழைய நான்ம றைகளே
நேர தற்குஇதனே நான்மொழிய நீயெழுதி; முன்
நெடிய குன்றின்மிசை யேயிசைவ தான கதைகேள். 4

183. அதன்மு தற்கண்வரு மாதிமுதன் மாய னிவனே
அப்ர மேயமெனு மெய்ப்ரியம தாக வுடனே
பதமு மிப்பதம்வ குக்கவரு பாத மதுவும்
பாத மான சில பார்புகழ வந்த வகையும். 5

Koviloor Digital Library

184. அந்த முட்பவி ருக்குமவ்வி ருக்கின் வழியே
ஆகி வந்ததவ்வ ருக்கமும் வருக்க முழுதும்
வந்த வட்டகமும் ஒட்டரிய சங்கி தைகளும்
வாய்மை வேதியர்க டாம்விதியெ னும்வ கையுமே. 6

185. கமல யோனிமுத லாகவரு முங்கண் மரபிற்
காவன் மன்னவர்க ளாகிவரு கின் றமுறையால்
அமல வேதமிது காணும்இதி லார ணநிலத்து
அமல னேயபய னுகஅறி கென்ற ருளியே. 7

186. அரணி வேள்வியில கப்படும கண்ட வுருவாய்
அரவ ணைத்துயிலு மாதிமு தலாக அபயன்
தரணி காவலள வுஞ்செலமொழிந்து முனிவன்
தானெ ழுந்தருள மாமுனிமொ ழிந்த படியே. 8

187. ஆதி மால்அமல நாபிசம லத்து அயனுதித்து
அயன்ம ரீசியெனு மண்ணலெய ளிந்த பரிசும்
காதல் கூர்தரும ரீசிமக னுகி வளரும்
காசி பன்கதிர் அருக்கனெய ளித்த பரிசும். 9

188. அவ்வ ருக்கன்மக னுகிமனு மேதி னிபுரந்து
அரிய காதலனெ ஆவினது கன்று நிகரென்று
எவ்வ ருக்கமும்வி யப்பமுறை செய்த கதையும்
இக்கு வாகுஇவன் மைந்தனென வந்த பரிசும். 10

189. இக்கு வாகுவின்ம கன்புதல்வ னுன உரவோன்
இகலு வோன் இகலு ரஞ்செய்துபு ரத்த ரனெனும்
சக்கு வாயிரமு டைக்களிறு வாகனமெனத்
தாவி ருந்துபொரு தானவரை வென்ற சயமும். 11

190. ஒருது றைப்புனல்சி னப்புலியும் மானுமுடனே
உண்ண வைத்தவுர வோனுலகில் வைத்த அருளும்
பொருது றைத்தலிபு குந்துமுசு குந்தன் இமையோர்
புரம டங்கலும ரண்செய்துபு ரந்த புகழும். 12

191. கடல்க லக்கவெழு மின்னமுது தன்னெ யொருவன்
கடவுள் வானவர்க ளுண்ண அருள் செய்தகதையும்
உடல்க லக்கறஅ ரிந்துதசை யிட்டும் ஒருவன்
ஒருது லிப்புறவொடு ஒக்கநிறை புக்க புகழும். 13

192. சுராதி ராசன்முத லாகவரு சோழன் முனம்நாள்
சோழ மண்டல மமைத்தபிற கேழுலகையும்
இராச கேசரிபு ரந்துபர கேச ரிகளாம்
இருவ ராணைபுலி யாணையென நின்ற புகழும். 14

Koviloor Digital Library

193. காலனுக்கிதுவழக்கெனவுரைத்தவவனும்
காவிரிப்புனல்கொணர்ந்தவனும்புவியின்
மேலனைத்துயிரும்லீவதிலியாகநமன்மேல்
வென்றிகொண்டவனுமென்றிவர்கள்கொண்ட
விறலும். 15

194. புலியெனக்கொடியிலிந்திரனைவைத்தவவனும்
புணரியொன்றினிடையொன்றுபுகவிட்டவவனும்
வலியினிற்குருதிஉண்கெனவளித்தவவனும்
வாதராசனைவலிந்துபண்கொண்டவவனும். 16

195. தூங்குமூன்றெயிலெறிந்தவவனுந்திரண்மணிச்
சுடர்விமானமதுவானமிசைவவனும்
தாங்கள்பாரதமுடிப்பளவுநின்றுதருமன்
தன்கடற்படைதனக்குதவிசெய்தவவனும்.

196. தளவழிக்குநகைவேல்விழிபிலத்தின்வழியே
தனிநடந்துரகர்தங்கமணிகொண்டவவனும்
களவழிக்கவிதைபொய்கையுரைசெய்யஉதியவன்
கால்வழித்தளையைவெட்டியரசிட்டவவனும். 18

197. என்றுமற்றவர்கள்தங்கள்சரிதங்கள்பலவும்
எழுதிமீளஇதன்மேல்வழுதிசேரன்மடியத்
தன்தனிக்களிறணைந்தருளிவீரமகன்தன்
தனதடங்களொடுதன்புயமணைந்தபரிசும். 19

198. தொழுதுமன்னரேகரைசெய்பொன்னியில்
தொடரவந்திலாமுகரியைப்படத்து
எழுதுகென்றுகண்டிதுமிகைக்கணென்று
இங்கழிக்கவேஅங்கழிந்ததும். 20

199. தத்துநீர்வரால்குரூமிவென்றதுந்
தழுவுசெந்தமிழ்ப்பரிசில்வாணர்பொன்
பத்தொடாறுநூறுரூயிரம்பெறப்
பண்டுபட்டினப்பாலைகொண்டதும். 21

200. ஒருவர்முன்னேர்நாள்தந்துபின்செலா
உதியர்மன்னரேமதுரைமன்னரென்று
இருவர்தம்மையும்கிழிகள்சுற்றுவித்து
எரிவிளக்குவைத்துஇகல்விளைத்ததும், 22

201. வேழமொன்றுகைத்துஆளிவிண்ணின்வாய்
விசையடங்கவும்அசையவென்றதும்
ஈழமுந்தமிழ்க்கூடலுஞ்சிதைத்து
இகல்கடந்ததோர்இசைபரந்ததும். 23

Koviloor Digital Library

202. சதய நாள்விழா உதயர் மண்டலம்
தன்னில் வைத்தவன் தனியொர் மாவின்மேல்
உதய பானுவொத் துதகை வென்றகோல்
ஒருகை வாரண பலக வர்ந்ததும். 24

203. களிறு கங்கைநீ ருண்ண மண்ணியில்
காய்சி னத்தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்
கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும். 25

204. கம்பி லிச்சயத் தம்ப நட்டதும்
கடிய ரண்கொள்கல் யாணர் கட்டறக்
கிம்பு ரிப்பனைக் கிரியு கைத்தவன்
கிரிக ளெட்டினும் புலிபொ றித்ததும். 26

205. ஒருக லிற்றின்மேல் வருக லிற்றையொத்து
உலகு யக்கொளப் பொருது கொப்பையிற்
பொருக ளத்திலே முடிக வித்தவன்
புவிக விப்பதோர் குடைக வித்ததும். 72

206. பனுவலுக்கு முதலாய வேத நான்கில்
பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையர் தங்கன்
மனுவினுக்கு மும்மடிநான் மடியாஞ் சோழன்
மதிக்குடைக்கி ழறந்தளிர்ப்ப வளர்ந்த வாறும். 28

207. குந்தளரைக் கூடற்சங் கமத்துவென்ற
கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை
இந்தநிலக் குலப்பாவை இவன்பாற்சேர
என்ன தவஞ் செய்திருந்தாள் என்னத் தோன்றி. 26

208. எவ்வளவு திரிபுவன முளவாய்த் தோன்றும்
எவ்வளவு குலமறைக ளுளவாய் நிற்கும்
அவ்வளவு திகிரிவரை யளவுஞ் செங்கோல்
ஆணைசெல்ல வபயன்காத் தளிக்கி மாறும். 30

209. இப்பு றத்திமய மால்வரையின் மார்பி னகலத்து
எழுதினனெழுது தற்கரிய வேத மெழுதி
ஒப்பு றத்தனது தொன்மரபு மம்ம ரபின்மேல்
உரைசெய் பல்புகழு மொன்றுமொழி யாதபரிசே. 32

210. எழுதி மற்றுரைசெய் தவரவர்கள் செய்பி.ழையெலாம்
எமர்பொ றுக்கென விப்படிமு டித்த இதனைத்
தொழுது கற்றனம்ள னத்தொழுது சொல்லு மளவில்
சோழ வம்சமிது சொன்னஅறி வென்னவளகோ? 32

Koviloor Digital Library

211. வையகமாங் குலமடந்தை மன்னபயன்
தன்னுடைய மரபு கேட்டே
ஐயனையான் பெற்றெடுத்த அப்பொழுதும்
இப்பொழுதொத் திருந்த தில்லை. 33

212. உலகையெல்லாங் கவிக்கின்ற ஒருகவிகைச்
சயதுங்கன் மரபு கீர்த்தி
அலகையெலாங் காக்கின்ற அம்மைபூ
தலங்காப்பான் அவனே யென்ன. 34

9. பேய் முறைப்பாடு

213. ஆறுடைய திருமுடியா னருளுடைய
பெருந்தேவி அபயன் காக்கும்
பேறுடைய பூதமாப் பிறவாமல்
பேய்களாப் பிறந்து கெட்டேம். 1

214. ஆர்காப்பா ரெங்களோநீ யறிந்தருளிக்
காப்பதல்லால் அடையப் பாழாம்
ஊர்காக்க மதில்வேண்டா உயிர்காத்த
உடம்பினைவிட் டோடிப் போதும் 2

215. ஓய்கின்றேம் ஓய்வுக்கு மினியாற்றேம்
ஒருநாளைக் கொருநாள் நாங்கள்
தேய்கின்ற படிதேய்ந்து மிடுக்கற்றேம்
செற்றலும் உய்ய மாட்டோம். 3

216. வேகைக்கு விறகானேம் மெலியா நின்றேம்
மெலிந்தவுடல் தடிப்பதற்கு விரகும் காணேம்
சாகைக்கித் தனையாசை போதும்; பாழிற்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய். 4

217. சாவத்தாற் பெறுதுமோ-சதுமுகன்றன்
கீழ்நாங்கள் மேலைட் செய்த
பாவத்தா லெம்வயிற்றிற் பசியை வைத்தான்;
பாவியேம் பசிக்கொன்று இல்லேம். 5

218. பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி லாமற்
பறக்கின்றேம் பசிக்கலைந்து பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியுந்தின் றுறுவா யானேம்
உனக்கடிமை யடியேமை யோடப் பாராய். 6

219. அகளங்கன் நமக்கிரகங்கான் அரசரிடுந்
திறைக்கருள்வான் அவன்றன் யானை
நிகளம்பூண் டனவடியேம் நெடும்பசியான்
அறவுலர்ந்து நெற்றுய் அற்றேம். 7

Koviloor Digital Library

220. மூக்கருகே வழுநாறி முடைநாறி
உதடுகளுந் துடிப்ப வாயை
ஈக்குதுவும் குறியாலுய்ந் திருக்கின்றேம்
அன்றுகில் இன்றே சாதும். 8

221. என்றுபல கூளிகள் இரைத்துரைசெய் போதத்து
அன்றிமய வெற்பிலிடை நின்றுவரும் அப்பேய். 9

222. கைதொழுதி றைஞ்சிஅடி யேன்வடக லிங்கத்து
எய்தியவி டத்துள நிமித்தமிவை கேண்மோ. 10

223. மதக்கரி மருப்பிற மதம்புலரு மாலோ
மடப்பிடி மருட்பெழ மதம்பொழியு மாலோ
கதிர்ச்சுடர் விளக்கொளி கறுத்தெரியு மாலோ
காலமுகில் செங்குருதி காலவரு மாலோ. 11

224. வார்முரசி ருந்துவறி தேஅதிரு மாலோ
வந்திரவில் இந்திரவில் வானிலிடு மாலோ
ஊர்பலியில் ஊமனெழ ஓரியழு மாலோ
ஓமவெரி ஈமவெரி போல்கமழு மாலோ. 12

225. பூவிரியு மாலைகள் புலால்கமழு மாலோ
பொன் செய்மணி மாலைஒளி போயொழியு மாலோ
ஓவியமெ லாம்உடல் வியர்ப்பவரு மாலோ
ஊறுபுனல் செங்குருதி நாறவரு மாலோ. 13

226. எனவுரைமு டித்ததனை என்கொல்வினை வென்றே
வினவுரைத னக்கெதிர் விளம்பின ணங்கே. 14

227. உங்கள் குறியும் வடகலிங்கத்
துள்ள குறியும் உமக்கழகே
நங்கள் கணிதப் பேய்கூறும்
நவமும் கனவும் சொல்லுவோம். 15

228. நிருபரணி வென்ற அகளங்கன்மத
யானைநிக ளங்களொடு நிற்ப னவதற்கு
ஒருபாணி யுண்டெனவு ரைத்தனவு
ரைப்படியு மக்கிதுகி டைக்கு மெனவே. 16

229. தடித்தனமெ னத்தலைத டித்தனமெ னப்பலத
னிப்பனைகு னிப்ப வெனவே
நடித்தனந டிப்பவலி யற்றனகொ டிற்றையந
னோத்தனவு தட்டி னுடனே. 17

230. விலக்குகவி லக்குவி னோத்தன னெக்களிவி
னோத்தனவி னோத்த னவிலா
அலக்குகஅ லக்குகஅ டிக்கடிசி ரித்தனவ
யார்த்தனப சித்த பகியே. 19

Koviloor Digital Library

231. ஆடியிரைத் தெழுகணங்கள் அணங்கேயிக் கலிங்கக்கூழ்
கூடியிரைத் துண்டுழியெம் கூடாரப் போதுமோ 19

232. போதும்போ தாதெனவே புடைப்படல மிடவேண்டா
ஓதஞ்சூ ழிலங்கைப்போர்க்கு ஒட்டிரட்டி
கலிங்கப்போர். 20

10. அவதாரம்

233. அன்றிலங்கை பொருதழித்த அவனேஅப்
பாரதப்போர் முடித்துப் பின்னே
வென்றிலகு கதிராழி விசயதரன்
எனஉதித்தான் விளம்பக் கேண்மின்! 1

234. தேவரெலாங் குறையிரப்பத் தேவகிதன்
திருவயிற்றில் வசுதே வற்கு
மூவுலகுத் தொழநெடுமால் முன்னொருநாள்
அவதாரஞ் செய்த பின்னே. 2

235. இருள்முழுது மகற்றும்விது குலத்தோன் தேவி
இகல்விளங்கு தபனலத் திராச ராசன்
அருள்திருவின் திருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையி னவதரித்தா னவனே மீள. 3

236. வந்தருளி அவதாரஞ் செய்தலுமே
மண்ணுலகும் மறைகள் நான்கும்
அந்தரநீங் கினஎன்ன அந்தரதுந்
துமிமுழங்கி யெழுந்த தாங்கே. 4

237. அலர்மழைபோல் மழைபொழிய அதுகண்டு
கங்கைகொண்ட சோழன் தேவி
குலமகள்தன் குலமகனைக் கோகனத
மலர்க்கையான் எடுத்துக் கொண்டே. 5

238. அவனிபர்க்குப் புரந்தரனும் அடையாளம்
அவயவத்தின் அடைவே நோக்கி
இவனெமக்கு மகனுகி இரவிகுலம்
பாரிக்கத் தகுவன் என்றே. 6

239. திங்களினி ளங்குழவி செம்மலிவ னென்றுஞ்
செய்யபரி திக்குலவி ஐயனிவ னென்றுந்
தங்களின்ம கிழ்ந்திருகு லத்தரசர் தாமுந்
தனித்தனி உவப்பதொர் தவப்பயனு மொத்தே. 7

240, பண்டுவசு தேவன்மக னுகிநில மாதின்
படர்களையும் மாயனிவ னென்றுதெளி வெய்தத்

Koviloor Digital Library

தண்டுதனு வாள்பணிலம் நேமியெனு நாமத்
தன்படைக ளானதிரு ஐம்படைத ரித்தே 8

241. சினப்புலிவ ளர்ப்பதொர் சிறுப்புலியு மொத்தே
திசைக்களிற ஊப்பதொர் தனிக்களிறு மொத்தே
அனைத்தறமும் ஒக்க அடி வைக்கஅடி வைத்தே
அறத்தொடும றத்துறைந டக்கநடை கற்றே. 9

242. தாயர்தரு பால்முலை சுரக்கவரு நாளே
தானுமுல கத்தவர் தமக்கருள் சுரந்தே
தூயமனு வுஞ்சுருதி யும்பொருள் விளங்கிச்
சொற்கடெ ரியத்தனது சொற்கடெரி வித்தே. 10

243. திருமார்பின் மலர்மடர்ந்தை திருக்கழுத்தின்
மங்கலநா ணென்ன முந்நூற்
பெருமார்பின் வந்தொளிரப் பிறப்பிரண்'டா
வதுபிறந்து சிறந்த பின்னர். 11

244. போதங்கொள் மாணுருவாய்ப் புவியிரந்த
அஞ்ஞான்று புகன்று சென்ற
வேதங்கள் நான்கினையும் வேதியர்பால்
கேட்டருளி மீண்டு கற்றே. 12

245. நிறைவாழ்வைப் பெறல் நமக்கும் அணித்தென்று
நிலாப்பாவை களிப்ப விந்தத்
துறைவாளைப் புயத்திருத்தி உடைவாளைத்
திருவரையின் ஒளிர வைத்தே. 13

246. ஈரிரும ருப்புடைய வாரணம் உகைத்தே
இந்திரனெ திர்ந்தவரை வென்றுவரு மேயான்
ஓரிரும ருப்புடைய வாரணம் உகைத்தே
ஒன்னலரை வெல்வனென அன்னதுப யின்றே. 14

247. இற்றைவரை யுஞ்செல வருக்கஞெரு நாள்போல்
ஏழ்பரியு கைத்திரு ளகற்றிவரு மேயான்
ஒற்றைவய மானடவி இத்தரைவ ளாகத்து
உற்றவிருள் தீர்ப்பனென மற்றதுப யின்றே. 15

248. சக்கரமு தற்'படையொ ரைந்துமுத ஞளே
தன்னுடைய ஆனவத ஞலவை நமக்குத்
திக்குவிச யத்தின்வரு மென்றவை பயிற்றிச்
செங்கைமலர் நொந்திவ சுமந்திவ தனக்கே. 16

249. உரைசெய்பல கல்விகளின் உரிமைபல
சொல்லுவதென் உவமையுரை செய்யின் உலகத்து
அரசருள ரல்லரென அவைபுகழ
மல்குகலை அவையவைகள் வல்ல பிறகே. 17

Koviloor Digital Library

250. இசையுடனெ டுத்தகொடி அபயனவ
னிக்கிவனே இளவரசில் வைத்த பிறகே
திசையரச ருக்குரிய திருவினே
முகப்பதொரு திருவுளம டுத்தருளியே, 18

251. வளர்வதொர் பதத்தினிடை மதகரி
முகத்தினிடை வேயுகிர் மடுத்து விளையாடு
இளவரியெ னப்பகைஞர் எதிர்முனேக
ழக்கிழிய எறிபடை பிடுத்த ருளியே. 19

252. குடதிசை புகக்கடவு குரகதர
தத்திரவி குறுகலும் எறிக்கு மிருள்போல்
வடதிசை முகத்தரசர் வருகதமு
கத்தனது குரகதம் உகைத்த ருளியே, 20

253. புரமெரிம டுத்தபொழுது அதுவிது
வெனத்திகிரி புகையெரிகு விப்ப வயிரா
கரமெரிய டுத்தரசர் கரமெதிர்
குவிப்பதொரு கடவரைத னேக்க டவியே 21

254. குளமுதிர மெத்தியதொர் குரைகடல்
கடுப்பஎதிர் குறுகலர்கள் விட்டகுதிரைத்
தளமுதிர வெட்டி ஒரு செருமுதிர
ஒட்டினர்கள் தலைமலைகு வித்தருளியே. 22

255. மனுக்கோட்டம் அழித்தபிரான் வளர்பிரான் திருப்புருவத்
தனுக்கோட்ட நமன்கோட்டம் பட்டதுசக்
கரக்கோட்டம், 23

256. சரிக ளந்தொறுந் தங்கள்ச யமகள்
தன்னே மன்னப யன்கைப் பிடித்தலும்
பரிக ளுங்களி றுந்தன ராசியும்
பாரி போகங்கொ டுத்தனர் பார்த்திபர். 24

257. பொருத ராதிபர் கண்கள் சிவந்தில
போரி லோடிய கால்கள் சிவத்தன
விருத ராச பயங்கரன் செங்கையில்
வேல்சி வந்தது கீர்த்தி வெளுத்ததே. 25

258. மாவுகைத் தொருதனி அபயன் இப்படி
வடதிசை மேற்செல மன்னர் மன்னவன்
தேவருக் கரசனுய் விசும்பின் மேற்செலத்
தென்றிசைக் குப்புகுந் தன்மை செப்புவாம். 26

259. மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்தும் மாறித்
துறைகளோ ராறும் மாறிச் சுருதியும் முழக்கம்
ஒய்ந்தே. 27

Koviloor Digital Library

260. சாதிகளொன்றே டொன்று தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியி லில்லாது ஒழுக்கமும் மறந்து போயே. 28

261. ஒருவரை யொருவர் கைம்மிக்கு உம்பர்தங்கோயில் சோம்பி
அரிவையர் கற்பின் மாறி அரண்களு மழிய ஆங்கே. 20

262. கலியிருள் பரந்த காலைக் கலியிருள் கரக்கத் தோன்றும்
ஒலிகடல் அருக்க னென்ன உலகுய்ய வந்துதோன்றி. 30

263. காப்பெலாம் உடைய தானே படைப்பதும் கடனுக்கொண்டு
கோப்பெலாம் குலைந்தோர் தம்மைக் குறியிலே
நிறுத்தி வைத்தெ. 31

264. விரிபுனல் வேலை நான்கும் வேதங்கள் நான்கு மார்ப்பத்
திரிபுவ னங்கள் வாழ்த்தத் திருஅபி டேகஞ் செய்தே. 32

265. அறைகழ லரச ரப்பொழுது அடிமிசை யறுகெடுத்திட
மறையவர் முடியெ டுத்தனர் மனுநெறி தலையெ
டுக்கவே. 33

266. நிரைமணி பலகு யிற்றிய நெடுமுடி மிசைவி திப்படி
சொரிபுன லிடைமு னைத்தன துறைகளின் அறம
னைத்துமே. 34

267. பொதுவற வுலகு கைக்கொடு புலிவளர் கொடியெ டுத்தன
அதுமுதற் கொடியெ டுத்தலும் அமரர்தம் விழவெ
டுக்கவே.

268. குவிகைகொ டரசர் சுற்றிய குரைகழல் அபயன் முத்தணி
கவிகையின் நிலவெ றிந்தது கலியெனு மிருளொ
ளித்ததே. 36

269. அரணுறை யுப்படி மலைகள் அடையவி ளங்கின அனையோன்
ஒருதனி வெண்குடை உலகில் ஒளிகொள் நலந்தரு
நிழலில். 37

270. அரிதுயி லும்படி கடல்கள் அடையவி ளங்கின கவினின்
ஒருகரு வெங்கலி கழுவி உலவுபெ ரும்புகழ் நிலவில். 38

271. நிழலில டைந்தன திசைகள் நெறியில டைந்தன மறைகள்
கழலில டைந்தனர் உதியர் கடலில டைந்தனர்
செழியர். 39

272. கருணையொ டுந்தன துபய கரமுத வும்பொருள் மழையின்
அரணிய மந்திர வலல்கள் அவையுத வும்பெரு
மழையே. 40

273. பரிசில் சுமந்தன கவிகள் பகடு சுமந்தன திறைகள்
அரசு சுமந்தன இறைகள் அவனி சுமந்தன புயமும். 41

Koviloor Digital Library

274. விரித்த வாளுகிர்வி ழித்த முற்புலியை
மீது வைக்க இம யத்தினேத்
திரித்த கோலில்வளே வுண்டு நீதிபுரி
செய்ய கோலில்வளே வில்லையே. 42

275. கதங்க ளிழ்பொருதி றைஞ்சி டாவரசர்
கால்க ளில்தளேயு நூல்களின்
பதங்க ளில்தளேயு மன்றி வேறெரு
பதங்க ளில்தளேக ளில்லையே. 43

276. மென்க லாபமட வார்கள் சிறடி
மிசைச்சி லம்பொலிவி ளேப்பதோர்
இன்க லாம்விளேவ தன்றி எங்குமோர்
இகல்க லாம்விளேவ தில்லையே. 44

277. வருசெருவொன் திறின்மையினுன் மற்போருஞ்
சொற்புலவோர் வாதப் போரும்
இருதிறைவா ரணப்போரும் இகல் மதவா
ரணப் போரும் இணேய கண்டே. 45

278. கலேயினெடும் கலேவாணர் கவியினெடும்
இசையினெடும் காதல் மாதர்
முலேயினெடும் மனுநீதி முறையினெடும்
மறையினெடும் பொழுது போக்கி, 46

279. காலற்முண் டலேயுழக்கும் காவிரியின்
கரைமருங்கு வேட்டை யாடிப்
பாலாற்றங் கரைமருங்கு பரிவேட்டை
ஆடுதற்குப் பயண மென்றே. 47

280. முரசறைகென் றருளுதலும் முழுதுலகும்
ஒருநகருட் புகுந்த தொப்பத்
திரைசெய்கயல் ஒலியடங்கத் திசைநான்கில்
படைநான்கும் திரண்ட ஆங்கே. 48

281. அழகின்மே லழகுபெற அணியணேத்தும்
அணிந்தருளிக் கணித நூலிற்
பழகினர் தெரிந்துரைத்த பழுதறுநாட்
பழுதற்ற பொழுதத்து ஆங்கே. 49

282. அனக தானமறை வாணர்பலர் நின்று பெறவே
அபய தானம்அப யம்புகுது மன்னர் பெறவே
கனக தானம்முறை நின்றுகவி வாணர் பெறவே
கரடதானம்மத வாரணமு மன்றுபெறவே. 50

Koviloor Digital Library

283. மற்ற வெங்கட களிற்றின் உதயக்கி ரியின்மேல்
மதிக விக்திட உதித்திடும் அருக்க னெனவே
கொற்ற வெண்குடைக விப்பமிசைகொண்டு கவிரிக்
குலம திப்புடைச வித்தநில வொத்துவரவே. 61

284. ஒருவ லம்புரி தழங்கொலி முழங்கி யெழவே
உடன்மு முங்குபணி லம்பல முழங்கி யெழவே
பருவம் வந்துபல கொண்டல்கண் முழங்கி யெழவே
பலவி தங்களோடு பல்லிய முழங்கி யெழவே. 52

285. மன்னர் சிச்சய மிகுத்திடை விடாத வொலியும்
மறைவ லாளர்மறை நான்வயின் வழாதவொலியும்
இன்ன மாகடன் முழங்கிஎழு கின்ற வொலியென்று
இம்பர் உம்பரறி யாதபரி செங்கு மிகவே. 53

286. வாழி சோழகுல சேகரன் வகுத்த இசையின்
மதுர வாரியென லாகுமிசை மாத ரிதெனு
ஏழு பாருலகொ டேழிசை வளர்க்க வுரியாள்
யானை மீதுபரி யாதுட னிருந்து வரவே. 54

287. பொன்னின் மாலைமலர் மாலைபணி மாறிஉடனே
புவனி காவலர்கள் தேவியர்கள் சூழ்பி டிவரச்
சென்வி யாணையுடன் ஆணையை நடத்தும் உரிமைத்
தியாக வல்லிநிறை செல்விஉடன் மல்கி வரவே. 55

288. பிடியின் மேல்வரு பிடிக்குல மநேக மெனவே
பெய்வ லீக்கைமட மாதர்பிடி மீதின் வரவே
முடியின் மேன்முடி நிரைத்துவரு கின்ற தெனவே
முறைசெய் மன்னவர்கள் பொற்குடைகவித்துவரவே65

289. யானை மீதுவரும் யானையு மநேக மெனவே
அடுக லிற்றின்மிசை கொண்டர சநேகம் வரவே
சேனை மீதுமொரு சேனைவருகின்ற தெனவே
தெளிப டைக்கல னிலாவொளி படைத்துவராவே. 57

290. முகிலின் மேன்முகில் முழங்கிவரு கின்ற தெனவே
மூரி யானைகளின மேன்முர சதிர்ந்து வரவே
துகிலின் மேல்வரு துகிற்குலமு மொக்கு மெனவெ
தோகை நீள்கொடிகள் மேன்முகி ழெடங்கி வரவே. 58

291. தேரின் மீதுவரு தேர்களும நேகம் எனவே
செம்பொன் மேகலைநிதம்பநிரை தேரின் வரவே
பாரின் மீதுமொரு பாருளது போலும் எனவே
படல தூளியு மெழுந்திடையின் மூடி வரவே. 59

Koviloor Digital Library

292. யானே மேலிளம் பிடியின் மேனிரைத்
திடைய ருதுபோம் எறிக டற்கிணை
சேனை மாகடற் கபய னிம்முறைச்
சேது பந்தனம் செய்த தொக்குவே. 60

293. நீல மாமணிச் சிவிகை வெள்ளமும்
நித்தி லக்குலக் கவிகை வெள்ளமும்
காலி னுன்வரும் யமுனை வெள்ளமும்
கங்கை வெள்ளமும் காண்மின் என்னவே. 61

294. கெண்டை மாசுணம் உவணம் வாரணம்
கேழல் ஆனிமா மேழி கோழிவில்
கொண்ட ஆயிரம் கொடிநு டங்குவே
குளிறு வெம்புலிக் கொடிகு லாவவே. 62

295. தொடைகள் கந்தரம் புடைகொள் கொங்கைகண்
சோதி வாண்முகம் கோதை யோதிமென்
நடைகள் மென்சொலென்று அடைய வொப்பிலா
நகை மணிக்கொடித் தொகை பரக்குவே. 63

296. எங்குமுள மென்கதலி யெங்குமுள
தண்கமுகம் எங்குமுள பொங்கு மிளநீர்
எங்குமுள பைங்குமிழ்கள் எங்குமுள
செங்குமுதம் எங்குமுள செங்க யல்களே. 64

297. ஆறலைத ரங்கமுள அன்னநடை
தாமுமுள ஆலகமழ் பாகு முளவாய்
வேறுமொரு பொன்னிவள நாடுசய
துங்கன்முன் விதித்ததுவும் ஒக்கு மெனவே. 65

298. வேழநிரை என்றமலை யெங்கு மிடை
கின்றஅயில் வென்றிஅப யன்ற னருளால்
வாழஅப யம்புகுது சேரலேடு
கூடமலை நாடடைய வந்த தெனவெ. 66

299. அக்கிரிகு லங்கள்விடும் அங்குலியின்
நுண்திவலை அச்செழியர் அஞ்சி விடுமத்
திக்கிலுள நித்திலமு கந்துகொடு
வீசியொரு தென்றல்வரு கின்றதெனவே. 67

300. தென்றிசையி னின்றுவட திக்கின்முகம்
வைத்தருளி முக்கணுடை வெள்ளி மலையோன்
மன்றினட மாடியருள் கொண்டு விடை
கொண்டதிகை மாநகருள் விட்ட ருளியே. 68

Koviloor Digital Library

301. விட்டஅதி கைப்பதியி லின்றுபய
ணம்பயணம் விட்டுவிளை யாடி அபயன்
வட்டமதி ஒத்தகுடை மன்னர்தொழ
நண்ணினன்வ ளங்கெழுகச்சி நகரே. 69

302. என்னுமித நன்மொழி எடுத்திறைவி
சொல்லுவதன் முன்னம்இகல் கண்டதொருபேய்
தன்னுடைய காலதனது பின்பட
மனத்துவகை தள்ளிவர ஓடிவரவே. 70

303. கலிங்கர் குருதி குருதி கலிங்கம் அடைய அடைய
மெலிந்த வுடல்கள் தடிமின் மெலிந்த வுடல்கள்
தடிமின். 71

304. உணங்கல் வயிறு குளிர உவந்து பருக பருக
கணங்கள் எழுக எழுக கணங்கள் எழுக எழுக. 72

305. என்செயப் பாவி காளிங் கிருப்பதுஅங் கிருப்ப முன்னே
வன்சிறைக் கழுகும் பாறும் வயிறுகள் பீறிப் போன. 73

306. வயிறுக ளென்னிற் போதா வாய்களோ போதா பண்டை
எயிறுக ளென்னிற் போதா என்னினும்ஈண்டப்போதும். 74

307. கிரமலி விழுங்கச் செந்நீர்த் திரைகடல் பருகல் ஆகப்
பிரமனே வேண்டிப் பின்னும் பெரும்பசி பெறவும்
வேண்டும். 75

308. என்ற வோசை தஞ்செவிக் கிசைத்தலும் தசைப்பிணம்
தின்ற போற்ப ருத்துமெய் சிரித்துமேல் விழுந்துமே. 76

309. ஓகை சொன்ன பேயின் வாயை ஓடி முத்த முண்ணுமே
சாகை சொன்ன பேய்க ளோத்த கர்க்க பற்கள்என்னுமே. 77

310. பிள்ளை விழவிழ வும்பெ ருந்து ணங்கை கொட்டுமே
வள்ளை பாடிஆடி ஓடி வாவெ னுவ ழைக்குமே. 78

311. எனுஉ ரைத்த தேவி வாழி வாழி யென்று வாழ்த்தியே
கனுஉ ரைத்த பேயி னைக்க முத்தி னிற்கோ டாடுமே. 79

312. ஆடிவரு பேய்களின் அலந்தலை
தவிர்த்தடு பறந்தலை யறிந்த தனினின்
றோடிவரு பேயைஇக ளுள்ளபடி
சொல்கென வுரைத்தன ளுரைத்த ருளவே. 80

11. காளிக்குக் கூளி கூறியது

313. மாவா யிரமும் படக்கலிங்கர்
மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நாவா யிரமுங் கேட்போர்க்கு
நாளா யிரமும் வேண்டுமால். 1

Koviloor Digital Library

314. ஒருவர்க் கொருவாய் கொண்டுரைக்க
ஒண்ணு தேனும் உண்டாகுஞ்
செருவைச் சிறியேன் விண்ணப்பஞ்
செய்யச் சிறிது கேட்டருளே. 2

315. பாரெ லாமுடை யான்அப யன்கொடைப்
பக்க யக்கரம் ஒப்பெனப் பண்டொர்நாள்
காரெ லாமெழுந் தேழரை நாழிகைக்
காஞ்ச னம்பொழி காஞ்சிய தன்கணே. 3

316. அம்பொன் மேரு வதுகொ லிதுகொலென்
ரூயி ரங்கதிர் வெய்யவன் ஐயுறும்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினில்
செய்த சித்திர மண்டபத் தன்னிலே. 4

317. மொய்த்தி லங்கிய தாரகை வானின்நீள்
முகட்டெ ழுந்த முழுமதிக் கொப்பென
நெய்த்தி லங்கிய நித்திலப் பந்தரின்
நின்று வெண்குடை ஒன்று நிழற்றவே. 5

318. மேற்க வித்த மதிக்குடை யின்புடை
வீக கின்றவெண் சாமரை தன்றிருப்
பாற்க டல்திரை ஓரிரண் டாங்கிரு
பாலும் வந்து பணிசெய்வ போலவே. 6

319. அங்கண் ஞால மனைத்தும் புயத்தில்வைத்
தாட கக்கிரி யில்புலி வைத்தவன்
சிங்க ஆசனத் தேறி யிருப்பதோர்
சிங்க ஏறெனச் செவ்வி சிறக்கவே. 7

320. பணிப்ப ணத்துறை பார்க்கொரு நாயகன்
பல்க லைத்துறை நாவி லிருந்தவன்
மணிப்ப ணிப்புயத் தேசிங்க வாகனி
வந்து செந்திரு மாதொ டிருக்கவே. 8

321. தரும டங்க முகந்து தனம்பொழி
தன்பு யம்பிரி யாச்சாயப் பாவையும்
திரும டந்தையும் போல்பெரும் புண்ணியம்
செய்த தேவியர் சேவித்தி ருக்கவே. 9

322. நாட காதி நிருத்த மனைத்தினும்
நால்வ கைப்பெரும் பண்ணினும் எண்ணிய
ஆடல் பாட லரம்பையர் ஒக்குமவ்
வணுக்கி மாரு மநேக ரிருக்கவே. 10

Koviloor Digital Library

323. சூதர் மாகதர் ஆதிய மாந்தரும்
துய்ய மங்கலப் பாடகர் தரமும்நின்
பாத மாதர ராயவர் சுட்கெலாம்
பைப்பொன் மௌலி எனப்புகழ் பாடவே. 11

324. வீணை யாழ்குழல் தண்ணுமை வல்லவர்
வேறு வேறிவை நூறுவி தம்படக்
காண லாம்வகை கண்டனம் நீயினிக்
காண்டல் வேண்டு மெனக்கழல் போற்றவே. 12

325. தாள மும்செல வும்பிழை யாவகை
தான்வ குத்தன தன்னெதிர் பாடியே
காள முங்களி றும்பெறும் பாணர்தம்
கல்வி யில்பிழை கண்டனன் கேட்கவே. 13

326. வெங்க ளிற்றிலி ழிந்தபின் வந்தடி
வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன்இடு
தங்கள் பொற்குடை சாமரம் என்றிவை
தாங்கள் தங்கரத் தால்பணி மாறவே. 14

327. தென்ன ராதிந ராதிப ரானவர்
தேவி மார்கள்தன் சேடிய ராகவே
மன்ன ராதிபன் வான வராதிபன்
வந்தி ருந்தனன் என்னஇ ருக்கவே. 15

328. மண்ட லீகரும் மாநில வேந்தரும்
வந்து ணங்கு கடைத்தலை வண்டைமன்
தொண்டை மான்முதல் மந்திரப் பாரகர்
சூழ்ந்து தன்கழல் சூடி இருக்கவே. 16

329. முறையி டத்திரு மந்திர வோலையாள்
முன்வ ணங்கி முழுலதும் வேந்தர்தம்
நிறையி டப்பிற நின்றனர் என்றலும்
செய்கை நோக்கிவந் தெய்திருக்கவே. 17

330. தென்னவர் வில்லவர் கூபகர்
சாபகர் சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர்
காடவர் காரிபர் கோசலரே. 18

331. கங்கர் கராளர் கவிந்தர்
துமிந்தர் கடம்பர் துளும்பர்களே
வங்கர் லாடர்ம ராடர்
விராடர் மயிந்தர் சயிந்தர்களே. 19

Koviloor Digital Library

332. சிங்களர் வங்களர் சேகுணர்
சேவணர் செய்யவ ரையணரே
கொங்கணர் கொங்கர்கு லிங்கர்
சவுந்தியர் குச்சரர் கச்சியரே. 21.

332. வத்தவர் மத்திரர் மாளுவர்
மாகதர் மச்சர் மிலேச்சர்களே
குத்தர்கு ணத்தர் வடக்கர்
துருக்கர் குருக்கர் வியத்தர்களே. 21

334. எந்நக ரங்களும் நாடு
மெமக்கருள் செய்தனே எம்மையிடச்
சொன்னத னங்கள் கொணர்ந்தனம்
என்றடி சூடுக ரங்களொடே. 22

335. ஆரம் இவைஇவை பொற்கலம்
ஆனே இவைஇவை ஒட்டகம்
ஆடல் அயமிவை மற்றிவை
ஆதி முடியொடு பெட்டகம்
ஈர முடையன நித்திலம்
ஏறு நவமணி கட்டிய
ஏக வடமிகை மற்றிவை
யாதும் விலையில்ப தக்கமே. 23

336. இவையும் இவையும்ம ணித்திரள்
இனைய இவைகன கக்குவை
இருளும் வெயிலும்ள றித்திட
இலகு மணிமக ரக்குழை
உவையும் உவையும்இ லக்கணம்
உடைய பிடிஇவை உட்பக
டுயர்செய் கொடிஇவை மற்றிவை
உரிமை அரிவையர் பட்டமே. 24

337. ஏறி யருள வடுக்குமிந் நூறு களிறு மிவற்றெதிர்
ஏனை யரச ரொருத்தரோ ரானை யிடுவ ரெனிற்புவி
மாறி அருள அவர்க்கிடையாமும்இசைவம்மனஎப்பல
மான அரசர் தனித்தனி வாழ்வு கருதி உரைப்பரே.

338. அரசர் அஞ்சலென அடியி ரண்டுமவர்
முடியின் வைத்தருளி அரசர்மற்
றுரைசெ யுந்திறைகள் ஒழிய நின்றவரும்
உளர்கொ லென்றருளு பொழுதிலே. 26

Koviloor Digital Library

339. கடவ தந்நிறைகொ டடைய வந்தரசர்
கழல்வ ணங்கினர்கள் இவருடன்
வடக லிங்கர்பதி யவனி ரண்டுவிசை
வருகி லன்திறைகொ டெனலுமே. 27

340. உறுவ தென்கொலென நீலகு லேந்தரசர்
உயிர்ந டுங்க ஒளிர் பவளவாய்
முறுவல் கொண்டபொருள் அறிகி லம்சிறிதும்
முனிவு கொண்டதிலை வதனமே. 28

341. எளியன் என்றிடினும் வலிய குன்றரணம்
இடிய நம்படைஞர் கடிதுசென்
றளிய லம்புமத மலைகள் கொண்டணிமின்
அலனை யுங்கொணர்மின் எனலுமே. 29

342. இறைமொ ழிந்தளவில் எழுக லிங்கமவை
எறிவ னென்றுகுழல் தொழுதனன்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநகர் அரசனே. 30

343. அடைய அத்திசைப் பகைது கைப்பனென்
றுசை கொண்டடல் தொண்டைமான்
விடையெ னக்கெனப் புலியு யர்த்தவன்
விடைகொ டுக்கஅப் பொழுதிலே. 31

344. கடல்க லக்கல்கொல் மலையி டித்தல்கொல்
கடுவி டப்பொறிப் பணப்பணிப்
பிடரொ டித்தல்கொல் படைநி னைப்பெனப்
பிரள யத்தினில் திரளவே. 32

445. வனைக லிப்பவும் முரசொ லிப்பவும்
மரமி ரட்டவும் வயிரமாத்
தொனைய சைப்பவும் திசையி பச்செவித்
தொனைய டைத்தலைத் தொடரவே. 33

346. குடைநி ரைத்தலின் தழை நெருக்கலின்
கொடிவி ரித்தலின் குளிர்ச துக்கமொத்
திடைநி ரைத்தலின் பகல்க ரப்பவுய்து
இருநி லப்பரப் பிருள்ப ரக்கவே. 34

347. அலகில் கட்டழல் கனல்வி ரித்தலால்
அரிய பொற்பணிக் கலனெ றித்தலால்
இலகு கைப்படை கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே ஒளிப ரக்கவே. 35

Koviloor Digital Library

348. அகில வெற்புமின் முனை யானவோ
அடைய மாருதம் புரவி யானவோ
முகில னைத்துமத் தேர்கு ளானவோ
மூரி வேலைபோர் வீர ரானவே. 36

349. பார்சி றுத்தலிற் படைபெ ருத்ததோ
படைபெ ருத்தலிற் பார்சி றுத்ததோ
நேர்செ றுத்தவர்க் கரிது நிற்பிடம்
நெடுவி சும்பலால் இடமு மில்லையே. 37

350. எனவே டுத்துரைத் ததிச யித்துநின்
றினைய மண்ணுளோர் அனைய விண்ணுளோர்
மனந டுக்குறப் புறம்ம றைத்தவான்
மாதி ரங்களைச் சாது ரங்கமே. 38

351. கடல்க ளைக்சொரி மலையுள எனஇரு
கடத டத்திடை பொழிமத முடையன
கனல்வி ளைப்பன முகிலுள எனவிழி
கனல்சி னத்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில வுளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமிடிப்பன வடவனல் உளவென
ஒலிமு கிற்கட கரிகளும் மிடையவே. 39

352. முனைகள் ஒட்டினர் முடியினை யிடறுவ
முடியின் முத்தினை விளைபுக ளெனநில
முதுகில் வித்துவ நிலமுறு துகளற
முகின்மி திப்பன முகில்விடு துளியொடு
கனைக டற்றிரை நிரையென விரைவொடு
கடலி டத்தினை வலமிடம் வருவன
கடலி டத்திறும் இடியென அடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடு கவே. 40

353. இருதி லத்திடர் உடைபடு முருளன
இருபு டைச்சிற குடையன முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகுடி
திவுளி முற்படின் இதுபரி பவமெனும்
ஒருதி னைப்பினை உடையன வினையன
உயர்செய் மொட்டொடு மலரென நிறுவிய
ஒழித ரச்செரு உறுபுனல் உமிழ்வன
உலக ளப்பன இரதமும் மருவியே. 41

Koviloor Digital Library

354. அலகில் வெற்றியும் உரிமையு மிவையென
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவர்
அடிபு றக்கிடில் அமரர்தம் உலகொடிவ்
உலகு கைப்படும் எனினும தொழிபவர்
உடல்ந மக்கொரு சுமையென முனிபவர்
உயிரை விற்றுறு புகழ்கொள உழல்பவர்
ஒருவ ரொப்பவர் படைஞர்கள் மிடையவே. 42

355. விழித்த விழிதவி விழித்த விருதர்கள்
விடைத்து வெடுவெடு சிரித்தவாய்
தெழித்த பொழுதுடல் திமிர்க்க இமையவர்
திகைக்கண் மதகரி திகைக்கவே. 43

356. உகத்தின் முடிவினில் உகைத்த கனகடல்
உவட்டி யெனமுகில் முகட்டின்மேல்
நகைத்த விடுபரி முகக்கண் நுரைசுர
நதிக்கண் நுரையென மிதக்கவே. 44

357. கழப்பில் வெளில்சுளி கதத்தில் இருகவுள்
கலித்த கடம்இடி பொறுத்தபோர்க்
குழப்பி வருமுகில் முழக்கில் அலைகடல்
குளிக்கும் முகில்களும் இடக்கவே. 45

358. கடுத்த விசையிருள் கொடுத்த வுலகொரு
கணத்தில் வலம்வரு கணிப்பில்தேர்
எடுத்த கொடிதிசை இபத்தின் மதமிசை
இருக்கும் அளிகளை எழுப்பவே. 46

359. எழுந்தது சேனை யெழலும் இரிந்தது பாரின் முதுகு
விழுந்தன கானும் மலையும் வெறுந்தரை யான திசைகள் 47

360. அதிர்ந்தன நாலு திசைகள் அடங்கின ஏழு கடல்கள்
பிதிர்ந்தன மூரி மலைகள் பிறந்தது தூளி படலம். 48

361. நிலந்தரு தூளி பருகி நிறைந்தது வானின் வயிறு
வலந்தரு மேக நிரைகள் வறந்தன நீர்கள் சுவறி 49

362. தயங்கொளி ஓடை வரைகள் தருங்கட தாரை மழையின்
அயங்களின் வாயின் நுறையின் அடங்கின தூளி அடைய 50

363. எழுதூ ளியடங் கநடந் துதயத்
தேகுந் திசைகண் டதுமீ ளவிழும்
பொழுதே கலொழிந் துகடற் படையெப்
பொழுதுந் தவிரா துவழிக் கொளவே. 51

Koviloor Digital Library

364. தண்ணு ரின்மலர்த் திரள்தோ ளபயன்
தானே வியசே னைதனக் கடையக்
கண்ணு கியசோ ழனசக் கரமாம்
கருணு கரன்வா ரணமேற் கொளவே. 52

365. தொண்டை யர்க்கரசு முன்வ ருஞ்சுரவி
துங்கு வெள்விடை யுயர்த்தகோன்
வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு
மால்கு ளிற்றின் மிசை கொள்ளவே. 53

366. வாசி கொண்டரசர் வார ணங்கவர
வாண கோவரையன் வாண்முகத்
தூசி கொண்டுமுடி சொண்ட சோழனெரு
சூழி வேழமிசை கொள்ளவே. 54

367. மறித்தோடி யெவ்வரசுஞ் சரிய வென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன் வண்டை வேந்தன்
எறித்தோடை இலங்குநடைக் களிற்றின் மேற்கொண்
டிரைவேட்ட பெரும்புலிபோல் இகன்மேற் செல்ல

368. பாலா றுகுசைத் தலைபொன் முகரிப்
பழவா றுபடர்ந் தெழுகொல் லியெனும்
நாலா றுமகன் ரெருபெண் ணையெனும்
நதியா றுகடந் துநடந் துடனே. 56

369. வயலா றுபுகுந் துமணிப் புனல்வாய்
மண்ணு றுவளங் கொழுகுன் றியெனும்
பெயலா றுபரந் தநிறைந் துவரும்
பேரா றுமிழ்ந் ததுபிற் படவே. 57

370. கோதா வரிநதி மேலா ரெடுகுளிர்
பம்பா நதியொடு சந்தப்பேர்
ஓதா வருநதி ஒருகோ தமையுடன்
ஒலிநீர் மலிதுறை பிறகாக. 58

371. கடையிற் புடைபெயர் கடலொத் தமரர்
கலங்கும் பரிசுக லிங்கம்புக்
கடையப் படரெரி கொஞவிப் பதிகளே
அழியச் சூறைகொள் பொழுதத்தே. 59

372. கங்கா நதியொரு புறமா கப்படை
கடல்போல் வந்தது கடல்வந்தால்
எங்கே புகலிடம் எங்கே யினியரண்
யாரே அதிபதி யிங்கென்றே. 60

Koviloor Digital Library

373. இடிகின் றனமதில் எரிதின் றனபதி
எழுகின் றனபுகை பொழிலெல்லாம்
மடிகின் றனகுடி கெடுகின் றனமினி
வளைகின் றனபடை பகையென்றே. 61

374. உலகுக் கொருமுதல் அபயற் கிடுதிறை
உரைதப் பியதெம தரசேயெம்
பலகற் பனைகளை நினைவுற் றிலைவரு
படைமற் றவன்விடு படையென்றே. 62

375. உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறையிட்டே
அரையிற் றுகில்விழ அடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே. 63

376. அந்தர மொன் றறியாத வடகலிங்கர்
குலவேந்தன் அனந்த பன்மன்
வெந்தறுகண் வெகுளியினுல் வெய்துயிர்த்துக்
கைபுடைத்து வியர்த்து நோக்கி. 64

377. வண்டினுக்கும் திசையானை மதங்கொடுக்கும்
மலர்க்கவிகை அபயற் கன்றித்
தண்டினுக்கும் எளியோனே எனவெகுண்டு
தடம்புயங்கள் குலுங்க நக்கே. 65

378. கானரனும் மலையரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தானரண முடைத்தென்று கருதாது
வருவதுமத் தண்டு போலும். 66

379. என்று கூறலும் எங்க ராயனுன்
ஒன்று கூறுவன் கேளென் றுணர்த்துவான். 67

380. அரசர் சிறுவ ரேனும் அடியவர்
உரைசெ யாதொழி யார்க ளுறுதியே. 68

381. ஏனை வேந்தை யெறியச் சயதரன்
தானை அல்லது தான்வர வேண்டுமோ. 69

382 விட்ட தண்டினின் மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ. 70

383 போரின் மேற்றண் டெடுக்கப் புறக்கிடும்
சேரர் வார்த்தை செவிப்பட்ட தில்லையோ. 71

384. வேலை கொண்டு விழிஞ மழித்ததும்
சாலை கொண்டதுந் தண்டுகொண் டேயன்றே. 72

Koviloor Digital Library

385. மாறு பட்டெழு தண்டுஎழ வத்தவர்
ஏறு பட்டது மிம்முறை யேயன்றே. 73

386. தளத்தொ டும்பொரு தண்டெழப்பண்டொர் நாள்
அளத்தி பட்டத றிந்திலை யையநீ. 74

387. தண்ட நாயகர் காக்கும் நவினையிற்
கொண்ட தாயிரங் குஞ்சர மல்லவோ. 75

388. உழந்து தாமுடை மண்டலந் தண்டினுல்
இழந்த வேந்த ரெனையரென் றெண்ணுகேன். 76

389. கண்டு காணுன் புயவலி நீயுமத்
தண்டு கொண்டவன் சக்கரம் வந்ததே. 77

390. இன்று சிறினும் நானையச் சேனைமுன்
நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால். 78

391. என்றிவையு ரைத்தலுமெ னக்கெதி
ருரைக்கஇமை யோர்சுளு நடுங்கு வர்புயக்
குன்றிவைசெ ருத்தொழில் பெருதுநெடு
நாள்மெலிவு கொண்டபடி கண்டு மிலையோ. 79

392. பிழைக்கவுரை செய்தனபி ழைத்தலை
யெனக் குருதி பேசுவது வாசி கெடவோ
முழைக்கண் இளவாளரி முகத்தெளி
தெனக்களிறு முட்டியெதிர் கிட்டி வருமோ. 80

393. என்னுடைய தோள்வலியு மென்னுடைய
வாள்வலியும் யாதுமறி யாது பிறர்போல்
நின்னுடைய பேதைமையி னுலுரைசெய்
தாய்இதுநி னைப்பளவில் வெல்ல அரிதோ. 81

394. வேழமிர தம்புரவி வெம்படைஞர்
என்றினைய நம்படைவி ரைந்து கடுகச்
சோலகுழ துங்கன்விட வந்துவிடு
தண்டி னெதிர் சென்றமர் தொடங்கு கெனவே. 82

395. பண்ணுக வயக்களிறு பண்ணுக வயப்புரவி
பண்ணுக கணிப்பில் பலதேர்
நண்ணுக படைச்செருநகர் நண்ணுக செருக்கள
நமக்கிகல் கிடைத்த தெனவே. 83

396. கலிங்கமவை யேழினு மெழுந்ததொரு
பேரொலி கறங்குகுட லேழு முடனே
மலங்கியெழு பேரொலி யெனத்திசை
திகைப்புற வருந்தொனி யெழுந்த பொழுதே. 84

Koviloor Digital Library

397. தொளைமுக மதமலி யதிர்வன
தொடுகடல் பருகிய முகிலெனவே
வளைமுக நுரையுக வருபரி
கடலிடை மறிதிரை மெனவெழவே. 85

398. இடையிடை யரசர்கள் இடுகுடை
கவரிகள் இவைகடல் நுரையெனவே
மிடைகொடி புறழ்வன மறிகடல்
அடையவும் மிளிர்வன கயலெனவே. 86

399. அலகினெ டலகுகள் கலகல
எனுமொழி அலைதிரை ஒலியெனவே
உலகுகள் பருகுவ தொருகடல்
இதுவென உடலிய படை எழவே. 87

400. விசைபெற விடுபரி இரதமும்
மறிகடல் மிசைவிடு கலமெனவே
இசைபெற உயிரையும் இகழ்தரும்
இளையவர் எறிசுற வினம் எனவே. 88

401. விடவிகள் மொடுமொடு விசைபட
முறிபட வெறிபட நெறிபடவே
அடவிகள் பொடிபட அருவிகள்
அனல்பட அறுவரை துகள்படவே. 89

402. அறைகழல் இளையவர் முறுகிய
சினவழல் அதுவட வனலெனவே
முறைமுறை முரசுகள் மொகுமொகு
வதிர்வன முதிர்கடல் அதிர்வெனவே. 90

403. ஒருவர்த முடவினில் ஒருவர்தம்
உடல்புக உறுவதோர் படியுகவே
வெருவர மிடைபடு நடுவொரு
வெளியற விழியிட அரிதெனவே. 91

404. வெளியரி தெனவெதிர் மிடைபடை
மனுபரன் விடுபட யதனெதிரே
எளிதென இரைபெறு புலியென
வலியினெ டெடுபெற்று மெடுமெனவே. 92

405. எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே. 93

Koviloor Digital Library

406. வெருவர வரிசிலை தெரித்தநாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை அவரவர் தெழித்ததோர்
தெழிஉல குகள்செவி டெடுக்கவே. 94

407. எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே. 95
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே. 96

408. கனவரை யொடுவரை முனைத்தபோல்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகில் முகிலொடு மெதிர்த்தபோல்
இரதமொ டிரதமும் எதிர்க்கவே. 96

409. பொருபுலி புலியொடு சிலைத்தபோல்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினெ டரியினம் அடர்ப்பபோல்
அரசரும் அரசரும் அடர்க்கவே. 97

410. விளைகனல் விழிகளின் முனைக்கவே
மினலொளி கனலிடை எறிக்கவே
வளைசிலை யுருமென இடிக்கவே
வடிகணை நெடிமழை படைக்கவே. 98

411. குருதியின் நதிவெளி பரக்கவே
குடையினம் நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுடல் அடுக்கியே
கரைஎன இருபுடை கிடக்கவே. 99

412. மருப்பொடு மருப்பெதிர் பொருப்பிவை
எனப்பொரு மதக்கரி மருப்பி னிடையே
நெருப்பொடு நெருப்பெதிர் சுடர்ப்பொறி
தெறித்தெழ நிழற்கொடி தழற்க துவவே. 100

413. நிழற்கொடி தழற்கது வலிற்கடி
தொளித்தவை நினைப்பவர் நினைப்ப தன்முனே
அழற்படு புகைக்கொடி எடுத்தன
புதுக்கொடி அனைத்தினு நிரைத்த தெனவே. 101

414. இடத்திடை வலத்திடை இருத்திய
துணைக்கரம் நிகர்த்தன அடுத்த கரியின்
கடத்தெழு மதத்திடை மடுத்தன
சிறப்பொடு கறுத்தன அவற்றின் எயிறே. 102

Koviloor Digital Library

415. எயிறுக ளுடையபொ ருப்பைவ லித்திடை
எதிரெதிர் இருபணை இட்டுமு றுக்கிய
கயிறுகள் இவையென அக்கர டக்கரி
கரமொடு கரமெதிர் தெற்றிவ லிக்கவே. 103

416. முடுகிய பனைப தத்திலு கக்கடை
முடிவினில் உலகமு ணர்சுடர் விட்டெழு
கடுகிய வடஅன லத்தினை வைத்தது
களமுறு துரகக ணத்தின்மு கத்திலே. 104

417. களமுறு துரக்க ணத்தின்மு கத்தெதிர்
கறுவிளர் சிலர்கல வித்தலை நித்தில
இளமுலை எதிர்பொரும் அப்பொழு திப்பொழுது
தெனவெதிர் கரியின்ம ருப்பின்முன் நிற்பரே. 105

418. எதிர்பொரு கரியின்ம ருப்பைஉ ரத்தினில்
இறஎறி படையினி றுத்தமி றைத்தெழு
சதுரர்சண் மணியக லத்தும ருப்பவை
சயமகள் களபமு லைக்குறி ஒத்ததே. 106

419. சயமகள் களபமு லைக்கணி யத்தகு
தனிவடம் இவையென மத்தக முத்தினை
அயம்எதிர் கடவிம தக்கரி வெட்டினர்
அலைபடை நிரைகள்க ளத்துநி ரைக்கவே. 107

420. அலைபடை நிரைகணி ரைத்தசெ ருக்களம்
அமல்புரி களமென ஒப்பில விற்படை
தலைபொர எரியநெ ருப்பினின் மற்றது
தழல்படு கழைவனம் ஒக்கினு மொக்குமே. 108

421. தழல்படு கழைவனம் எப்படி அப்படி
சடசட தமரமெ ழப்பசு ழிப்படை
அழல்படு புகையொடி ழிச்சிய கைச்சிலை
அடுசிலை பசுழிதொ டுத்துவ லிப்பரே. 109

422. அடுசிலை பசுழிதொ டுத்துவி டப்புகும்
அளவினில் அயமெதிர் விட்டவர் வெட்டின
உடல்சில இருதுணி பட்டன பட்டபின்
ஒருதுணி சருதுமி லக்கைய ழிக்குமே. 110

423. ஒருதுணி கருதுமி லக்கைய ழித்கள
உருவிய பிறைமுக அப்பக ழித்தலை
அரிதரி திதுவமெ னப்பரி யுப்பவர்
அடியொடு முடிகடு ணித்துவி முத்துமே. 111

Koviloor Digital Library

424. அடியொடு முடிகள்து ணித்துவி முப்புரும்
அளவரி தொடைசம ரத்தொட ணைத்தனர்
நெடியன சிலசரம் அப்படி பெற்றவர்
நிறைசரம் நிமிரவி டத்துணி யுற்றவே. 112

425. நிறைசரம் நிமிரவி டத்துணி உற்றவர்
நெறியினை ஓடியெறி கிற்பவ ரொத்தெதிர்
அறைகழல் விருதர்செ ருக்கற வெட்டலின்
அவருடல் இருவகிர் பட்டன முட்டவே. 113

426. விடுத்த வீர ராயு தங்கள் மேல்வி ழாம லேநிறைத்
தெடுத்த வேலி போற்க லிங்கர் வட்ட ணங்கள் இட்டவே.

427. விட்ட வட்ட ணங்கண் மேலெறிந்த வேல்தி றந்தவாய்
வட்ட மிட்ட நீண்ம திற்கு வைத்த பூழை ஒக்குமே. 115

428. கலக்க மற்ற வீரர் வாள்க லந்த சூரர் கைத்தலத்
துலக்கை உச்சி தைத்த போது முங்க லப்பை ஒக்குமே. 116

429. மத்த யானை யின்க ரம்சு ருண்டு வீழ வன்சரம்
தைத்த போழ்தின் அக்க ரங்கள்சக்க ரங்களொக்குமே 117

430. வெங்க லிற்றின் மத்த கத்தின் வீழு முத்து வீரமா
மங்கை யர்க்கு மங்க லப்பொ ரிச்சொரிந்த தொக்குமே118

431. மறிந்த கேட கும்கி டப்ப மைந்தர் துஞ்சி வைகுவோர்
பறிந்த தேரின் நேமி யோடு பார்கி டப்ப தொக்குமே 119

332. களித்த வீரர் விட்ட நேமி கண்டு வீசு தண்டிடைக்
குளித்த போழ்து கைப்பிடித்த கூர்ம முக்க ளொக்குமே120

433. கவந்த மாட முன்பு தம்க ளிப்பொ டாடு பேயினம்
நிவந்த வாடல் ஆட்டு விக்கு நித்த காரர் ஒக்குமே. 121

434. ஒட்ட கங்கள் யானை வாலுயர்த்த மாஅ ழிந்தபோர்
விட்ட கன்று போகி லாது மீள்வ போலும் மீளுமே. 122

435. பிறங்கு சோரி வாரி யிற்பி ளிற்றி வீழ்க ளிற்றினம்
சுறங்கு வேலை நீரு ணக்க வீழ்ந்த மேகம் ஒக்குமே. 123

436. வாளில் வெட்டி வார ணக்கைதோளில் இட்ட
மைந்தர்தாம்
தோளில் இட்டு நீர்வி டுந்து ருத்தி யாளர் ஒப்பரே. 124

437. நேர்முனையில் தொடுத்த பகழிகள்
நேர்வனைவில் சுழற்று மளவினின்
மார்பிடையிற் குளித்த பகழியை
வார்சிலையில் தொடுத்து விடுவரே. 125

Koviloor Digital Library

438. அசையஉரத் தழுத்தி இவுளியை
அடுசளத் தெடுத்த பொழுதவை
விசையமகட் டெடுத்த கொடியென
விருதர்களத் தெடுத்து வருவரே. 126

439. இருதொடையற் றிருக்கு மறவர்கள்
எதிர்பொருகைக் களிற்றின் வலிகெட
ஒருதொடையைச் சுழற்றி எறிவர்கள்
ஒருதொடைஇட் டுவைபபர் எறியவே 127

440. இருவருரத் தின்உற்ற சுரிகையின்
எதிரெதிர்புக் கிழைக்கு மளவிவில்
ஒருவனைக் கிடைத்த பொழுதினில்
உபயபலத் தெடுத்த தரவமே. 128

441. பொருநர்கள் சிலர்தமு ரத்தி விற்கவிழ்
புகர்முகம் மிசையடி யிட்ட திற்பகை
விருதரை அரிவர்சி ரத்தை அச்சிரம்
விழுபொழு தறையெனும் அக்க ளிற்றையே 129

442. விடுபடை பெறுகிலர் மற்றி னிச்சிலர்
விரைபரி விழஎறி தற்கு முற்பட
அடுகரி நுதற்பட விட்ட கைப்படை
அதனையொர் நோடிவரை யிற்ப றிப்பரே. 130

443, அமர்புரி தமதக லத்தி டைக்கவிழ்
அடுகரி நுதலில டிப்பர் இக்களி
றெமதென இருகண்வி ழிக்க உட்கினர்
எனவிடு கிலர்படை ஞர்க்கு வெட்கியே. 131

444. அலகில் சொருமுநிர் பொழுது வண்டையர்
அரசுன் அரசர்கள் நாதன் மந்திரி
உலகு புகழ்கரு ணாக ரன்றன
தொருகை இருபணை வேழம் உந்தவே 132

445. உபய பலமுப்வி டாது வெஞ்சமம்
உடலு பொழுதினில் வாகை முன்கொள
அபயன் விடுபடை ஏழ்க லிங்கமும்
அடைய ஒருமுக மாகி முந்தவே. 133

446 அணிகள் ஒருமுக மாக உந்தின
அமரர் அமரது காண முந்தினர்
துணிகள் படமத மாமு றிந்தன
துரக நிரையொடு தேர்மு றிந்தவே. 134

Koviloor Digital Library

447. விருதர் இருதுணி பார்நி றைந்தன
விடர்கள் தலைமலை யாய்நெ ளிந்தன
குருதி குரைகடல் போல்ப ரந்தன
குடர்கள் குருதியின் மேல்மி தந்தவே. 135

448. கரிகள் கருவிகு ளோடு சிந்தின
கழுகு நரியொடு காகம் உண்டன
திரைகள் திசைமலை யோட டர்ந்தன
திமில குமிலமெ லாம்வி ளைந்தவே. 136

449. புரசை மதமலை ஆயி ரங்கொடு
பொருவ மெனவரும் ஏழ்க லிங்கர்தம்
அரசன் உரைசெய்த ஆண்மை யுங்கெட
அமரில் எதிர்விழி யாதொ துங்கியே. 137

450. அறியும் முழைகளி லோபதுங்கிய
தரிய பிலனிடை யோம றைந்தது
செறியும் அடவியி லோக ரந்தது
தெரிய அரியதெ ஞஅ டங்கவே. 138

451. எதுகொல் இதுஇது மாயை ஒன்றுகொல்
எரிகொன் மறலிகொல் ஊழி யின்கடை
அதுகொல் எனவல ருவி மூந்தனர்
அலதி குலதியோ டேழ்க லிங்கரே. 130

452. வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே. 140

453, ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை ஓட அஞ்சினர்
அருவர் வருவரெ ஞவி றைஞ்சினர்
அபயம் அபயமெ ஞந டுங்கியே. 141

454. மழைகள் அதிர்வன போலு டன்றன
வளவன் விடுபடை வேழம் என்றிருண்
முழைகள் நுழைவர்கள் போரில் இன்றுநம்
முதுகு செயும்உப காரமென்பரே. 142

455. ஒருக லிங்கமொ ருவன ழித்தநாள்
ஒருக லிங்கமொ ருவரு டுத்ததே. 143

456. அப்படிக் கலிங்க ரோட அடர்த்தெறி சேனை வீரர்
கைப்படு களிறும் மாவும் கணித்துரைப் பவர்கள்யாரே? 144

Koviloor Digital Library

457. புண்தரு குருதி பாயப் பொழிதரு கடமும் பாய
வண்டொடும் பருந்தி னெடும் வளைப்புண்டகளிறநேகம். 145

458. ஒட்டறப் பட்ட போரில் ஊர்பவர் தம்மை வீசிக்
கட்டறுத் தவர்போல் நின்று கட்டுண்ட களிறநேகம். 146

459. வரைசில புலிக ளோடு வந்துகட் டுண்ட வேபோல்
அரைசருந் தாமும் கட்டுண்டு அகப்பட்ட களிற நேகம். 147

460. நடைவ யப்பரி யிரதம் ஒட்டகம்
நவநி திக்குல மகளிரென்று
அடைய வப்பொழுது அவர்கள் கைக்கொள்ளும்
அவைக ணிப்பதும் அருமையே. 148

461. இவைக வர்ந்தபின் எழுக லிங்கர்தம்
இறையை யுங்கொடு பெயர்துமென்று
அவனி ருந்துழி அறிக வென்றனன்
அபயன் மந்திரி முதல்வனே. 149

462. உரைகள் பிற்படு மளவில் ஒற்றர்கள்
ஓலிக டற்படை கடிதுபோய்
வரைக ளில்புடை தடவி அப்படி
வனமி லைப்புரை தடவியே. 150

463. சுவடு பெற்றிலம் அவனை மற்றொரு
சுவடு பெற்றனம் ஒருமலைக்
குவடு பற்றியது அவன டற்படை
அதுகு ணிப்பரிது எனலுமே. 151

464. எக்குவடும் எக்கடலும் எந்தக் காடும்
இனிக்கலிங்கர்க் கரணுவது இன்றே நாளும்
அக்குவடு மக்கடலும் வளைந்து வெய்யோன்
அத்தமனக் குவடணையும் அளவிற் சென்றே. 152

465. தோலாத களிற்றபயன் வேட்டைப் பன்றி
தொழுவடைத்துத் தொழுவதனைக் காப்பார்போல
வேலாலும் வில்லாலும் வேலி கோலி
வெற்பதனை விடியளவுங் காத்து நின்றே. 153

466. செம்மலையாய் ஒளிபடைத்த தியாதோ என்றும்
செங்கதிரோன் உதயஞ்செய்து உதய மென்னும்
அம்மலையோ இம்மலையும் என்னத் தெவ்வர்
அழிகுருதி நதிபரக்க அறுக்கும் போழ்தில். 154

467. வரைக்கலிங்கர் தமைச்சேர மாசை ஏற்றி
வன்தூறு பறித்தமயிர்க் குறையும் வாங்கி

Koviloor Digital Library

அரைச்சலிங்கம் உரிப்புண்ட கலிங்கர் எல்லாம்
அமணரெனப் பிழைத்தாரும் அநேகர் ஆங்கே. . 155

468. வேடத்தால் குறையாது முந்நூலாக
வெஞ்சிலைநாண் மடித்திட்டு விதியாற் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேம் கரந்தோம் என்றே
அரிதனைவிட்டு உயிர்பிழைத்தார் அநேகர் ஆங்கே. 156

469. குறியாகக் குருதிகொடி ஆடையாகக்
கொண்டுடுத்துப் போர்த்துத்தங் குஞ்சி முண்டித்து
அறியீரோ சாக்கியரை யுடைகண் டால்என்
அப்புறமென் றியம்பிடுவர் அநேகர் ஆங்கே. 156

470. சேனமடி களங்கண்டேம் திகைத்து நின்றேம்
தெலுங்கரேம் என்றுசில கலிங்கர் தங்கள்
ஆனமணி யினைத்தாளம் பிடித்துக் கும்பிட்டு
அடிப்பாணர் எனப்பிழைத்தார் அநேகர் ஆங்கே. 158

471. இவர்கள்மேல் இனியொருவர் பிழைத்தார் இல்லை
எழுகலிங்கத்து ஓவியர்கள் எழுதி வைத்த
சுவர்கள்மேல் உடலன்றி உடல்க ளெங்கும்
தொடர்ந்துபிடித் தறுத்தார்முன் அடைய ஆங்கே. 159

472. கடற்கலிங்கம் எறிந்து சயத் தம்பம் நாட்டிக்
கடகரியும் குவிதனமும் கவர்ந்து தெய்வச்
சுடர்ப்படைவாள் அபயனடி அருளி னோடுஞ்
சூடினன் வண்டையர்கோன் தொண்டைமானே. 160

12. களம் பாடியது

473. தேவாசுரம் ராமாயணம் மகாபாரதம் உளவென்று
ஓவாஉரை ஓயும்படி உளதப்பொரு களமே. 1

474. காலக்கள மதுகண்டருள் இறைவீகுடி தெனவே
ஆலக்கள முடையான்மகிழ் அமுதக்களம் அணுகி. 2

475. என்னேஒரு செருவெங்களம் எனவேயதி சயமுற்று
அந்நேரிழை அலகைக்கண மவைகண்டிட மொழியும். 3

476. உடலின்மேல் பலகாயஞ் சொரிந்து பின்கால்
உடன்பதைப்ப உதிரத்தே ஒழுகும் யானை
கடலின்மேல் கலந்தொடரப் பின்னே செல்லுங்
கலம்போன்று தோன்றுவன காண்மின் காண்மின். 4

477. நெடுங்குதிரை மிசைக் கலனை சரியப் பாய்ந்து
நிணச்சேற்றிற் கால்குளிப்ப நிரையே நின்று

Koviloor Digital Library

படுங்குருதிக் கடும்புனலி அடைக்கப் பாய்ந்த
பலகுதிரைத் தறிபோன்ற பரிசு காண்மின். 5

478. விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின். 6

479. சாமளவும் பிறர்க்குதவா தவரை நச்சிச்
சாருநர்போல் வீரருடல் தரிக்கும் ஆவி
போமளவும் அவரருகே இருந்து விட்டுப்
போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி காண்மின். 7

480. மாமழைமேல் பொழிகின்ற தானவாரி
மறுத்துவிழுங் கடகளிற்றை வெறுத்து வானோர்
பூமழைபோல் பாய்ந்தெழுந்து நிரந்த வண்டு
பொருட்பெண்டிர் போன்றமையும் காண்மின்
காண்மின். 8

481. சாய்ந்துவிழும் கடகளிற்றி னுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியும் கொடிகள் தங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகுங்
கற்புடைமா தரைஒத்தல் காண்மின் காண்மின். 9

482. தங்கணவ ருடன்தாமும் போக வென்றே
சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்
எங்கணவர் கிடந்தவிடம் எங்கே யென்றென்று
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின் 10

483. வாய்மடித்துக் கிடந்ததலை மகளை நோக்கி
மனியதரத்து ஏதேனும் வடுவுண் டாயோ
நீமடித்துக் கிடந்தெனப் புலவி கூர்ந்து
நின்முவி சோர்வாளைக் காண்மின் காண்மின். 11

484. தரைமகள்தன் கொழுநன்றன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலாற் முங்கி விண்ணுட்
அரமகளிர் அவ்வுரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின் காண்மின். 12

485. பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே.
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின். 13

486. ஆடற்று ரங்கம்பி டித்துஆ யாளோட
டிடத்துப் புடைத்தவ்வி ரும்புண்ணினீர்

Koviloor Digital Library

ஓடித்தெ றிக்கக்க ருங்கொண்டல் செங்கொண்டல்
ஒக்கின்ற இவ்வாறு காண்மின்களோ. 14

487. நெருங்குஆக வச்செங்க ளத்தேத
யங்குந்தி ணப்போர்வை மூடிக்கொளக்
கருங்காகம் வெண்காக மாய்நின்ற
வாமுன்பு காணுத காண்மின்களோ. 15

488. மிடையுற்ற தோர்மொட்டு மொட்டொக்க
வெஞ்சோரி நீரொக்க வீழ்தொங்கல்பா
சடையொக்க அடுசெங்க ளம்பங்க
யப்பொய்கை யாமாறு காண்மின்களோ. 16

489. வெயில்தாரை வேல்சூழ வும்தைக்க
மண்மேல் விழாவீரர் வேழம்பர்தங்
கயிற்ரு லிழுப்புண்டு சாயாது
நிற்கும் கழாய்ஒத்தல் காண்மின்களோ. 17

490. இருப்புக்க வந்தத்தின் மீதேற
லும்சூரர் எஃகம்பு தைக்க இறைகப்
பரப்பிச்சு ழன்றிங்கொர் பாரூட
ஈதோர் பருந்தாடல் காண்மின்களோ. 18

491. வருஞ்சேஞ தஞ்சேஞ மேல்வந்து
ருமேவில் வாள்வீரர் வாணுளுகக்
கருஞ்சேவ கஞ்செய்து செஞ்சோற
றச்செய்த கைம்மாறு காண்மின்களோ. 19

492. யாஞைப்ப டைச்சூரர் நேரான
போழ்தற் றெழுந்தாடு கின்ரூர்தலை
மானச்ச யப்பாவை விட்டாடும்
அம்மாஞை வட்டொத்தல் காண்மின்களோ. 20

493. எதிர்கொளுஞ் சுரர்விமா னங்களிற் சுரர்களாய்
ஏறுமா னவர்கள்தாம் எண்ணுதற் கருமையின்
கதிர்விசும் பதனிலே இதனிலும் பெரியதோர்
காஞையம் விஞையுமா காண்மிஞை காண்மிஞை. 21

494. அவர்இபஞ் சொரிமதங் கழிஎனப் புகமடுத்
தவர்பரித் திரையலைத் தமர்செய்கா லிங்கர்தம்
கவரிவெண் நுரைநிரைத் தவருடற் குருதியின்
கடல்பரந் தோடுமா காண்மிஞை காண்மிஞை. 22

495. புவிபுரந் தருள்செயும் சயதரன் ஒருமுறைப்
புணரிமெல் அஞைபடப் பொருஇல்வில் குனிதலின்
கவிகுலம் கடலிடைச் சொரிபெருங் கிரியெனக்
கரிகளின் பிணம்இதிற் காண்மிஞை காண்மிஞை. 23

Koviloor Digital Library

496. உற்றவாய் அம்புதம் பரிசையும் கருவியும்
உருவிமார் பகலமும் உருவிவீழ் செருநர்வில்
கற்றவா ஒருவன்வில் கற்றவா என்றுதம்
கைம்மறித் தவரையும் காண்மினே காண்மினே. 24

497. விண்ணின்மொய்த் தெழுவிமா னங்களிற் சுரர்களாய்
மீதுபோ முயிர்களே யன்றியே இன்றுதம்
கண்ணிமைப் பொழியவே முகமலர்ந்த் துடல்களும்
கடவுளோர் போலுமா காண்மினே காண்மினே. 25

498. பிறைப்பெ ரும்பணை வேழம் முன்னெடு
பின்து னித்து தரைப்படும்
குறைத்த லைத்துணி கொல்லன் எஃகெறி
கூடம் ஒத்தமை காண்மினே. 26

499. வாயி வில்புகு வேல்கள் பற்று
வலக்கை யோடுநி லத்திடைச்
சாயு மற்றவர் காளம் ஊதிகள்
தம்மை ஒத்தமை காண்மினே. 27

500. படலுன்று நெடுங்குந்தம் மார்பி னின்று
பறித்ததனை நிலத்தூன்றித் தேர்மேல் நிற்பார்
படலுன்றி விடுந்தொழிலோர் என்ன முன்னம்
பசுங்குருதி நீர்தோன்றும் பரிசு காண்மின். 28

501. வாயகலம் பரத்தமொடு நிணங்கொண் டோட
மற்றதனை வள்ளுகிரின் பருந்து கோணல்
வாய்அகலம் பரத்திவிடைக் கௌவி வல்வாய்
வகிர்ப்பட்டு நிலம்பட்ட வண்ணங் காண்மின். 29

502 சாதுரங்கத் தலிவனைப்போர்க் களத்தில் வந்த
தழைவயிற்றுப் பூதந்தான் அருந்தி மிக்க
சாதுரங்கம் தலைசுமந்து கமஞ்சூல் கொண்டு
தவிப்படுங்கார் எனவருமத் தன்மை காண்மின் 30

503. முதுகுவடிப் படியிருக்கும் என்ன நிற்கும்
முனைக்களிற்றேர் செருக்களந்து முந்துதங்கள்
முதுகுவடுப் படும்என்ற வடுவை அஞ்சி
முன்னம்வடுப் பட்டாரை இன்னம் காண்மின். 31

13. கூழ் ஆடுதல்

504. களமடையக் காட்டுதற்கு முடிவு தன்று
கவிழுமதக் கரிசொரியக் குமிழி விட்டுக்
குளமடைபட் டதுபோலும் குருதி யாடிக்
கூழடுமின் என்றருளக் குப்பிட் டாங்கே. 1

Koviloor Digital Library

505. குறுமோடு நெடு நிணமா லாய்குடை கலதி கூர்எயி றீநீலி
மறிமா டுகுதிர் வயிறீ கூழட வாரீர் கூழட வாரீரே. 2

506. பறிந்த மருப்பின் வெண்கோலால்
பல்லே விளக்கிக் கொள்ளீரே
பறிந்த களிற்றின் பழுஎலும்பை
வாங்கி நாக்கை வழியீரே. 3

507. வாயம் புகளாம் உகிர்கொள்ளி வாங்கி உகிரை வாங்கீரே
பாயுங் களிற்றின் மதத்தயிலம் பாயப் பாய வாரீரே. 4

508. எண்ணெய்போக வேண்மூளை என்னுங் களியான்
மயிர்குழப்பிப்
பண்ணையாகக் குருதிமடுப் பாய்ந்து நீந்தி யாடீரே. 5

509. குருதிக் குட்ட மித்தனையுங் கோலும் வேலும் குந்தமுமே
கருவிக் கட்ட மாட்டாதிர் கரைக்கே இருந்து குளியீரே. 6

510. ஆழ்ந்த குருதி மடுநீந்தி அங்கே இளையா திங்கேறி
வீழ்ந்த கலிங்கர் நிணக்கலிங்கம் விரித்து விரித்துப்
புனையீரே. 7

511. மதங்கொள் கரியின் கோளகையை மணிச்சூ டகமாச்
செறியீரே
பதங்கொள் புரவிப் படிதரளப் பொற்பா டகமாப்
புனையீரே. 8

512. ஈண்டும் செருவிற் படுவீரர்
எறியும் பாரா வளையடுக்கி
வேண்டு மளவும் வாய்நெகிழ்த்து
விடுகம் பிகளாப் புனையீரே. 9

513. பணைத்த பணைவெங் கரிக்கரத்தால்
பரிய பருநாண் கட்டீரே
இணைத்த முரசம் வாள்காப்பிட்
டிரட்டை வாளி ஏற்றீரே. 10

514. பட்ட புரவிக் கவிகுரத்தால்
பாகு வலயஞ் சாத்தீரே
இட்ட சுரிசங் கெடுத்துகோத்து
ஏகா வலியுஞ் சாத்தீரே 11

515. பொருசின வீரர்தம் கண்மணியும்
போதக மத்தக முத்தும்வாங்கி
வரிசைய றிந்து நரம்பிற்கோத்து
வன்னச ரங்கள் அணியீரே. 12

516 கொள்ளும் எனைப்பல கோலமென்மேல்
கொண்டிட வேளையும் மீதூர

Koviloor Digital Library

உள்ளும் புறம்பும் வெதும்புங்காண்
உண்பத னுக்கொருப் படுவீரே. 13

517. மாகாய மதமலியின் பிணமலிமேல்
வன்கழுகின் சிறகால் செய்த
ஆகாய மேற்கட்டி யதன்கீழே
அடுக்களைகொண்டு அடுமி னம்மா. 14

518. பொழிமதத்தால் நிலமெழுகிப் பொடிந்துதிர்ந்த
பொடித்தரளப் பிண்டி தீட்டி
அழிமதத்த மத்தகத்தை அடுப்பாகக்
கடுப்பாக் கொண்டு அடுமி னம்மா. 15

519. கொற்றவாள் மறவர் ஒச்சக் குடரோடு தலையுங் காலும்
அற்றுவில் ஆனைப் பானை அடுப்பிலில் ஏற்று மம்மா. 16

520. வெண்டயிரும் செந்தயிரும் விராய்க்கிடந்த
கிழான்போல வீரர் மூளைத்
தண்டயிரும் மிடைவித்த புளிதமுமாத்
தாழிதொறும் தம்மி னம்மா. 17

521. கொலையினுட் படுகரிக் குழிசியுட் கூழினுக்
குலையெனக் குதிரையின் உதிரமே சொரிமினே, 17

522. துள்ளிவெங் களனில்வீழ் துரகவெண் பல்லெனும்
உள்ளியுங் கிள்ளியிட் டுகிரினுப்பு இடுமினே. 19

523. தனிவிசும் படையினும் படைஞர்கண் தவிர்கிலா
முனிவுளனுங் கனலிநீர் மூளவைத் திடுமினே. 20

524. குந்தமும் பகழியும் கோல்களும் வேலுமாம்
இந்தனம் பலவெடுத்து இடைமடுத் தெரிமினே. 21

525. கல்லிக் கறித்துப் பல்முறிந்து
கவிழ்ந்து வீழ்ந்த கலிங்கர்தம்
பல்லித் தகர்த்துப் பழஅரிசி
ஆகப் பண்ணிக் கொள்ளீரே. 22

526. சுவைக்கும் முடிவில் கூழினுக்குச்
சொரியும் அரிசி வரிஎயிறு
அவைக்கும் உரல்கள் எனக்குரல்கள்
அவிந்த முரசம் கொள்ளீரே. 23

527. இந்த உரற்கண் இவ்வரிசி
எல்லாம் பெய்து கொல்யானைத்
தந்த உலக்கை தனையோச்சிச்
சலுக்கு முலுக்கெனக் குற்றீரே. 24

Koviloor Digital Library

528. தணந்த மெலிவு தான்தீரத்
தடித்த உடல்வெம் பசிதீரப்
பிணந்தரு நாச்சியைப் பாடீரே
பெருந்திரு வாட்டியைப் பாடீரே. 25

529. கவன நெடும்பரி வீரதரன்
காவிரி நாடுடை யானிருதோள்
அவனி சுமந்தமை பாடீரே
அரவு தவிர்ந்தமை பாடீரே. 26

530. மன்னர் புரந்தரன் வாளபயன்
வாரணம் இங்கு மதம்படவே
தென்னர் உடைந்தமை பாடீரே
சேரர் உடைந்தமை பாடீரே. 27

531. வணங்கிய சேரர் மணிமுடியும்
வழுதியர் தங்கள் மணிமுடியும்
பிணங்கிய சேவடி பாடீரே
பெருமான் திருவடி பாடீரே. 28

532. ஒளிறு நெடும்படை வாளபயற்
குத்தர பூமியர் இட்டதிறைக்
களிறு வரும்படி பாடீரே
கடமத நாறுவ பாடீரே. 29

533. பெவவம் அடங்க வலைந்த குடைப்
பண்டித சோழன் மலர்க்கழலில்
தெவ்வர் பணிந்தமை பாடீரே
சிலையா டியவலி பாடீரே 30

534. எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரே
குலோத்துங்க சோழனைப் பாடீரே. 31

535. வண்டை வளம்பதி பாடீரே
மல்லையும் கச்சியும் பாடீரே
பண்டை மயிலையும் பாடீரே
பல்லவர் தோன்றலைப் பாடீரே. 32

536. காட்டிய வேழ அணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலன்மேற்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே. 33

Koviloor Digital Library

537. இடைபார்த்துத் திறைகாட்டி இறைவிதிருப் புருவதத்தின்
கடைபார்த்துத் தலைவணங்கும் கதிர்முடிநூ றுயிரமே. 34

538. முடிசூடும் முடியொன்றே முதலபயன் எங்கோமான்
அடிசூடும் முடியெண்ணில் ஆயிரநூ றுயிரமே 35

539. முடியினுல் வழிபட்டு மொழிந்ததிறை இடாவேந்தர்
அடியினுல் மிதிபட்ட அருவரைநூ றுயிரமே. 36

540. தார்வேய்ந்த புயத்தபயன் தன்னமைச்சர் கடைத்தலையில்
பார்வேந்தர் படுகின்ற பரிபவம்நூ றுயிரமே. 37

541. தாங்காரப் புயத்தபயன் தண்ணளியால் புயல்வளர்க்கும்
ஓங்கார மந்திரமும் ஒப்பிலாநூ றுயிரமே. 38

542. போர்தாங்கும் கலிற்றபயன் புயமிரண்டும் எந்நாளும்
பார்தாங்கப் பரந்திர்ந்த பணிப்பணம்நூ றுயிரமே. 39

543. நாற்கடலைக் கவித்தகுடை நரதுங்கன் அமுதமெழப்
பாற்கடலைக் கடைந்தருளும் பணைப்புயம்நூ றுயிரமே. 40

544. தாளிரண்டால் நிலவேந்தர் தலைதாங்கும் சயதுங்கன்
தோளிரண்டால் வாணனைமுன் துணித்ததோள் ஆயிரமே 41

545. சூழிமுகக் களிற்றபயன் தூதுநடந் தருளியநாள்
ஆழிமுதற் படையெடுத்த அணிநெடுந்தே ளாயிரமே. 42

546. பல்லரிசி யாவுமிகப் பழவரிசி தாமாகச்
சல்லவட்டம் எனுஞ்சுளகால் தவிடுபடப் புடையீரே. 43

547. பாணிகளால் நிலந்திருத்திப் படைக்கலிங்கர் அணிபகழித்
தூணிகளே நாழிகளாத் தூணிமா அளவீரே. 44

548. விரற்புட்டி லவைசிறிய விற்கூடை பெரியனகொண்டு
உரற்பட்ட அரிசிமுகந்து உலைகள்தொறும் சொரியீரே. 45

549. களப்பரணிக் கூழ்பொங்கி வழியாமல் கைதுடுப்பா
அளப்பரிய குளப்புக்கால் அகப்பைகளாக் கொள்ளீரே. 46

550. வைப்புக் காணு நமக்கின்று
வாரீர் கூழை எல்லீரும்
உப்புப் பார்க்க ஒருதுள்ளி
உள்ளங் கையிற் கொள்ளீரே. 47

551. அழலைக் கையிற் கொள்ளாமே
அடுப்பை அவித்துக் கைத்துடுப்பாற்
சுழலச் சுழலப் புடைஎங்கும்
துழாவித் துழாவிக் கொள்ளீரே. 48

Koviloor Digital Library

552. பற்றிப் பாரீர் இனிக்கூழின்
பதமும் சுவையும் பண்டுண்ட
மற்றைக் கூலின் மிகநன்று
வாரீர் இழிச்ச வாரீரே. 49

553. எடுத்துக் கைகள் வேகாமே
இவுளித் துணியிட்டு இருமருங்கும்
அடுத்துப் பிடித்து மெத்தெனவே
அடுப்பி னின்றும் இழிச்சீரே. 50

554. ஒருவாய் கொண்டே இதுதொலைய
உண்ண வொண்ணுது என்றென்று
வெருவா நின்றீர் ஆயிரம்வாய்
வேண்டு மோஇக் கூழுணவே. 51

555. வெந்த இரும்பிற் புகும்புனல்போல்
வெந்தீப் பசியால் வெந்துளரியும்
இந்தவிடம்பை நாத்தோய்க்கில்
இக்கூ ழெல்லாம் சுவருதோ. 52

556. பண்டு மிகுமோ பரணிக்கூழ்
பாரகத்தில் அறியேமோ
உண்டு மிகுமோ நீர்சொன்ன
உபாயம் இதுவும் செய்குவமே. 53

557. வெம்பும் குருதிப் பேராற்றில்
வேண்டும் தண்ணீர் வேழத்தின்
கும்பங் களிலே முகந்தெடுத்துக்
குளிர வைத்துக் கொள்ளீரே. 54

558. சோரும் களிற்றின் வாலதியால்
சுழல அலகிட்டு அலைகுருதி
நீருந் தெளித்துக் கலம்வைக்க
நிலமே சமைத்துக் கொள்ளீரே. 55

559. போர்மண் டலிகர் கேடகத்தின்
புளகச் சின்னம் பரப்பீரே
பார்மண் டலிகர் தலைமண்டை
பலமண் டைகளாக் கொள்ளீரே. 56

560. அழிந்த கலிங்கர் பொற்பரிசை
அலைபொற் கலமாக் கொள்ளீரே
விழுந்த தவளக் குடைமின்னும்
வெள்ளிக் கலமாக் கொள்ளீரே. 57

Koviloor Digital Library

561. நிலத்தைச் சமைத்துக் கொள்ளீரே
நெடுங்கைக் களிற்றின் இருசெவியாம்
கலத்திற் கொள்ளக் குறையாத
கலங்கள் பெருக்கிக் கொள்ளீரே. 58

562. கதம்பெற் றூர்க்கும் செறுநர்விழிக்
கனலும் நினைமும் அணங்கின்பால்
பதம்பெற் றூர்க்குப் பகல் விளக்கும்
பாவா டையுமாக் கொள்ளீரே. 59

563. பரிசு படவே கலம்பரப்பிப்
பந்தி பந்தி படஉங்கள்
வரிசை யுடனே இருந்துண்ண
வாரீர் கூழை வாரீரே. 60

564. கங்கா புரியின் மதிற்புறத்துக்
கருதார் சிரம்போய் மிகவீழ
இங்கே தலையின் வேல்பாய்ந்த
இவைமூ ழைகளாக் கொள்ளீரே. 61

565. கிடைக்கப் பொருது மணலூரில்
கிழ்நாள் அட்ட பரணிக்கூழ்
படைத்துப் பயின்ற மடைப்பேய்கள்
பந்தி தோறும் வாரீரே. 62

566. அவதி இல்லாச் சுவைக்கூழ் கண்டு
அங்காந்து அங்காந்து அடிக்கடியும்
பவதி பிட்சாந் தேகியெனும்
பனவப் பேய்க்கு வாரீரே. 63

567. உயிரைக் கொல்லாச் சமண்பேய்கள்
ஒருபோழ் துண்ணும் அவையுண்ண
மயிரைப் பார்த்து நிணத்துகிலால்
வடித்துக் கூழை வாரீரே. 64

568. முழுத்தோல் போர்க்கும் புத்தப்பேய்
மூனைக் கூழை நாக்குழறக்
கழுத்தே கிட்ட மனந்திரியாக்
காஞ்சி யாக வாரீரே. 65

569. கொய்த இறைச்சி உறுப்பனைத்தும்
கொள்ளுங் கூழை வெள்ளாட்டின்
பைதல் இறைச்சி நின்றுலர்ந்த
பார்வைப் பேய்க்கு வாரீரே. 66

Koviloor Digital Library

570. ஊணு தரிக்கும் கள்ளப்பேய்
ஒளித்துக் கொண்ட கலந்தடவிக்
காணுது அரற்றுங் குருட்டுப்பேய்
கைக்கே கூழை வாரீரே. 67

571. பையாப் போடு பசிகாட்டிப்
பதலே நிறைந்த கூழ்காட்டிக்
கையால் உரைக்கும் ஊமைப்பேய்
கைக்கே கூழை வாரீரே. 68

572. அடைத்த செவிகள் திறந்தனவால்
அடியேற்கு என்று கடைவாயைத்
துடைத்து நக்கிச் சுவைகாணும்
சூற்பேய்க்கு இன்னும் சொரியீரே. 69

573. பொல்லா ஓட்டைக் கலத்துக்கூழ்
புறத்தே ஒழுக மறித்துப்பார்த்து
எல்லாங் கவிழ்த்துத் திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே. 70

574. துதிக்கைத் துணியைப் பல்லின்மேற்
செவ்வே நிறுத்தித் துதிக்கையின்
நுதிக்கே கூழை வார் என்னும்
நோக்கப் பேய்க்கு வாரீரே. 71

575. தடியான் மடுத்துக் கூழெல்லாம்
தானே பருகித் தன்கணவன்
குடியான் என்று தான் குடிக்கும்
கூத்திப் பேய்க்கு வாரீரே. 72

576. வருகூழ்ப் பரணிக் களங்கண்டு
வந்த பேயை முன்னூட்டி
ஒருகூழ்ப் பரணி நாமிருக்கும்
ஊர்க்கட் பேய்க்கு வாரீரே 73

577 இரவு கனவு கண்ட பேய்க்கு
இற்றைக் கன்றி நாளைக்கும்
புரவி உரித்தோற் பட்டைக்கே
கூழைப் பொதிந்து வையீரே, 74

578. இணக்கம் இல்லா நமையெல்லாம்
எண்ணிக் கண்டேம் என்றுரைக்கும்
கணக்கப் பேய்க்கும் அகங்களிக்கக்
கையால் எடுத்து வாரீரே. 75

Koviloor Digital Library

579. மென்குடர் வெள்ளொகு தட்டீரே
மெல்விரல் இஞ்சிய துக்கீரே
முன்கையெ லும்பீனை மெல்லீரே
மூளையை வாரிவி முங்கீரே. 76

580. அள்ளிய ருகிருந் துண்ணீரே
அரிந்திடு தாமரை மொட்டென்னும்
உள்ளிக றித்துக்கொண் டுண்ணீரே
ஊதிவ ரன்றிக்கொண் டுண்ணீரே. 77

581. தமக்கொரு வாயொடு வாய்மூன்றும்
தாமிவி தாப்படைத் துக்கொண்டு
நமக்கொரு வாய்தந்த நான்முகனர்
நாணும் படுகளித் துண்ணீரே 78

582 ஓடி உடல்லியர்த் துண்ணீரே.
உந்தி பறந்திளைத் துண்ணீரே
ஆடி அசைந்தசைந் துண்ணீரே
அற்ற தறவறிந் துண்ணீரே 79

583. கொதித்த கரியின் கும்பத்துக்
குளிர்ந்த தண்ணீர் தனைமொண்டு
பொதுத்த தொளையால் புகமடுத்துப்
புசித்த வாயைப் பூசீரே. 80

584. பண்ணும் இவுளிச் செவிச்சுருளும்
பாட்டிற் பிளவும் படுகலிங்கர்
கண்ணின் மணியிற் சுண்ணும்பும்
கலந்து மடித்துத் தின்னீரே. 51

585. பெருக்கத் தின்றீர் தாம்பூலம்
பிழைக்கச் செய்தீர் பிழைப்பீரே
செருக்கும் பேய்காள் பூதத்தின்
சிரத்தின் மயிரை மோவீரே. 82

686. என்றுக ளித்துக் குமண்டையிட்டே
ஏப்ப மிட்டுப் பருத்துநின்ற
குன்றுகு ளிப்பன போற்களத்துக்
கும்பிட் டேநட மிட்டனவே. 83

587. வாசிக டக்கக் கலிங்கரோட
மானதன் ஏவிய சேனைவீரர்
தூசியெ மூந்தமை பாடிநின்று
தூசியும் இட்டுநின் முடினவே. 84

Koviloor Digital Library

588. பொருகை தவிர்ந்து கலிங்கரோடப்
போக புரந்தரன் விட்டதண்டின்
இருகையும் வென்றதோர் வென்றிபாடி
இருகையும் வீசிநின் றுடினவே. 85

589. வழுதியர் வரைமுழை நுழைவடி விதுஎன
மதகரி வயிறுகள் புகநுழை வனசில
எழுதிய சிலையவர் செறிகடல் விழுமவை
இதுஎன வழிகுரு தியின்விழு வனசில. 86

590. உருவிய சுரிகையொ டுயர்கணை விடுபடை
உருள்வடி விதுவென உருள்வன சிலசில
வெருவிய அடுநர்தம் உடைவடி விதுவென
விரிதலை யதனெடு மறிவன சிலசில. 87

591. முரசு குடை கவரி தொங்கல் நெடுங்கொடி
முரலும் வரிவளை சுமந்து நிரந்தரம்
அரசர் இடுதிறை சுமந்து அபயன் கழல்
அடைய அடிகள் அருள்க! என்பனவும் சில. 88

592. இனைய இனைய நாடகங்கள் முடிந்தபின்
'இரவி திரு மரபின் வந்த புரந்தரன்
அனைய அபயன் அகளங்கன் அரிந்தமன்
அளவு இல் புகழ் புகழ்தும்' என்று தொடங்கியே

593. உபய மெனும்பிறப் பாளர்ஏத்த
உரைத்த கலிங்கர் தமைவென்ற
அபயன் அருளினைப் பாடினவே
அணிசெறி தோளினை வாழ்த்தினவே. 90

594. திசையிற் பலநர பாலர்முன்னே
தெரிந்துரைக் குறிஞ்சு பாலன்வைத
வகையில் வயப்புகழ் வாழ்த்தினவே
மனுகுல தீபனை வாழ்த்தினவே. 91

595. பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருநைக் கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழ்த்தினவே. 92

596. ஆழிகள் ஏழுமொர் ஆழியின்கீழ்
அடிப்பட வந்த அகலிடத்தை
ஊழிதொ றூழியுங் காத்தளிக்கும்
உலகுய்ய வந்தானை வாழ்த்தினவே. 93

Koviloor Digital Library

597. பூப்பது மத்தன் படைத்தமைத்த
புவியை இரண்டா வதும்படைத்துக்
காப்பதும் என்கடன் என்றுகாத்த
கரிகாலச் சோழனே வாழ்த்தினவே. 94

598. யாவ ரும்களி சிறக்கவே தருமம்
எங்கும் என்றும்உள தாகவே
தேவர் இன்னருள் தழைக்கவே முனிவர்
செய்த வப்பயன் விளைக்கவே. 95

599. வேத நன்நெறி பரக்கவே அபயன்
வென்ற வெங்கலி கரக்கவே
பூத லம்புகழ் பரக்கவே புவி
நிலைக்க வேபுயல் சுரக்கவே. 96

Koviloor Digital Library

குமரகுருபரர்

மதுரைக் கலம்பகம் என்ற ஒப்பற்ற நூலினைப் பாடியவர் குமரகுருபரர் ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் என்னும் ஊரினர். இவர், சண்முகசிகாமணி கவிராயர்க்கும் சிவகாமி அம்மையார்க்கும் மகனுகப் பிறந்தவர்; சைவ வேளாளர் குலத்தினர். இவர் பிறந்தது முதல் ஐந்து வயது வரையிலும் பேசும் ஆற்றலின்றி இருந்து, பின்னர் திருச்செந்தூர் திருமுருகன் அருளால் பேச்சாற்றலும், கவிபாடும் ஆற்றலும் பெற்ருர். இவரது காலம் கி. பி. 17ஆம் நூற்ருண்டு என்பர்.

இவர், கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், மீனுட்சி யம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லிமாலை, நீதிநெறிவிளக்கம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிவகாமியம்மையிரட்டை மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, மீனுட்சியம்மை குறம், மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

கலம்பகம்

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் கலம்பகமும் ஒன்று. கலம்-பகம் என்ற பெயர்க் காரணம் பலவாருகக் கூறப்படுகின்றன.

கலம்+பகம்=கலம்பகம். 'கலம்' என்பது 12 என்ற எண்ணைக் குறிக்கும். 'பகம்' என்பது அதனின்றும் பகுத்த பாதியாகிய 6 என்ற எண்ணைக் குறிக்கும். கலம்பகம் என்பது 12+6=18 என்ற உறுப் புக்களையுடையது என்று பொருளைக் குறிக்கும் என்பர் சிலர். இவ் வாறு பகுத்துப் பொருள் கூறுவது பொருந்தாது.

இனி, வேருெரு வகையில் பொருள் கூறுவாரும் உளர். கலப்பு+அகம்: கலம்பகம் எனப்பிரித்து, பலவகையான பொருளும், பலவகையான பாவும், இனமும் கலப்பதற்கு இடமாகிய நூல் என்று பொருள் கூறுவர்.

பல்வகை மலர்களும் கலந்து பின்னிய மாலை போன்று பல்வேறு அகப்புறத்துறைகளும், பல்வகைப் பொருள்களும், பாவகைகளும் கலந்து இயற்றப்பட்ட நூல் ஆகையால், இது கலம் பகம் என வழங்கலாயிற்று.

மதுரைக் கலம்பகம்

மதுரை சொக்கநாதக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது மதுரைக் கலம்பகம். 103 பாடல்களைக் கொண்டது இந்நூலில் சொற்சுவை, பொருட்சுவைகளும், வீரம் முதலிய எண் சுவைகளும் சிறந்து விளங்குகின்றன.

கலம்பக நூல்களுள் மதுரைக் கலம்பகமே சிறப்புடையது.

Koviloor Digital Library

காப்புச் செய்யுள்

புந்தித் தடத்துப் புலக்களி ரோடப் பிளிறுதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணளிதூய்
வந்திப் பதுந்தவி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.

நூல் — தரவு

மணிகொண்ட திரையாழி சுரிநிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைக்கிழவன் றிருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற் கற்பின் றலைநிற்ப
அம்பொன்முடி முடிசூடு மபிடேக வல்லியொடுஞ்
செம்பொன்மதிற் றமிழ்க் கூடற் றிருநகரம் பொலிந்தோய்கேள். 1

தாழிசை

விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ 1
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே.

நேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து 2
வேம்பழுத்து நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே.

வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த 3
மீனேறே வானேறும் விடுத்தடிக ளெடுப்பதே.

மனவட்ட மிடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே 4
கனவட்டந் தினவட்ட மிடக்கண்டு களிப்பதே.

விண்ணுறு தலைமடுப்ப நினையா நீவிரைப்பொருநைத் 5
தண்ணுறு குடைந்துவைகைத் தண்டுறையும் படிந்தனையே

பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம் 6
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே.

அராகம்

அவனவ ளதுவெனு மவைகளி லொருபொரு 1
ளிவனென வுணர்வுகொ டெழுதரு முருவினை.

இலதென வுளதென விலதுள தெனுமவை 2
யலதென வளவிட வரியதொ ரளவினை.

குறியில வலதொரு குணமில னெனநினை 3
யறிபவ ரறிவிலு மறிவரு நெறியினை.

இருமையு முதவுவ தெவனவ னெனநின 4
தருமைமை யுணர்வுறி னமிழ்நினு மினிமையை.

Koviloor Digital Library

தாழிசை

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை 1
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடிமண் சுமந்ததே.

அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னியவ 2
டருப்பிடுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே.

முலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே 3
மலைகொண்ட புயத்தெள் ளீ வளைகொண்டு சுமந்ததே.

ஊன்வலியி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர் 4
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே.

அம்போதரங்கம் முச்சீர்

1. போகமாய் விளைந்தோய் நீ
2. புவனமாய்ப் பொலிந்தோய் நீ
3. ஏகமா யிருந்தோய் நீ
4. யெண்ணிறந்து நின்றோய் நீ

இருசீர்

1.	வானு நீ	5.	ஊனு நீ
2.	நிலனு நீ	6.	யுயிரு நீ
3.	மதியு நீ	7.	யுளது நீ
4.	கதிரு நீ	8.	யிலது நீ

தனிச்சொல்

எனவாங்கு,

சுரிதகம்

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக் 1
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
அண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப் 5
பொன்புனைந் தியன்ற பைம்பூண் டாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பகம்பொனசும் பிருந்தபைம் பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்கீ
ழரசுவீற் றிருந்த வாதியங் கடவுணின் 10
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுது
மைம்புல வழக்கி னருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிசு

Koviloor Digital Library

பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉ 15
பிறைமையுண் டாயினு மாக குறுகிநின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக்கொண்
டம்மா கியைத்தவா வென்று
செம்மாப் புறூஉந் திறம்பெறற் பொருட்டே.

பொருணான் கொருங்கீன்ற பொன்மாடக் கூட
லிருணான் றிருண்டகண்டத் தெம்மான்—சரணன்றே
மண்டுழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மவுலித்
தண்டுழாய் பூத்த தடம். 2

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் றண்மலர்த்தா
ணடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி நங்களுக்கோர்
திடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறவிண்ணோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே. 3

மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை
வெள்ளைப் பள்ளை
ஆனேறும் வலனுயர்த்த வழகியசொக் கர்க்கிதுவு
மழகி தேயோ
கானேறுங் குழல்சரியக் கர்ர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
ஊனேறு முடைத்தலையிற் கடைப்பலிகொண் டூரூர்புக்
குழலு மாறே. 4

இரங்கல்

மாற்றொன் றிலையென் மருந்துக்கந்
தோசொக்கர் மாலைகொடார்
கூற்றொன் றலவொரு கோடிகெட்
டேன்கொழுந் தொன்றுதென்றற்
காற்றொன் றிளம்பிறைக் கீற்றொன்று
கார்க்கட லொன்றுகண்ணீ
ரூற்றொன் றிவளுக் குயிரொன்
றிலையுண் டுடம்பொன்றுமே 5

ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங் குடம்பொன்றிலார்
என்றே யறிந்தும்பி னின்றே யிரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன்றி வெண்பொன் பசும்பொன் குயின்றேசெயு
மன்றே யிருக்கப் புறங்கா டரங்காட வல்லாரையே. 6

Koviloor Digital Library

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு விற்பீர்தோன்
மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல் லாங்கொள்ளை
கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன் ருனீரிப்
பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ கொள்
வதற்கோ புறப்பட் டீரே. 7

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே—கட்ட
விருப்பரவத் தானேநின் மென்மலர்த்தா ளன்றே
தரும்பரவத் தானே தீண. 8

இரங்கல்

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யா
மினியி ருப்பவொண் ணுதும டந்தைமீ
ரிடம் ருங்குஞ் சடைம குங்கும்மிரு
கனியி ருக்குங் கடம்பவ னேசனூர்
கண்பு குந்தென் சருத்து ளிருக்கவும்
பலியி ருக்கும் பிறைக் கூற்ற முற்றியென்
பாவி யாவியை வாய்மடுத் துண்பதே. 9

உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதைமீர்—தண்ணிதழி
இந்தா நிலமே வெனச்சொலா ரென்செய்வாண்
மந்தா நிலமே வரின். 10

புய வகுப்பு

வரியளி பொதுளிய விதழியொ டமரர்
மடந்தையர் நீல வளம்புக் கிருந்தன்
மதியக டுடைபட நெடுமுக டடைய
நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன
மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டடுதிறன் முறைமுறை துதிசெய்
தணங்குவ ராடு துணங்கைக் கிணங்கின

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற் றிநின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன

Koviloor Digital Library

புலவெயி றயிறரு குருதியொ டுலவு
மடங்களின் விர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில்ப ணெடுதமி ழருமை
யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன

உருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாண ணெதுங்கத் திரிந்தன
உருடய மனமொடு கழுவியொர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன
உறுதியொ டவ்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன
உருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன.

தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
ததுப்பிய வூற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
சவந்தர மாறர் தடம்பொற் புயங்களே. 11

இயல் இடம் கூறல்

புயல்வண்ண மொய்குழல் பொன்வண்ணந்
தன்வண்ணம் போர்த்தடங்கண்
கயல்வண்ண மென்வண்ண மின்வண்ண
மேயிடை சன்னற்செந்நெல்
வயல்வண்ணப் பண்ணை மதுரைப்
பிரான்வெற்றிபில் வஞ்சியன்ரு
வியல்வண்ண மிவ்வண்ண மென்னெஞ்ச
மற்றவ் விரும்பொழிலே. 12

அம்மானை

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனூர்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகி
லருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
யுனதுங் காயமிலை யையரவர்க் கம்மானை. 13

Koviloor Digital Library

இரங்கல்

அம்ம கோவெனும் விழுமமு மெழுந்துநின்
றருவிநீர் விழிசோர
விம்மு மேங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென்
மெல்லிய லிவட்கம்மா
வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு
மணந்தவர் மலர்த்தாமந்
தம்மி னேவெனுந் தவப்பயன் பெரிதெனுந்
தந்தை தாளெறிந் தார்க்கே. 14

மதங்கியார்

எறிவே லிரண்டுமென துயிர்சோர வுண்டுலவ விகல்வா
னிரண்டு விசிறு
வெறிசேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி விளையாடு
மின்கொ டியனீர்
சிறுநூன் மருங்குலிறு மிறுமாகொ லென்றுசில சிலநூ
புரஞ்சொன் முறையீ
டறியிரென் னெஞ்சுமல மரவேசு ழன்றிடுநும் மதிவேக
நன்ற றவுமே. 15

புறங்காட்டல்

அறந்தந்த பொன்பொலி கூடற்பி ரான் வெற்பி லம்பொற்படாம்
நிறந்தந்த கும்ப மதயா னையுநெடுந் தேர்ப்பரப்பும்
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றிருநீ
புறந்தந்த வாவணங் கேநன்று காமவெம் போரினுக்கே. 16

போராளை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத்துப்
புழைக்கை நால்வாய்க்
காரராளைப் போர்வைதழீஇ வெள்ளாலைக் கருள்சுரந்த
கடவு ளேயோ
ஓராளை முளைப்போருக் கொருகளைதொட் டெய்திடுநீ
ரொருத்தி கொங்கை
ஈராளை முளைப்போர்க்கும் வல்லிரே லொருகளைதொட்
டெய்தி டீரே. 17

பாங்கி தலைவனுக்குக் கூறல்

எய்யாது நின்றிருவ னெய்வதுவு மிளையாட
னிளைப்பும் புந்தி
வையாதார் வைதலுறின் மதியார்தா மதித்திடுதல்
வழக்கே யன்றே

Koviloor Digital Library

மெய்யாத மெய்கடிந்து விடாத வீடெய்தி
விழார் விழச்
செய்யாள்செய் சரக்கறையாந் திருவால வாயிலுறை
செல்வ னரே. 18

ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவெமை
யாளுடைய பச்சை மயிலோ
டுறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர
மேசரொரு சற்று முணரார்
நீறுபடு துட்டமதன் வேறுருவெ டுத்தலரி
வீள்சிலைகு னித்து வழிதே
னூறுகணை தொட்டுவெளி யேசமர்வி ளைப்பதுமென்
னூழ்வினைப வித்த துவரோ. 19

தழை

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டி யன்முன்
கல்லானைக் கிட்ட சருப்பல்று காணின் களபக் கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணிணைய்
வில்லார் புயத்தண்ண றண்ணிலியாற்றந்தமென்றழையே 20

தழைத்திடுங் கூடலார், குழைத்துடன் கூடலார்
பிழைத்திடுங் கூடலே, யிழைத்திடுங் கூடலே. 21

கூட லர்பதி கோயில்கொண்
டாடல் கொண்டவ ராடலே
ஊட லும்மூடம் பொன்றிலே
கூட லும்மொரு கொப்பரோ. 22

ஊசல்

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கும்மக் கலனுஞ் சிலம்புங் கலந்தார்ப்ப
மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
அம்மென் மருங்கொசிய வாடுகபொன் னூசல்
அழகெறிக்கும் பூண்முலையீ ராடுகபொன் னூசல். 23

களி

அழகுற்றதொர் மதுரேசனே யமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனி யினைநாம்
போற்றிக்குரு மூர்த்தீச்சிணை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதொர் சான்றுண்மை பயின்றூர்தினை முயன்றூற்
பலமுண்டநி னைமுண்டல ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது விடுந்தர வற்று
லெழுதாததொர் நிருமந்திர மிளம்பாலையு ளுண்டே 24

Koviloor Digital Library

உண்பது நஞ்சமா லுறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத நின்னதே பெரும வேள்கணே
எண்பது கோடிமே லெவன்றெ டுப்பதே. 25

மடக்கு

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
எடுத்து நின்றது மாயவ ராகமே
யெயிறி றுத்தது மாயவ ராகமே
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே
யணிவ துஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே
கொள்வ தையர் கடம்பவ னத்தையே. 26

கடங்கரைக்கும் வெற்பிற் கரைகரைக்கும் வைகைத்
தடங்கரைக்க ணின்றவர்நீர் தாமோ—நெடுந்தகைநுங்
கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையி
னூட்டம் புயமே நமன். 27

வண்டு

நம்பாநி னக்கோல முறையோவெ னக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர்
செம்பாதி மெய்யுங் கரும்பாதி யாகத்
திருத்தோளு மார்பும் வடுப்பட்ட துங்கண்
டெம்பாவை யைப்பின்னு மம்பாவை செய்வா
ரெளியாரை நலிகிற்பி னேதா மிவர்க்கே. 28

இரங்கல்

ஆவமே நாணே யடுகணையே யம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுஞ் சமனன்றே
ஓவமே யன்ன ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே. 29

பறவைவிடு தூது

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து
கயல்வர வுறங்கு புள்ளீரே
பருவமு மிழந்தென் மகடிய ருழந்து
படுவிர கமொன்று முள்ளீரே

Koviloor Digital Library

அருமையொ டுமெங்கள் பெருமையை யறிந்து
மருள்புரி யவிங்கு வல்லீரே
மருவிய கடம்ப வனமது புகுந்து
மதுரையரன் முன்பு சொல்வீரே. 30

பாங்கி இரங்கல்

ஈரித்த தென்ற லிளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப் பிணியோ தணியாவாற்
பாருக்கு ணீரே பழியஞ்சி யாரெணின்மற்
றாருக் குரைக்கே மடிகே ளடிகேளோ. 31

பிச்சியார்

அடுத்த தோர்தவ வேடமும் புண்டா
மணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தெடுத்த தாள்பதித் தாடிக் கடைப்பிச்சைக்
கிச்சை பேசுமப் பிச்சனெ னச்செல்வீர்
கடைக்க ணோக்கமும் புன்மூர லும்முயிர்
கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றோ
பிச்சியாரெனும பேருமக் கிட்டதே. 32

மடல்

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட
வொண்மழு வும்மெழுதும்
படங்கொண்டு வந்தனை யானெஞ்ச
மேயினிப் பங்கயப்பூந்
தடங்கொண்ட கூடற் சவுந்தர
மாலர்பொற் றாள்பெயர்த்து
நடங்கொண்ட தோர்வெள்ளி மன்றே
றுதுமின்று நாளையிலே. 33

இரங்கல்

இருநில னகழ்ந்ததொரு களிறுவெளி றும்படியோ
ரிருளியி னணைந்த ணையுமக்
குருளையை மணந்தருளி னிளமுலை சுரந்துதவு
குழகரி துணர்ந்திலர் கொலாங்
கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில
கணைமதன் வழங்க வவைபோ
யுருவிய பசும்புணில்வெண் ணிலவனல் கொளுந்தியதெம்
முயிர்சிறி திருந்த தரிதே. 34

Koviloor Digital Library

கொற்றியார்

அருநாம மரசிவசங் கரநாம மெனக்கொண்
டவற்றிருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
பெற்றியார் தமிழ் மதுரைக் கொற்றியார் கேளீர்
ஒருநாமம் பயந்தவர்முன் றருநாமம் வியந்திங்
குலகரிடு நாமமதொன் றுள்ளநீர் வெள்ளத்
திருநாம மிட்டவன்றே கெட்டவன்றே விமையோர்
தெரித்திடுநா மமுமுனிவோர் தரித்திடுநா மமுமே. 35

மும்மைத் தமிழ்க்கூடன் மூலவிங்கத் தங்கயற்க
ணம்மைக், கமுதா மருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
முள்ளத் திருக்கோயி லுள். 36

உள்ளும் புறம்புங் கசிந்தூற் றெழநெக் குடைந்துகுதி
கொள்ளுஞ்செந் தேறல் குனிக்கின்ற வாபத்திக் கொத்தரும்ப
வள்ளுங் கமலத்தும் வேத சிரத்தும்விண் மீனமுகந்
தள்ளுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கத்துமே. 37

மடக்கு

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
யால யம்பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கல னென்பர வாமையே
யுணர்வு ருமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே. 38

கூடார் புரந்தீ மடுக்கின்ற துஞ்சென்று கும்பிட்டவோ
ரேடார் குழற்கோதை யுயிருண்ப தும்மைய ரிளமூரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீ ரெனக்கன்னி வளநாடெனு
நாடாள வைத்தாளு நகையா தினிப்போடு நகையாடவே. 39

நகையே யமையுமிந்த நகரிக நோக்கு
மிகையே யனங்கன் வினைகொளல்வீ ணன்றே
தகையே மதுரேசன் றண்டமிழ்நா டன்னீர்
பகையே துமக்கு நமக்கும் பகர்வீரே. 40

வீரம் வைத்தவில் வேள்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணை
ஈரம் வைத்த விளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்பவ னேசனே. 41

Koviloor Digital Library

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற்றுங்
கூடம்பா டவிச்சுந் தரரேநுந்
தடந்தோள் குறித்திங் கணைந்தே மெனிற்பின்
றரும்பே றுன்மத்தின் பெருவாழ்வோ.
தொடர்ந்தே யுடற்றிந் திரன்சா பமுற்றுந்
துரந்தா லுமிப்பெண் பழிபோமோ
அடைந்தேம் விடக்கொன் றையந்தா ரெவர்க்கென்
றமைந்தே கிடக்கின் றதுதானே. 42

ஊர்

தான வெங்களி ரூடு மிந்திரன் சாப முந்தொலியா
மேவி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வாவி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூவி மிர்ந்திட வேநி மிர்ந்திடு கூடலம்பதியே. 43

சைக்கினை

அஞ்சேன் மடநெஞ் சபிடேகச் சொக்கரருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போற்—றுஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கு
மறலியற் கூந்தற் காடமர்க் கண்ணே. 44

கண்முத் தருப்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தருப்புமெல் பெண்முத்துக் கேமுத்த முண்டிமையத்
தண்முத் தமைந்த தமனியமேதலைச் சங்கும்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்திர பாண்டியனே. 45

பாணரு மழலைச் சிறியாழ் மதுரப்
பாடற்குத் தோடுவார் காதும்
பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும்
பாலித்தாய் பாட்டளி குழைக்குங்
கோணரு வுளைப்பூங் கொத்தலர் குடுமிக்
குறுங்கணைட் டிலைச்சிலை குனித்த
கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலா மலதென்
கொடியிடைக் காற்றுமா றுளதோ
சேணரும் பசும்பொற் றசும்பசும் பிருக்குஞ்
சிகரியிற் றகரநா றைம்பாற்
சேயரிக் கருங்கட் பசுங்கொடி நுடங்குஞ்
செவ்வியிற் சிறைமயி லகவத்
தூணரு முழவுத் தோண்மடித் தும்பர்
சுவல்பிடித் தணந்துபார்த் துணங்குத்
தோரண மாடக் கூடலிற் சோம
சுந்தரா சந்த்ரசே கரனே. 46

Koviloor Digital Library

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புபம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்குந்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூட
லொண்ணுத றழீய கண்ணுதற் கடவு
ளெண்மர் புறந்தரூஉ மொண்பெருந் திகைக்குத்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரிந்த
விரசதங் குயின்ற திருமா மன்றகம்
பொன்மலி கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் முயினுங்
கருந்தாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டு
மிருவே றமைந்தநின் னெருபெருங் கூத்தே. 47

தேத்தந்த கொன்றையான் றெய்வத் தமிழ்க்கூடல்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றெமைவிட்
டேகவி மானமுனக் கேன். 48

ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுவுமொர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
றேனின்ற வைத்தருச் சிந்தா மணியொடத் தேனுவுமே. 49

தேன முதசி லிக்க ரும்புகொ
லிக்க ரும்பொரு வேம்பெனுந்
தேம்பு யத்தணி வேம்பி னேக்கனி
தீங்க ரும்பெனு மிவ்வணம்
மான முதம ழைக்க ணங்கையு
மாறி யாடத் தொடங்குமான்
மாறி யாடுநின் வல்ல பந்தொழ
வந்த பேர்க்கும்வ ருங்கொலோ
கான முதசு ருப்பு நாண்கொள்
கருப்பு வில்லியைக் காய்ந்தநாட்
கைப்ப தாகைக வர்ந்து கொண்டதொர்
காட்சி யென்னவெ டுப்பதோர்
மீன முதவ டற்ப தாகைவி
டைப்ப தாகை யுடன்கொளும்
வீர சுந்தர மாற மாறடும்
வெள்ளி யம்பல வாணனே. 50

Koviloor Digital Library

வாணிலாப் பரப்பு மகுடகோ டீர
மறிபுனற் கங்கைநங் கைக்கும்
வையமீன் றளித்த மரகதக் கொடிக்குன்
வாமபா கமும்வழங் கிணையாற்
பூணுலாங் களபப் புணர்முலை யிவட்குன்
பொற்புயம் வழங்கலை யெமர்போற்
பொதுவினின் முய்க்கு நடுவின்மை யிடையே
புகுந்தவா றென்கொலோ புகலாய்
தூணுலாம் பகம்பொற் றேரண முகப்பிற்
சூளிகை நெற்றிநின் றிறங்குஞ்
சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கம்
தோன்றலு மூன்றுநா ணிரம்பா
நீணிலா வெனக்கொண் டணங்கனூர் வலைக்கை
நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கு
நீடுநான் மாடக் கூடலிற் பொலியு
நிமலனே மதுரைநா யகனே. 51

மது கலர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
ததிலொர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
கறிவு நாணுநம் மாவியு மேகொலாம்
பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பிணப்
புதிய துந்நம் முயிர்ப்பலி யேயன்றே
பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே. 52

கிள்ளைவிடு தூது

புழுகுநெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க
ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண்
டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந்ததம்நீ
பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளி யே. 53

பைந்தமிழ்நேர் கூடற் பழியஞ்சி யார்க்கவமே
வந்ததொரு பெண்பழியென் வாழ்த்துகேன்—அந்தோ
அடியிடுமுன் னீயர்க் கடுத்தவா கெட்டேன்
கொடியிடமாப் போந்த குறை. 54

காலம். மடக்கு

குறுமுகைவெண் டனவளவின் மணந்துவக்குங் காலங்
கொழுநரொடு மிளமகளிர் மணந்து வக்குங்கால
மறுகுதொறு நின்றமர்க ளுருத்திகழுங் காலம்
வரிசிலைகொண் டுருவியு முருத்திகழுங் காலஞ்

Koviloor Digital Library

சிறுமதிநம் பெருமதியி னுகப்படருங் காலந்
தென்றலிளங் கன்றுமுயி ருகப்படருங் காலம்
நிறையினெடு நாணினெடு மகன்றிரியுங் காலம்
நேசர்மது ரேசர்வரை யகன்றிரியுங் காலம். 55

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே—யிம்முறையு
மெம்மேனி காமநோய்க் கிடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொ றீங்கு 56

சித்து

குருப்பை வெற்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாங்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினே
மிருந்த வீடும் வறும்பாழ தாமவர்க்
கெருத்துக் கொட்டிலும் பொன்வேய்ந் திடச்செய்தே
மருந்த னந்நமக் கோதன மேயப்பா
ஆட கத்துமற் முசையவ் வையர்க்கே. 57

மடக்கு

ஐய மணிக்கல மென்பணியே
யன்பணி யக்கொள்வ தென்பணியே
மெய்யணி சாந்தமும் வெண்பலியே
வேண்டுவ துங்கொள வெண்பலியே
எய்ய வெடுப்பதோர் செம்மலேயே
யேந்தி யெடுப்பதோர் செம்மலேயே
வையகம் வாய்த்த வளம்பதியே
வாழ்வது கூடல் வளம்பதியே. 58

ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாட
லெழுதா மறையோடு மிசைமுத் தமிழ்பாடப்
பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும்
பெருமான் முன்சென்முள் சிறுமா னென்சொல்கேன்
பாடா ளம்மனையு நாடா ளெம்மனையும்
பயிலா டண்டலையு முயலாள் வண்டலையு
மாடாண் மஞ்சனமுந் தேடா ளஞ்சனமு
மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே. 59

இன்னியந் துவைப்பச் சங்க மேங்கிடச் செழிய ரீன்ற
சுன்னியை மணந்தே யன்றே கன்னிநா டெய்தப் பெற்றூர்
மின்னிவண் முயக்கும் பெற்றூல் வெறுக்கைமற் றிதன்மே லுண்டோ
கொன்னியல் குமரி மாடக் கூடலம் பதியு ளார்க்கே. 60

Koviloor Digital Library

கார்

கேளார் புரஞ்செற்ற வின்னிதோயக் கிளர்ந்துற்றதோர்
தோளாளர் கூடற் பதிக்கேகு முகில் காள் சொலக்கேண்மினே
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த வென்சொன் மறுத்
தேகன்மின்
ருளாண்மை யன்றே தஞ்சப்பட்ட வூரிற் றனித்தேகலே. 61

இடைச்சியார்

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற
ரெண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சியே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத் தோயீர் வாளா
மண்டுமென் னகத்தி லென்னீர் மத்திட்டு மதிக்கின் றீரே. 62

ஈர மதிக்கும் மிளந்தெல் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்காலு மேகெடுங் கோன்மைமுற்றுந்
நீரம திக்குஞ்செங் கோன்மையென் ஞஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே. 63

கரிய கண்டங் கரந்தவோர்
நிருபர் கூடலி னெஞ்சிரே
உருவ மும்பெண் ணுருக்கொலாம்
அருவ மென்பதென் னுவியே. 64

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசாந்தம்
நீவா நின்ருய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுந்தனு வுங்கூ வினிராதான்
மூவா முதலார் மதுரையி தன்ரே மொழிவாயே. 65

வலிச்சியார்

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலிவானர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு முங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே. 66

விற்கரும்பே யொன்றி துகேண் மென்கரும்பே யன்னர்தஞ்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமால்—நற்கரும்பை
ஆளார் கடம்பவனத் தையருமற் றென்னியும்
வாளா வலர்தூற்று வாய் 67

வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் முயென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேள்

Koviloor Digital Library

பால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே. 68

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணிணைட்
கிட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சோற்றையே. 69

குங்குமச்சே றுடுங் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூட—லங்கயற்க
ணம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தே மஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி. 70

மடல்

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக்
கெழிலார் களனுங் களனு வருளா
நன்னீ ரமுதக் கடலா கியுளார்
நரியைப் பரியாக் கிநடத் தினரா
லந்நீர் மையின்மிக் கென்னீர் மையெனு
வடன்மா வடன்மா வரமா றுசெய
மைந்நீ ரளகத் திளமா னேயன்னீர்
வருவேன் மதுரைத் திருவீ தியிலே. 71

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத்
திகிரிப் படையுய்த் தவர்கூ டற்
றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத்
தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர்
புருவச் சிலையிற் குழைபட் டுருவப்
பொருகட் கணைதொட் டமராடுஞ்
செருவிற் றெலைவுற் றவரைக் கொலுநற்
சிலைசித் தசர்கைச் சிலைதானே. 72

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேன்
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்நின் மருங்குல்சுற்று
மிலைசிலை யாக்கொண் டிளமானே யெய்திடு மிங்கிவர்பூங்
குலைசிலை யாக்கொண் டவர்போலு மாற்செம்மல் கொள்கை
நன்றே. 73

Koviloor Digital Library

பாண்

கொங்குரை யாற்றி லிட்டுக் குளத்திலிற் றேட நீடு
மங்குறேய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாணு
வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே மகில்நர்தம் காழ்க்கை தானே. 74

கிள்ளைவிடு தூது

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழு
மூழி முதல்வர் குருவழிந்தேன்—ஆழியான்
சேய்தொடுத்த வம்போ நிரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை. 75

மறம்

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்ரு
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தா
ருனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பாள்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னுய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்துந்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையிலெடுஞ் சென்றே. 76

குறம்

செல்லிட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா
தேவிக் கன்று
சொல்லிட்ட குறமகள்யான் றும்மலுநல் வரத்தேகாண்
சுளகி லம்மை
நெல்லிட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொருளதுறித்
திலக்கச் சார்க்கும்
வல்லிட்ட குறியினெடும் வனையிட்ட குறியுளதோர்
வடிவு தானே. 77

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவப வரையினர் திருமுனி தொருவர்வி ளம்பாரோ
குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவுகொ ழுந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள்ப டும்பாடே. 78

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பனைப்புயமே
வேட்டுக் குருகுமெய்ந்நாணும்விட்டாள்வண்டுமென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே 79

Koviloor Digital Library

மேகவிடு தூது

ஏமவெற் பென்று கயி லாயவெற்பென் றுமல
யாசலத் தென்று முறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர்
தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி
சாரலிற் றுஞ்சு முகில்காண்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிர் முஞ்சுமுயிர்
வாய்மடுத் துண்டொழிவதே. 80

சம்பிரதம்

மட்டறுக டற்புவிய னேத்துமொரி மைப்பினின்
மறைத்துடன்வி டுத்தி டுவன்மற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவ
னித்தனையும் வித்தை யறிவாற்
றுட்டமத னேப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குண மெட்டி னெடுமா
சிட்டர்கடு தித்திடும கத்தும னேத்துமொரு
செப்பினு ளடக்கி டுவனே. 81

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
எடுத்த பதஞ்சலியா ரேனுந்—தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனூர்
சிறிக் குனித்தார் சிலை. 82

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ
சிவவாவி யொன்று முளதோ
வலையோ வறிந்திலமிம் மதனுண்மை யென்புகல்வ
திதுவே தவம்பி றிதெனு
முலையே யணிந்தமுகிழ் நகையீரோர் பெண்கொடியினை
முலையோடு முன்கை வளையாள்
மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே. 83

உருவெளிப்பாடு

வரும்புண்ட ரீக மிரண்டாலொர்கல்லுமென்வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே. 84

Koviloor Digital Library

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர்நுங்
கடுக்கைக் காட்டின்
மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து மூண்டெழுமான்
மதித்தி கெட்டேன்
செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற்
செங்கை யிட்டு
மெருவிட்டு மூட்டிடநீர் விறகிட்டு மூட்டியவா
வென்சொல் கேனே. 85

என்போ டுள்ளமே நெக்குரு க்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ
தன்போல் காமன் சாப முடித்தாற் முழ்வுண்டே
முன்போர் காமன் சாப மனத்து முடித்தாய்க்கே. 86

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா னுரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனல் மூழ்கிப் பதும பீடத்

5. தூற்றமி ருமு முலப்பில் பஃறவம்
வீற்றுவிற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்

10. சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றெவதின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்

15. கிருபெருங் குரவரி னெருபழி சுமந்த
புன்றெழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
அன்றருள் சுரந்த தொன்றே சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
எளியார்க் கெளியமற் றென்பது குறித்தே. 87

குறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றே யாற்றுச்
சிறுதுயிலும் பெருமூச்சுங் கண்டுமிரங் கலையாற்
றெறுமறலி நீயெயித் தென்னி லாவு

Koviloor Digital Library

மறியுநெடும் பொசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா லிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனே மதுரேசர் மீலச்சு
நாகிள வெண் டிங்களென நவில்கின் றுரே. 88

நவ்வியங்கண் மானுமானு மினிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங் கறுத்துளார்
கைவ்விளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
கொவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகை நீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவ்விரிந்த வல்குலீர்நும் மன்னை மார்கள் சங்கையிற்
படிலவர்க்கு ளீணினீவிர் பரிகரித்தல் பாவமே. 89

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற்
பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமையடைதல்
கணக்கே யன்றே
மாமிக்குக் கடலேழும் வழங்கினீ ரொருவேலை
மகனுக் கீந்து
பூமிக்குட் கடலேவறி தாக்கினீர் பவக்கடலும்
போக்கி னீரே. 90

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்பொடு நெட்டுயிர்ப்பு
நெடுங்கண் ணீரிற்
பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுயிரும்
பெற்று ளன்றே
காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர்நறை
கமழ்பூங் கொன்றைத்
தாரோடு மனஞ்செல்லத் தனையோடுந் தான்செல்லாத்
தமிய டானே. 91

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்று
டடாதகா தேவியென் றுருபோர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனு னதுவுங்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்

Koviloor Digital Library

பமரம்யாழ் முழற்ற நறவுகொப் பளிக்குப்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பாவிலா முன்றிற் றூறிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே. 92

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந்
தளித்நி ரொருவற் கதுநிற்கத்
தொடுக்குங் கணைவே டனக்குலவாத்
தூணி கொடுத்நீர் போலுமா
லெடுக்குங் கணையைத் தெய்தகணை
யெண்ணத் தொலையா தென்செய்கேன்
நிடுக்கங் கொளமால் சிலைமனைச்
சினத்நீர் கடம்ப வனத்நிரே. 93

கடமுடையு நறுநெய்க்குண் முழுகியெழு வதையொத்த
கரடமத கரிபெற்றெர் பிடியேபோன்
மடவநடை பயில்பச்சை மயிலியொரு புறம்வைத்த
மதுரையழ கியசொக்கர் வரைவேலோய்
நடையுமெழு துவைநிற்கு நிலையுமெழு துவைசொற்கு
ணலமுமெழு துவைசித்ர ரதிபோல்வா
விடையுமெழு துவைமுற்று மிலதொர்பொரு ளாயுமொக்க
வெழுதிலெவ ருனையொத்த பெயர்தாமே. 94

மெதகைய பலகலிபோர்த் தறம்வளருந் தமிழ்கூடல்
விகிர்த கேண்மோ
வேதமிவின் நிருவுருவொன் நீருருவாய் நின்றதினு
மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப்புயல்வண்ணத்தொருவனிரு
பூவை மார்க்குக்
காதலனுய் மற்றுலக்கோர் காதலியாய் நிற்பதொரு
காட்சி தானே. 95

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்தத்
தாண்ட வஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக. 96

Koviloor Digital Library

கார் காலங் கண்டு வருந்திய தலைவன் பாகனொடு கூறியது

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன வேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே. 97

இரங்கல்

சவராசி தங்கு கணேயேவு மொய்ம்பர் சரணர விந்தமிசையே
மலராகி டந்த நயனர விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே. 98

தேன்வழங்கு கடுக்கையார்கரு மான்வழங்கு முடுக்கையார்
திருவிருந்த விடத்தினரருள் கருவி ருந்தந டத்தினர்
மானடங்கிய வங்கையார்சடைக் கானடங்கிய கங்கையார்
வைகை யொன்றிய கூடலா ரிவள் செய்கையொன்றையு
[நாடலார்.

கானவேயிசை கொல்லுமாலுற வானவாய்வசை சொல்லுமாற்
கன்றியன்றி லிரங்குமாலுயிர் தின்றுதென் றனெருங்குமாற்
றீநிலாவனல் சிந்துமாற்கொல வேனிலான்மெல முந்துமாற்
றினமிடைந்திடை நொந்தபோன்மகண் மனமிடைந்த துணர்ந்
[துமே. 99

ஊர்

உடையதொர் பெண்கொடி திருமுக மண்டல
மொழுகு பெருங்கருணைக்
கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள
தடவுணை டும்பதியாம்
புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்கலை
புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலை யும்பொலி
மதுரைவ ளம்பதியே. 100

வள்ளைவாய் கிறித்துக் குமிழ்மறித் தமர்த்த
மதரரிக் கண்ணியு நீயு
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
மடித்தலத் திருத்திமுத் தாடி
உள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்தாங்
குகந்தனி ரிருத்திரா லுலக
மொருங்குவாய்த் தீருக் கொருதனிக் காம
முற்றுவா வெண்கொலோ வுரையாய்
வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம்
வெஞ்சுடர்க் கடவுளுங் கிடைத்து
வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட
மீக்கொளுஉத் தாக்கணங் கனையார்

Koviloor Digital Library

கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட
காப்பென வேப்பலர் மிலைச்சுங்
கைதவக் களிறே செய்தவக் கூடற்
கண்ணுதற் கடவுண்மா மணியே. 101

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னெடு 5

மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரேழாழிச் சிர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலே பெயரா நிலத்தே ரூர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங் 10

கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழுமலிக் கொலைமதக் கவிற்றெடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலித்தனர் பற்றத் 15

திரியுமற் றெம்மைத் திச்சிறை படுக்கெனப்
பரிதிவே லுழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்முறை வாரி பெயும் பெய லல்ல
நெய்பா றயிர்முதற் பல்பெய றலிஇப் 20

பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட
லிருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னெடும் பொலிந்தோய் 25

துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
லின்பெறிந் தன்மையை நிகழ்த்துதும் யாமென 30

மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
இனையநின் றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின் 35

வாழியெம் பெருமதின் றகவே
வாழியெம் மனனு மனிதா வும்மே. 102

Koviloor Digital Library

அபிராமி பட்டர்

அபிராமி அந்தாதி என்னும் அரியநூலைப் பாடியவர் அபிராமி பட்டர் என்பவர் ஆவார். இவர், சோழ நாட்டிலுள்ள, மாயூரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் செல்லும் வழியிலுள்ள திருக்கடவூர் என்ற ஊரினர். இவர். அந்தணர் மரபில் கி. பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் (சரபோஜி மன்னர் காலத்தில்) தோன்றியவர். இவர், அபிராமி அந்தாதி என்னும் நூலைத்தவிர, அம்பிகைமீது கீர்த்தனம் ஒன்றும், பதிகம் ஒன்றும் பாடியிருப்பதாகத் தெரியவருகிறது.

முன் பாடலினது இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ அடுத்துவரும் பாடலின் முதலாக வருமாறு அமைத்துப் பாடப் படுவதற்கு அந்தாதி என்று பெயர். அந்தாதி என்னும் நூல்வகை நூறு பாடல்களைக் கொண்டிலங்கும்.

அபிராமி அந்தாதி என்னும் இந்நூல், தஞ்சைமாவட்டத்திலுள்ள திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அபிராமி அம்மையின் மீது பாடப்பட்டது.

101 பாடல்களைக் கொண்ட இந்நூல், உமையம்மையாரின் பெருமைகளையும், அவ்வம்மையை வணங்குவதால் எய்தும் நன்மைகளையும் சுவைபட எடுத்துக் கூறுகின்றது.

அபிராமி அந்தாதி

கள்ளவாரணப் பிள்ளையார் காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்த னேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமிஅத் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 1

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணுத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாயமனி தரையே. 3

Koviloor Digital Library

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடையேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு)அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்எண் சென்னியதே 5

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தை யுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே 6

தடியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கடியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மடியுறு வேணிமகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துடியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னுள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே. 8

கருத்தவ எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அமும் பிள்ளோக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமரையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யே இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே, 10

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மானவடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணர விந்தம் தவளநிறக்
காவந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து)உன் நாமம் கரிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏ(து) என்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே. 12

Koviloor Digital Library

பூத்தவ ளேபுவ னம்பதி னுன்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின்கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றேர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றே
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தெளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு)அள வான(து) அதிசயமே. 16

அதிசயமான வடி(வு)உடை யான்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றேவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணசல மங்கலியே. 20

மங்கலி செங்கல சம்முலி யாள்மலி யாள்வருண்ச்
சங்கலி கசங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலி தங்கும் புரிசடை யோன்புடை யாளஉடையாள்
பிங்கலி நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

Koviloor Digital Library

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து) இங்(கு)இனிப்பிற வாமல்வந்(து)ஆண்டு
கொள்ளே. 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து) அன்பர் கூட்டந்
தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவினைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே நிரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இவி உன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் நிரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங் கேமணம் நாறும்நின் தாள் இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைகளல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்(து)
அல்லவென்கை
நன்றே உனக்(கு)இவி நான்என் செயினும் நடுக்கடலுள்

Koviloor Digital Library

சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங் (கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர் வேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்டு வுருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தெஞ்நின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எஞ்நடுங்க
அழைக்கும் பொழுதுவர்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தர்
எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து) உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கும் வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பகவின் மண்ம்நாறும் சிறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம் செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும்உன்றன்
அருளே(து) அறிகின்றி லேன் அம்புயாதத்(து) அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தா மரைகள் உண்(டு); அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு. மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான் பங்கில் வாள்நுதலே .39

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திரைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்

Koviloor Digital Library

காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்குஎண்ணிய எண்ணம் அன்றே? முன்செய் புண்ணியமே. 40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து; தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பவிமொழி வேதப் பரிபுரையே 42

பரிபுரச் சிறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
நிரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீயநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சகக் குவிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. 43

தவளே இவள்எங்கள் சங்கர னுர்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயிளன் ஆகையினுல்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இவியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
செய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றுன்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்பனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
எழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடத்து சுடர்கின்றதே 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பிணைமனப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திலைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வலைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே 49

Koviloor Digital Library

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
ருயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமலை யாள்அடித் தாமரைக் (கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடையார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யப்பட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
சொல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னு யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னுள் அகமமிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னுய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னு(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவ(து) ஒன்றிலையே. 55

ஒன்றுய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றுள் அணைத்தையும் நீங்கிநிற் பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றுது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்று லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே. 57

அருணம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனச்
கருணம் புயமும் வதனும் புயமும் கராம்புயமும்
சரணம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
செஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சாரும் இச்(கு)அலர் ஆகநின் ருய் அறியார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடியார் அடி யார்பெற்ற பாலரையே. 59

Koviloor Digital Library

பாலினும் சொல்இவி யாய்பவி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் ரேன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் ரேஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையும் இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மனோமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானலர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் வமய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவிம் காட்டின்முன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டுத் தறிகுறுக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் கனமுமே. 64

கனமும் வானும் புவனமும் கானவிற் காமன் அங்கம்
தனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் ரேவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூரெலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சிரடிக்கே
சாரும் தவமுடையார் படை யாத தனமில்லையே 68

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே. 69

Koviloor Digital Library

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் ரேன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி: மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்(கு) என்குறையே. 71

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங்கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும்பொழு(து) எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்ரே டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல்லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான்ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி யென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

Koviloor Digital Library

கூட்டிய வாளன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாளன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினுல்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) உன(து) என்றிருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என் கண்நீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண் ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிட யாளை இங்(கு) என்னை இனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
நீர்க்கும் நிறிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் கும்முலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேய வானவர் தேடநின்ற
காலியும் சூடகக் கையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநிலகண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொழி பாகம்கொண் டாலும் பராபரையே. 87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னைக்கத்
துறக்கும் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

Koviloor Digital Library

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லேவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலே மருந்தா னதைநல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின் அனே யாளே விரிசடையோன்
புல்லிய மென்முலே பொன்அனே யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதியங் கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலேமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலேகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றுல்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளேகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லேஉனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைக்கும்
யாமள வல்லியை ஏதம் இலாளே எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னேத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரள் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் (யுராரி) முராரி பொதிமுனி
காதிப் பொருபடைக் கத்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலேயே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த நீயும் தலேவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யாருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே. 99

Koviloor Digital Library

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கை வல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருக்கண்ணும் நெஞ்சில்எப் போதும்
உதிக்கின்றவே. 100

நூல் பயன்

ஆத்தாளே எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளே மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளே ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளே முக்கண்ணியைத்தொழு வார்க்(கு) ஒரு தீங்கில்லையே.